T-LN-275

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

அழகிய மணவாளன் விஷயமான

ஆழ்வார்களின் அருளிச்செயல்

✻

சென்னை ஸ்ரீ வைஷ்ணவ மகா சங்கத்தின்
வெள்ளி விழாக் கொண்டாட்டத்தின்போது
ஸ்ரீ வைஷ்ணவ மாதர் சங்கத்தார் மகிழ்ந்தளித்த
அன்பளிப்பு

✻

தொகுத்துப் பொருளெழுதியவர்:
பண்டிதை S. கிருஷ்ணவேணியம்மாள்,
சென்னைத் [illegible]மைத் தமிழாசிரியை,
வெ[illegible]ப்பள்ளி, திருவல்லிக்கேணி.
[illegible], [illegible]மாதர் சங்கம், சென்னை.

R.B.L.

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

அழகிய மணவாளன் விஷயமான

ஆழ்வார்களின் அருளிச்செயல்

சென்னை ஸ்ரீ வைஷ்ணவ மகா சங்கத்தின்
வெள்ளி விழாக் கொண்டாட்டத்தின்போது
ஸ்ரீ வைஷ்ணவ மாதர் சங்கத்தார் மகிழ்ந்தளித்த
அன்பளிப்பு

தொகுத்துப் பொருளெழுதியவர் :
பண்டிதை S. கிருஷ்ணவேணியம்மாள்,
முன்னைத் தலைமைத் தமிழாசிரியை,
வெல்லிங்டன் மாதர் உயர்நிலைப்பள்ளி, திருவல்லிக்கேணி.
தலைவி, ஸ்ரீ வைஷ்ணவ மாதர் சங்கம், சென்னை.

பதிப்புரிமை]
1950

The Jupiter Press Ltd., Madras.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

முன்னுரை

ஆழ்வார்களுள் பதின்மரும் ஆண்டாளும் மங்களாசாசனஞ் செய்திருக்கும் பெருமை திருவரங்க நாதர் ஒருவருக்கே உண்டு. இப்பெரியார்களுடைய பாசுரங்கள் நாலாயிரத் திவ்ய பிரபந்தத்தில் ஆங்காங்கே விரவியுள்ளன. அவை யாவற்றையும் ஒருங்கு திரட்டிச் சுருக்கப் பொருளுடன் அச்சிட்டு அன்பர் யாவருக்கும் பயன்படச் செய்ய வேண்டும் என்னும் அவா பண்டிதை S. கிருஷ்ணவேணியம்மாளுக்குப் பன்னாட்களாக உண்டு. அது முற்றுப் பெறுதற்குத் தக்ககாலம் ஏற்பட்டதற்காகப் பெரிதும் மகிழ்வெய்துகின்றோம்!

சென்ற இருபது ஆண்டுகளாக ஆண்டு தோறும் வைணவப் பெண்டிர் மகாநாடு கூடிச் சமயத் தொண்டாற்றுதற்குப் பலவகையானும் உதவி புரிந்துவந்த சென்னை ஸ்ரீ வைஷ்ணவ சங்கத்தினரின் வெள்ளி விழாவின் போது எங்கள் நன்றியறிதலுக்கு அறி குறியாக 'அழகிய மணவாளன் விஷயமான ஆழ்வார்களின் அருளிச் செயல்' என்னும் இத்தொகுப்பு நூலை அச்சிட்டு அன்பளிப்பாகத் தர முன் வந்துள்ளோம். மகா சங்கத்தினர் இச்சிறு காணிக்கையைத் தயைகூர்ந்து ஏற்றுக் கொள்வாராக!

இந்த வெள்ளி விழாவிற்கு முதற்காரணமாயிருந்து பல செயல்களையும் செம்மையுடன் ஆற்றிய திருவாளர் K. வேங்கடசாமி நாயுடு, B.A., B.L., M.L.C. அவர்களுக்கு

யாங்கள் நன்றி செலுத்தப் பெரிதும் கடமைப் பட்டுள்ளோம்.

இந்நூல் அச்சிடுங்காலத்தில் தங்களுக்கிருக்கும் பல வேலைகளுக்கிடையில் சிறிதும் தாமதமின்றி அச்சுத்தாள்களைத் திருத்தம் செய்துதவிய திருவாளர்—**வித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்களுக்கு** நாங்கள் என்ன கைம்மாறு செய்யவல்லோம்!

நாங்கள் செய்ய நினைத்த இக்காரியத்தை விரைவில் முடித்துக் கொடுத்தற்கு தக்க உதவி செய்த **திரு. M. இராமசந்திர முதலியார்** (முடிச்சூர்—அப்பாவு முதலியாரின் பேரர்) அவர்கள் நன்றி என்றும் மறக்கற்பாலதன்று.

எங்களோடு ஒத்துழைத்து இந்நூலை ஏறக்குறையப் பதினைந்து நாட்களுக்குள் முடித்துத்தந்த சென்னை ஜுபிட்டர் அச்சகத்தாருக்கு எங்கள் நன்றி உரித்தாகுக.

சென்னை;
15-12-50.

இங்ஙனம்
வைஷ்ணவ மங்கையர்

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

அழகிய மணவாளன் விஷயமான

ஆழ்வார்களின் அருளிச்செயல்

காப்பு

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயி ரத்தாண்டு
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்டோள் மணிவண் ணா,உன்
செவ்வடி செவ்விதிருக் காப்பு.

வாழ்த்து

அடியோ மோடும்நின் னோடும் பிரிவின்றி
ஆயிரம் பல்லாண்டு,
வடிவாய் நின்வல மார்பினில் வாழ்கின்ற
மங்கையும் பல்லாண்டு,
வடிவார் சோதி வலத்துறை யும்சுட
ராழியும் பல்லாண்டு,
படைபோர் புக்குமு ழங்கும்அப் பாஞ்ச
சன்யமும் பல்லாண்டே. 1

பெரியாழ்வார் அருளிச்செய்த

திருமொழி

கருவுடை மேகங்கள் கண்டா
 லுன்னைக்கண்டா லொக்குங் கண்கள்,
உருவுடை யாயுல கேழு
 முண்டாக வந்துபி றந்தாய்,
திருவுடை யாள்மண வாளா
 திருவரங் கத்தேகி டந்தாய்,
மருவி மணங்கமழ் கின்ற
 மல்லிகைப் பூச்சூட்ட வாராய். 2

பொருள்: உலகேழும் வாழப் பிறந்த திருமகள் மணவாளனே, திருவரங்கத்தில் பள்ளி கொள்பவனே, மணங்கமழும் மல்லிகை மலரைச் சூட்டிக்கொள்ள வாராய்.

சீமாலி கன்னவ னோடு
 தோழமை கொள்ளவும் வல்லாய்,
சாமா றவனைநீ யெண்ணிச்
 சக்கரத் தால்தலை கொண்டாய்,
ஆமா றறியும்பி ரானே
 யணியரங் கத்தேகி டந்தாய்,
ஏமாற்ற மென்னைத் தவிர்த்தா
 யிருவாட்சிப் பூச்சூட்ட வாராய். 3

பொருள்: சீமாலிகனோடு நட்புக்கொண்டு அவன் தலையை அறுத்தவனே, அழகிய திருவரங்கத்தில் பள்ளி கொண்டவனே, இருவாட்சி மலர் சூட்டிக்கொள்ள வாராய்.

வண்டுகளித் திரைக்கும் பொழில்சூழ்
வருபுனற் காவிரித் தென்னரங்கன்,
பண்டவன் செய்த கிரீடையெல்லாம்
பட்டர்பிரான் விட்டுசித்தன் பாடல்,
கொண்டிவை பாடிக் குனிக்கவல்லார்
கோவிந்தன் றன்னடி யார்களாகி,
எண்டிசைக் கும்விளக் காகிநிற்பா
ரிணையடி யென்றலை மேலனவே. 4

பொருள்: திருவரங்கப் பெருமானைப்பற்றிப் பெரியாழ்வார் பாடிய பாடல்களைப் பாடி, ஆடி விளக்குப்போன்று ஒளிரும் அடியவர்களது திருவடி என் தலைமேல் இருக்கத்தக்கவை.

கன்னிநன் மாமதிள் சூழ்தரு பூம்பொழிற்
காவிரித் தென்னரங்கம்,
மன்னிய சீர்மதுசூதனா கேசவா
பாவியேன் வாழ்வுகந்து,
உன்னை யிளங்கன்று மேய்க்கச் சிறுகாலே
யூட்டி யொருப்படுத்தேன்,
என்னில் மனம்வலி யாளொரு பெண்ணில்லை
யென்குட்டனேமுத்தந்தா. 5

பொருள்: திருவரங்கத்தில் பொருந்திய கண்ணபிரானே, உன்னை விடியற்காலையிலேயே இளங்கன்றுகள் பின் போக்கிப் பொறுத்திருந்தேன். என்னிலும் கன்னெஞ்சுடையார் யாவர்? என் குழந்தாய், எனக்கொரு முத்தம் கொடு.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

நான்காம் பத்து எட்டாம் திருமொழி

மாதவத்தோன் புத்திரன்போய்
மறிகடல்வாய் மாண்டானை,
ஓதுவித்த தக்கணையா
வுருவுருவே கொடுத்தானூர்,
தோதவத்தித் தூய்மறையோர்
துறைபடியத் துளும்பிஎங்கும்,
போதில்வைத்த தேன்சொரியும்
புனலரங்கம் என்பதுவே. 6

பொருள்: கடலில் மாண்ட சாந்தீபியினது புதல்வனை மீட்டுக் கொடுத்த எம்பெருமானுடைய திருப்பதி, ஸ்ரீ வைஷ்ணவர்கள் நீராடுவதால், காவிரியிலுள்ள தாமரைகள் தேன் சொரியும் திருவரங்கமாகும்.

பிறப்பகத்தே மாண்டொழிந்த
பிள்ளைகளை நால்வரையும்,
இறைப்பொழுதிற் கொணர்ந்துகொடுத்
தொருப்படுத்த வுறைப்பனூர்
மறைப்பெருந்தீ வளர்த்திருப்பார்,
வருவிருந்தை யளித்திருப்பார்,
சிறப்புடைய மறையவர்வாழ்
திருவரங்க மென்பதுவே. 7

பொருள்: பிறந்த போதே இறந்தொழிந்த வைதிகர் புதல்வர் நால்வரையும் ஸ்ரீவைகுண்டத்திலிருந்து மீட்டுக் கொடுத்தவன் ஊர், ஸ்ரீ வைஷ்ணவர்களை உபசரிக்கும் சீரியர் வாழும் திருவரங்கமாகும்.

மருமகன்றன் சந்ததியை
யுயிர்மீட்டு மைத்துனன்மார்,
உருமகத்தே வீழாமே
குருமுகமாய்க் காத்தானூர்,

திருமுகமாய்ச் செங்கமலந்
திருநிறமாய்க் கருங்குவளை
பொருமுகமாய் நின்றலரும்
புனலரங்க மென்பதுவே. 8

பொருள்: பரீட்சித்தைக் கர்ப்பத்தில் காத்து, பாண்டவர்கள் பாரதயுத்தத்தில் அழியாதவாறு ஆசாரியனாய் நல்லுபதேசங்களைச் செய்து இரட்சித்த கண்ணபிரானது திருப்பதி, தாமரை முதலிய மலர்கள் பூத்தொளிரும் நீர் வளமுடைய அரங்கமாகும்.

கூன்றொழுத்தை சிதகுரைப்பக்
கொடியவள்வாய்க் கடியசொற்கேட்டு,
ஈன்றெடுத்த தாயரையு
மிராச்சியமு மாங்கொழிய,
கான்றொடுத்த நெறிபோகிக்
கண்டகரைக் களைந்தானூர்,
தேன்றொடுத்த மலர்ச்சோலைத்
திருவரங்க மென்பதுவே. 9

பொருள்: கூனியினால் தூண்டப்பட்ட கைகேயினுடைய கொடிய சொல்லால், ஈன்றாளையும் அரச செல்வத்தையும் விட்டுக் காடு சென்று அரக்கரை ஒழித்தவன் ஊர், அரங்கமென்பதாகும்.

பெருவரங்க ளவைபற்றிப்
பிழக்குடைய விராவணனை,
உருவரங்கப் பொருதழித்திவ்
வுலகினைக்கண் பெறுத்தானூர்,
குரவரும்பக் கோங்கலரக்
குயில்கூவுங் குளிர் பொழில்சூழ்,
திருவரங்க மென்பதுவே
யென்றிருமால் சேர்விடமே. 10

பொருள்: மலரரும்பும் மரங்களும், குயில்களும் நிறைந்த சோலைகளையுடைய அரங்கமானது, நல்லவர்க்குத் தீமை செய்த இராவணனை அழித்து உலகைக் காத்தவனும், ஸ்ரீயப்பதியுமான எம்பெருமான் சேருமிடமாகும்.

கீழுலகி லசுரர்களைக்
கிழங்கிருந்து கிளராமே,
ஆழிவிடுத் தவருடைய
கருவழித்த வழிப்பனூர்,
தாழைமட லூடுரிஞ்சித்
தவளவண்ணப் பொடியணிந்து,
யாழினிசை வண்டினங்க
ளாளம்வைக்கு மரங்கமே. 11

பொருள்: பாதாளலோகத்திலிருந்த அசுரர்களைத் திருவாழியாழ்வானைக் கொண்டு வேரோடு அழித்தவன் ஊர், இனிய ஓசையையுடைய வண்டுகள், தாழையின் மகரந்தம் உடம்பில் படிய, அக்களிப்பினால் பாடும் திருவரங்கமாகும்.

கொழுப்புடைய செழுங்குருதி
குழித்தெறிய கொழித்திழிந்து
பிழக்குடைய வசுரர்களைப்
பிணம்படுத்த பெருமானூர்,
தழுப்பரிய சந்தனங்கள்
தடவரைவா யீர்த்துக் கொண்டு,
செழிப்புடைய காவிரிவந்
தடிதொழுசீ ரரங்கமே. 12

பொருள்: செங்குருதி வெள்ளம் பெருகுமாறு மக்களை இம்சிக்கும் தீமையுடைய அரக்கர்களைப் பிணமாக்கிய பெருமான் வதியும் திருப்பதி, சந்தன மரங்களை இழுத்துச் செல்லும் காவிரி, அவனது திருவடிகளைத் தொழும் சீர்மையுடைய அரங்கமாகும்.

வல்லெயிற்றுக் கேழலுமாய்
வாளெயிற்றுச் சீயமுமாய்,
எல்லையில்லாத் தரணியையு
மவுணனையு மிடந்தானூர்
எல்லியம்போ திருஞ்சிறைவண்
டெம்பெருமான் குணம்பாடி,
மல்லிகைவெண் சங்கூதும்
மதிளரங்க மென்பதுவே. 13

பொருள்: வலிய கொம்பையும் ஒளிரும் பற்களையுமுடைய வராகமாகவும் நரசிம்மமாகவும் தோன்றி, பூமியையும் இரணியனையும் கீண்ட எம்பெருமான் இருக்கும் இடம், வண்டுகள் அவனுடைய குணங்களைப் பாடி மல்லிகையைச் சங்கெனக் கொண்டு ஊதும் திருவரங்கமாம்.

குன்றுடு கொழுமுகில்போல்
குவளைகள்போல் குரைகடல்போல்,
நின்றுடு கணமயில்போல்
நிறமுடைய நெடுமாலூர்,
குன்றாடு பொழில்நுழைந்து
கொடியிடையார் முலையணவி,
மன்றாடு தென்றலுலாம்
மதிளரங்க மென்பதுவே. 14

பொருள்: நீர் நிறைந்த மேகம், கருநெய்தல், கடல், மயில்களின் திரள் இவற்றைப் போன்ற வடிவழகுடைய எம்பெருமானது ஊர், மலர்கள் பெண்களணிந்த கலவைச் சாந்து ஆகியவற்றின் மணத்துடனே தென்றல், வீசப் பெற்ற மதில் சூழ்ந்த அரங்கமாகும்.

பருவரங்க ளவைபற்றிப்
படையாலித் தெழுந்தானை,
செருவரங்கப் பொருதழித்த
திருவாளன் திருப்பதிமேல்,

திருவரங்கத் தமிழ்மாலை
விட்டுசித்தன் விரித்தன கொண்டு,
இருவரங்க மெரித்தானை
யேத்தவல்லா ரடியோமே. 15

பொருள்: வரங்கள் பல பெற்ற இராவணனை ஒழித்த இலக்குமிநாதன் வதியும் திருவரங்கத்தைப் பற்றிப் பெரியாழ்வார் அருளிச்செய்த இப்பத்துப் பாசுரங்களால், மதுகைடபர்களை அழித்த பெருமானைத் துதிப்பவர்க்கு நாம் அடிமை செய்யக் கடவோம்.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

நான்காம் பத்து ஒன்பதாம் திருமொழி

மலரடியைத் தம்பிக்கு வான்பணயம்
வைத்துப் போய்வானோர் வாழ,
செருவுடைய திசைக்கருமந் திருத்திவந்
துலகாண்ட திருமால் கோயில்,
திருவடிதன் திருவுருவந் திருமங்கை
மலர்க்கண்ணும் காட்டி நின்ற,
உருவுடைய மலர்நீலங் காற்றாட்ட
வோசலிக்கு மொளிய ரங்கமே. 16

பொருள்: பரதனுக்கு ஸ்ரீ பாதுகைகளை அளித்து, தென்திசைப் போரை முடித்து, அயோத்தி வந்தாண்ட திருமாலின் கோவில், அவனுடைய திருமேனி நிறத்தையும், பிராட்டியாரின் திருக்கண்களின் நிறத்தையும் ஒளிரச் செய்யும் கருநீல மலர்கள் அசையும் திருவரங்கமாகும்.

தன்னடியார் திறத்தகத்துத்
தாமரையா ளாகிலுஞ்சி தகுரைக்குமேல்,
என்னடியா ரதுசெய்யார் செய்தாரேல்
நன்றுசெய்தா ரென்பர் போலும்,

மின்னுடைய விபீடணற்கா மதிளிலங்கைத்
திசை நோக்கி மலர்க்கண் வைத்த,
என்னுடைய திருவரங்கற் கன்றியுமற்
றொருவர்க் காளா வாரே? 17

பொருள்: அடியவர்களை ஏற்றுக்கொள்ளுமாறு புருஷகாரம் செய்த பிராட்டியே அவர்களிடம் குற்றங் கூறினும், 'என்னடியார் குற்றங்களைச் செய்யார்; செய்யினும், நன்மைகளையே செய்வர்' என்பவனும், இலங்கையை நோக்கி நிற்பவனுமான என் அரங்கனைத் தவிர, வேறொருவருக்கு ஆட்படுபவர் ஆரேனுமுண்டோ?

கருளுடைய பொழில்மருதுங் கதக்களிறும்
பிலம்பனையும் கடிய மாவும்,
உருளுடைய சகடினையும் மல்லரையு
முடையவிட் டோசை கேட்டான்,
இருளகற்று மெறிகதிரோன் மண்டலத்து
டேற்றிவைத் தேணி வாங்கி
அருள்கொடுத்திட் டடியவரை யாட்கொள்வா
னமருமூ ரணிய ரங்கமே. 18

பொருள்: குவலயாபீடம், கேசி முதலிய கொடியவர்களை அழித்துப் புகழ் பெற்றவனும், அடியவர்களைப் பரமபதத்திற்குக் கொண்டுபோய் அருளுடன் அடிமை கொள்பவனுமான எம்பெருமான் அமர்ந்திருக்கும் இடம் அரங்கமாகும்.

பதினாறு மாயிரவர் தேவிமார்
பணிசெய்ய, துவரை யென்னும்
மதில்நா யகராகி வீற்றிருந்த
மணவாளர் மன்னு கோயில்,
புதுநாண் மலர்க்கமல மெம்பெருமான்
பொன்வயிற்றிற் பூவே போல்வான்,
பொதுநாய கம்பாவித் திறுமாந்து
பொற்சாய்க்கும் புனல ரங்கமே. 19

பொருள்: துவரையிலுள்ள பதினாறாயிரம் தேவிமார் தொண்டு புரிய, அவர்கள் நடுவில் தலைவனாய் வீற்றிருந்த அழகிய மணவாளன் பொருந்திய கோவில், எம்பெருமான் நாபிக் கமலத்தைப் போன்று செருக்குற்று விளங்கும் தாமரைகள் மலர்ந்த நீர்வளமுள்ள திருவரங்கம்.

ஆமையாய்க் கங்கையா யாழ்கடலா
யவனியா யருவ ரைகளாய்,
நான்முகனாய் நான்மறையாய் வேள்வியாய்த்
தக்கணையாய்த் தானு மானான்,
சேமமுடை நாரதனார் சென்றுசென்று
துதித்தி றைஞ்சக் கிடந்தான் கோயில்,
பூமருவிப் புள்ளினங்கள் புள்ளரையன்
புகழ்முதலும் புனல ரங்கமே. 20

பொருள்: ஆமை, நான்முகன், வேதங்கள் முதலியவைகளாய் ஆனவனும், நாரதர் வணங்குமாறு பள்ளி கொள்பவனுமான எம்பெருமானுடைய கோவில், புள்ளினங்கள் அவனுடைய பெரிய திருவடியின் கீர்த்தியைப் பேசும் திருவரங்கமாகும்.

மைத்துனன்மார் காதலியை மயிர்முடிப்பித்
தவர்களையே மன்ன ராக்கி
உத்தரைதன் சிறுவனையு முய்யக்கொண்
டுயிரானா னுறையுங் கோயில்
பத்தர்களும் பகவர்களும் பழமொழிவாய்
முனிவர்களும் பரந்த நாடும்
சித்தர்களுந் தொழுதிறைஞ்சத் திசைவிளக்காய்
நிற்கின்ற திருவ ரங்கமே. 21

பொருள்: துரோபதையினுடைய கூந்தலை முடித்து, பாண்டவரை அரசராக்கி, பரீக்ஷித்தை உயிர்ப்பித்தவனும், உயிர்கட்குத் தலைவனுமான இறைவன் எழுந்தருளியிருக்கும் கோவில், பத்தர் முதலியவர் அஞ்சலி செய்து வணங்கும்படி எல்லாத் திக்குகளுக்கும் விளக்குப் போன்றுள்ள திருவரங்க நகராகும்.

குறட்பிரம சாரியாய் மாவலியைக்
குறும்பதக்கி யரசு வாங்கி,
இறைப்பொழுதிற் பாதாளங் கலவிருக்கை
கொடுத் துகந்த வெம்மான் கோயில்,
எறிப்புடைய மணிவரைமே லிளஞாயி
றெழுந்தாற்போ லரவணை யின்வாய்,
சிறப்புடைய பணங்கள்மிசைச் செழுமணிகள்
விட்டெறிக்குந் திருவ ரங்கமே. 22

பொருள்: வாமனனாய் மஹாபலியினுடைய அரசைக் கவர்ந்து, அவனைப் பாதாளத்தடக்கி, இந்திரன் வேண்டு கோளை முடித்துக் களித்தவன் தங்கும் கோவில், நீலரத்தின மலைமேல் இளஞ்சூரியர்கள் உதித்ததுபோன்று, திருவனந்தாழ் வான் படங்களின்மேல் இரத்தினங்கள் ஒளிரும் அரங்கமாகும்.

உரம்பற்றி யிரணியனை யுகிர்நுதியா
லொள்ளியமார் புறைக்க வூன்றி,
சிரம்பற்றி முடியிடியக் கண்பிதுங்க
வாயலரத் தெழித்தான் கோயில்,
உரம்பெற்ற மலர்க்கமல முலகளந்த
சேவடிபோ லுயர்ந்து காட்ட,
வரம்புற்ற கதிர்ச்செந்நெல் தாள்சாய்த்துத்
தலைவணங்கும் தண்ண ரங்கமே. 23

பொருள்: செருக்குற்ற இரணியாசுரனை தன் நகங்களினால் கீறி அழித்து ஆரவாரித்த பிரான் எழுந்தருளியிருக்கும் கோவில், தாமரைகள், உலகளந்த திருவடியைப்போல நிமிர்ந்து நிற்பதும் செந்நெல், தலை வணங்கி நிற்பதுமான திருவரங்கமாகும்.

தேவுடைய மீனமா யாமையா
யேனமா யரியாய்க் குறளாய்,
மூவுருவி லிராமனாய்க் கண்ணனாய்க்
கற்கியாய் முடிப்பான் கோயில்,

சேவலொடு பெடையன்னம் செங்கமல
மலரேறி யூச லாடி,
பூவணைமேல் துதைந்தெழுசெம் பொடியாடி
விளையாடும் புனல ரங்கமே. 24

பொருள்: ஒளி பொருந்திய மச்சம் முதல் கற்கி ஈருய் உள்ள பத்து அவதாரங்களை எடுத்துப் பகைவரை முடிக்க வல்ல பெருமான் வாழும் கோவில், அன்னப்பேடையும் சேவ லும் செந்தாமரை மலரணைமேல் சேர்ந்திருந்து ஊசலாடி, சிவந்த சுண்ணத்தில் மூழ்கி விளையாடும் திருவரங்கம்.

செருவாளும் புள்ளாளன் மண்ணாளன்
செருச்செய்யும் நாந்தக மென்னும்
ஒருவாளன், மறையாள னோடாத
படையாளன் விழுக்கை யாளன்,
இரவாளன் பகலாள னெனையாள
னேழுலகப் பெரும்புர வாளன்,
திருவாள னினிதாகத் திருக்கண்கள்
வளர்கின்ற திருவரங்கமே. 25

பொருள்: பெரிய திருவடி, லீலா விபூதி, நான்கு வேதங் கள், இரவு, பகல் ஆகியவற்றிற்குத் தலைவனும், நாந்தகம் என் னும் வாள், வீரச் சேனை, ஏழுலகங்கள், பெரிய பிராட்டியார் இவற்றை உடையவனும், எனக்குச் சாமியுமான எம்பெரு மான் உவந்து திருக்கண் வளரும் இடம் அரங்கம்.

கைந்நாகத் திடர்கடிந்த கனலாழிப்
படையுடையான் கருதுங் கோயில்,
தென்னாடும் வடநாடும் தொழநின்ற
திருவரங்கந் திருப்பதி யின்மேல்
மெய்ந்நாவன் மெய்யடியான் விட்டுசித்தன்
விரித்ததமி ழுரைக்க வல்லார்,
எஞ்ஞான்று மெம்பெருமா னிணையடிக்கீ
ழிணைபிரியா திருப்பர் தாமே. 26

பொருள்: கஜேந்திரனுடைய துன்பந் துடைத்தவனும், ஆழிப்படையையுடையவனுமான பெருமான் விரும்பியதும், எந்நாட்டினரும் சேவிக்குமாறு அமைந்ததுமான திருவரங்க விஷயமாய், தூயநாவுடையவரும், பயன் கருதாது தொண்டு புரிபவருமான பெரியாழ்வார் அருளிச் செய்த இத்தமிழ்ப் பாசுரங்களை ஓதவல்லவர், பரமபதநாதனுடைய திருவடியின் கீழ் நித்திய சூரிகளுடன் எந்நாளும் வாழப் பெறுவர்.

நான்காம் பத்து பத்தாம் திருமொழி

துப்புடை யாரை யடைவ தெல்லாம்
சோர்விடத் துத்துணை யாவ ரென்றே,
ஒப்பிலே னாகிலும் நின்ன டைந்தேன்
ஆனைக்கு நீயருள் செய்த மையால்,
எய்ப்பென்னை வந்து நலியும் போதங்
கேதுநா னுன்னை நினைக்க மாட்டேன்,
அப்போதைக் கிப்போதே சொல்லி வைத்தேன்
அரங்கத் தரவணைப் பள்ளி யானே. 27

பொருள்: திருவரங்கத்தில் பள்ளி கொண்டவனே, இந்திரியங்கள் சோரும் இறுதிக் காலத்து அடியேன் உன்னைச் சிறிதும் நினைக்க வல்லேனல்லேன். நாயேன் உனது அருளுக்குப் பாத்திர பூதனல்லாவிடினும், கஜேந்திரனைக் காத்த நீ அடியேனையும் காத்தருள்வாய் என்ற உறுதியோடு உன்னை இப்போதே சரணம் புகுந்து என் குறையை விண்ணப்பித்துக்கொண்டேன்.

சாமிடத் தென்னைக் குறிக்கொள் கண்டாய்
சங்கொடு சக்கர மேந்தினானே!
நாமடித் தென்னை யனேக தண்டஞ்
செய்வதா நிற்பர் நமன்றமர்கள்;

போமிடத் துன்திறத் தெத்தனையும்
புகாவண்ணம் நிற்பதோர் மாயை வல்லை,
ஆமிடத் தேயுன்னைச் சொல்லி வைத்தேன்
அரங்கத் தரவணைப் பள்ளி யானே. 28

பொருள்: சங்கு சக்கரங்களைத் தாங்கியவனே, நமன் தூதுவர் என்னைப் பலவாறு தண்டிக்க இழுத்துச் செல்லுங்கால், உன்னிடம் நெஞ்சு செல்லாதவாறு செய்யும் மாயையுடையவன் நீ. ஆதலால், இப்போதே உன்னைச் சொல்லி வைத்தேன். மரண காலத்தில் அடியேனைத் திருவுள்ளம் பற்றியருள வேண்டும்.

எல்லையில் வாசல் குறுகச் சென்று
வெற்றி நமன்றமர் பற்றும் போது,
நில்லுமி னென்னு முபாய மில்லை
நேமியுஞ் சங்கமு மேந்தி னானே!
சொல்லலாம் போதேயுன் நாம மெல்லாம்
சொல்லினே னென்னைக் குறிக்கொண் டென்றும்,
அல்லற்படாவண்ணம் காக்க வேண்டும்
அரங்கத் தரவணைப் பள்ளி யானே. 29

பொருள்: திருவாழி சங்குகளை ஏந்தி அரங்கத்தில் அரவணையில் பள்ளிகொண்டவனே, இறுதிக் காலத்தில் எமன் தூதுவர் என்னை அடித்துப் பிடிக்குங்கால், அவர்களைத் தடுக்கும் வன்மை எனக்கில்லை. ஆதலால், வாய் விட்டுச் சொல்லக்கூடிய இப்போதே உன் திருநாமங்கள் யாவும் சொல்லினேன். அடியேனை அல்லலுறு வண்ணம் காத்தருள்வாயாக.

ஒற்றை விடைய னும்நான் முகனும்
உன்னை யறியாப் பெருமை யோனே,
முற்ற வுலகெல்லாம் நீயே யாகி
மூன்றெழுத் தாய முதல்வ னேயோ,

அற்றது வாணு ளிவற்கென் றெண்ணி
அஞ்ச நமன்றமர் பற்ற லுற்ற
அற்றைக்கு நீயென்னைக் காக்க வேண்டும்
அரங்கத் தரவணைப் பள்ளி யானே ! 30

பொருள்: சிவபிரானும் நான்முகனும் அறிய முடியாத பெருமையுடையவனே, உலகெல்லாமாய், பிரணவ சொரூபியும் முதல்வனும் ஆன அரங்கநாதனே, நமன் தூதுவர், 'இவனுக்கு ஆயுள் முடிந்தது,' என வந்து பற்றும்போது, நீ அடியேனைக் காக்கவேண்டும்.

பைய ரவினணைப்பாற் கடலுள்
பள்ளி கொள்கின்ற பரம மூர்த்தி,
உய்ய வுலகு படைக்க வேண்டி
உந்தியில் தோன்றி னுய்நான் முகனை,
வைய மனிசரைப் பொய்யென் றெண்ணிக்
காலனையு முடனே படைத்தாய்,
ஐய வினியெனைக் காக்க வேண்டும்
அரங்கத் தரவணைப் பள்ளி யானே ! 31

பொருள்: பாற்கடலிலும், திருவரங்கத்திலும் அரவணை மேல் பள்ளிகொண்ட பரமமூர்த்தியே, உலகை உண்டாக்க நான்முகனைத் தோற்றுவித்து, பொய் வழியில் ஒழுகும் மனிதரைத் தண்டிக்கக் காலனையும் படைத்த என் ஐயனே, இனி என்னைக் காக்க வேண்டும்.

தண்ணன வில்லை நமன்ற மர்கள்
சாலக் கொடுமைகள் செய்யா நிற்பர்,
மண்ணொடு நீரு மெரியுங் காலும்
மற்றுமா காசமு மாகி நின்றாய்,
எண்ணலாம் போதேயுன் னாம மெல்லாம்
எண்ணினே னென்னைக் குறிக்கொண் டென்றும்,
அண்ணலே ! நீயென்னைக் காக்க வேண்டும்
மரங்கத் தரவணைப் பள்ளி யானே ! 32

பொருள்: ஐந்து பூதங்களாயும், மற்றெல்லாப் பொருள் களாயும் நின்ற ஸ்வாமியே, நமன் தமர்கள் இரக்கமற்றுச் செய்யும் கொடிய தண்டனைகளுக்கு ஆளாகாவாறு உன்னுடைய திருநாமங்களையெல்லாம் அனுசந்தித்தேன். ஆதலால், அடியேனைத் திருவுளம் பற்றிக் காக்க வேண்டும்.

செஞ்சொல் மறைப்பொரு ளாகி நின்ற
தேவர்கள் நாயக னேயெம் மானே!
எஞ்சலி லென்னு டையின் னமுதே!
ஏழுல குமுடை யாயென் னப்பா!
வஞ்ச வுருவின் நமன்ற மர்கள்
வலிந்து நலிந்தெனைப் பற்றும் போது,
அஞ்சலென் றெனைக் காக்க வேண்டும்
அரங்கத் தரவணைப் பள்ளி யானே. 33

பொருள்: வேதத்திற்குப் பொருளாய், நித்திய சூரிகளுக்கும் உலகிற்கும் தலைவனாய், எனக்கு அமிர்தம் போன்றவனாய் உள்ள அரங்கனே, வஞ்சனை வாய்ந்த நமன் தூதவர் அடியேனை வலிந்து பற்றும் போது, 'அஞ்ச வேண்டா,' என்று என்னைக் காக்க வேண்டும்.

நானே துமுன் மாயமொன் றறியேன்
நமன்றமர் பற்றி நலிந்திட் டிந்த,
ஊனே புகேயென்று மோதும் போதங்
கேதும்நா னுன்னை நினைக்க மாட்டேன்,
வானேய் வானவர் தங்க ளீசா!
மதுரைப் பிறந்த மாமாய னேயென்
ஆனாய்! நீயென்னைக் காக்க வேண்டும்
அரங்கத் தரவணைப் பள்ளி யானே. 34

பொருள்: நித்திய சூரிகளுக்குத் தலைவனும், வடமதுரையில் அவதரித்தவனும், எனக்கு வசப்பட்டிருப்பவனுமான அரங்கனே, உன் மாயைகளுள் ஒன்றும் அறியமாட்டேன். நமன் தூதவர் என்னை வருத்தி, 'இந்த யாதனாசரீரத்தில் நுழை,'

எனத் துன்புறுத்தும்போது உன்னை நான் நினைக்க மாட்டேன். நீயே என்னைக் காக்க வேண்டும்.

குன்றெடுத் தாநிரை காத்த ஆயா !
கோநிரை மேய்த்த வனேயெம் மானே !
அன்று முதலின் றறுதி யாக
ஆதி யஞ்சோ திமறந் தறியேன்,
நன்றுங் கொடிய நமன்ற மர்கள்
நலிந்து வலிந்தென்னைப் பற்றும் போது,
அன்றங்கு நீயென்னைக் காக்க வேண்டும்
அரங்கத் தரவணைப் பள்ளி யானே. 35

பொருள்: மலையைத் தாங்கி, பசுக்களின் திரளைக் காத்து, அவற்றை மேய்த்த அரங்கனே, உனக்குப் பல்லாண்டு பாடிய அன்று முதல் இன்று வரை உன்னை மறந்தறியேன். யம படர் என்னை வந்து பிடிக்கும்போது நீ என்னைக் காக்கவேண்டும்.

மாய வனை மதுசூ தனனை
மாதவ னைமறை யோர்க ளேத்தும்,
ஆயர்க ளேற்றினை அச்சு தனை
அரங்கத் தரவணைப் பள்ளி யானை,
வேயர்புகழ் வில்லி புத்தூர்மன் விட்டு
சித்தன் சொன்ன மாலை பத்தும்,
தூய மனத்தன ராகி வல்லார்
தூமணி வண்ண னுக் காளர் தாமே. 36

பொருள்: மாயச் செயல்களையுடையவனும், மது என்ப வனை அழித்தவனும், பெரிய பிராட்டியாருக்குத் தலைவனும், அடியாரை நழுவ விடாதவனும், இன்னும் பல பெருமைகள் வாய்ந்தவனுமான எம்பெருமானை நோக்கி, ஸ்ரீ வில்லிபுத் தூருக்குத் தலைவரான பெரியாழ்வார் இயம்பிய இப்பத்துப் பாசுரங்களையும் ஓத வல்லவர் எம்பெருமானுக்கு அடிமை செய்யப் பெறுவர்.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ ஆண்டாள் அருளிச் செய்த

நாச்சியார் திருமொழி

பதினோராந் திருமொழி

தாமுகக்கும் தம்கையில் சங்கமே போலாவோ,
யாமுகக்கும் எங்கையில் சங்கமு மேந்திழையீர்!
தீமுகத்து நாகணைமேல் சேருந் திருவரங்கர்
ஆமுகத்தை நோக்காரால் அம்மனே அம்மனே! 37

பொருள்: ஆபரணங்களை அணிந்த தோழியரே, தாம் விரும்பித் தம் கையில் கொண்டிருக்கும் சங்கத்தைப் போன்றவன்றோ, நாம் விரும்பி நம் கையில் கொண்டிருக்கும் சங்க வளையல்களும்? தாமுகந்ததும் கொடோம். பிறருகந்தும் கொடோம் என்றிருப்பது அழகிய மணவாளருக்கு அழகாமோ! அவர் என் முகத்தை நோக்குகின்றாரில்லையே!

எழிலுடைய வம்மனைமீர்! என்னரங்கத் தின்னமுதர்
குழலழகர் வாயழகர் கண்ணழகர் கொப்பூழில்
எழுகமலப் பூவழகர் எம்மானார் என்னுடைய
கழல்வளையைத் தாமும் கழல்வளையே ஆக்கினரே. 38

பொருள்: வனப்பு வாய்ந்த என் தாய்மாரே, திருக்குழல், வாய், கண் முதலிய அவயவங்கள் அழகுடன் மிளிரும் திருவரங்கத்தின்னமுதர், கழலும் இயல்புடைய என் வளைகளை, பின்னும் மணிக்கட்டு வரையும் கழலுமாறு செய்துவிட்டார்.

பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும்
அங்காதும் சோராமே ஆள்கின்ற எம்பெருமான்
செங்கோ லுடைய திருவரங்கச் செல்வனார்
எங்கோல் வளையால் இடர்தீர்வ ராகாதே. 39

பொருள்: மண்ணுலகையும் விண்ணுலகையும் ஒரு குறையுமின்றி ஆள்பவரும், செங்கோல் தாங்கியவருமான திருவரங்கர், என் வளையைக் கவர்ந்து தமக்குள்ள குறைவை நிறப்பிக் கொள்ள நினைத்தனரோ!

மச்சணி மாட மதிளரங்கர் வாமனனூர்,
பச்சைப் பசுந்தேவர் தாம்பண்டு நீரேற்ற
பிச்சைக் குறையாகி யென்னுடைய பெய்வளைமேல்
இச்சை யுடையரேல் இத்தெருவே போதாரே. 40

பொருள்: உயர் மதில்களால் சூழப்பட்ட அரங்கத்தில் நித்திய வாசம் செய்யும் பரதேவதையானவர், மாவலியினிடம் ஏற்ற பிச்சையில் குறையுடையராய் அக்குறையைத் தீர்த்துக் கொள்ள என் வளைகளில் விருப்புடையாராகில், இத்தெரு வழியே எழுந்தருளாரோ?

பொல்லாக் குறளுருவாய்ப் பொற்கையில் நீரேற்று,
எல்லா வுலகு மளந்துகொண்ட எம்பெருமான்,
நல்லார்கள் வாழும் நளிரரங்க நாகணையான்,
இல்லாதோம் கைப்பொருளு மெய்துவா னொத்துளனே.

பொருள்: குறளுருக்கொண்டு எல்லா உலகையும் அளந்து கொண்டு உண்மை அன்பர் வாழும் அரங்கத்தில் வதிபவன், வேறு துணையற்ற என் கைம்முதலையும் (உடலையும்) பெறவழி தேடுபவனைப்போலிராநின்றான்.

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரிநீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்,
எப்பொருட்கும் நின்றார்க்கும் எய்தாது, நான் மறையின்
சொற்பொருளாய் நின்றாரென் மெய்ப்பொருளும்
கொண்டாரே. 42

பொருள்: குறங்கு வேடுவச்சி முதலிய பத்தர்களுக்கு எளியராயும், எத்துணை அறிவுடையவர்க்கும் அரியராயும், வேதப் பொருளாயும் உள்ள, நீர்வளம் நிறைந்த அரங்கத்தில் பள்ளி

கொண்டவர், யான் பிறந்தபோதே வளைகளைக் கொண்டார். இப்போது என் ஆன்மாவையும் கொண்டார்.

உண்ணு துறங்கா தொலிகடலை யூடறுத்துப்
பெண்ணுக்கை யாப்புண்டு தாமுற்ற பேதெல்லாம்
திண்ணார் மதிள்சூழ் திருவரங்கச் செல்வனார்
எண்ணாதே தம்முடைய நன்மைகளே யெண்ணுவரே. 43

பொருள்: திருவரங்கத்தில் வதியும் அழகிய மணவாளர், சீதாபிராட்டியினிடம்கொண்ட ஆர்வத்தினால், தாம் ஊணுறக்கமின்றிப் பட்ட துன்பங்களையெல்லாம் சிறிதும் எண்ணாமல், இப்போது தம்முடைய நன்மைகளையே எண்ணியிருக்கின்றனர்.

பாசிதூர்த் துக் கிடந்த பார்மகட்குப் பண்டொருநாள்
மாசுடம்பில் நீர்வாரா மானமிலாப் பன்றியாய்த்
தேசுடைய தேவர் திருவரங்கச் செல்வனார்
பேசி யிருப்பனகள் பேர்க்கவும் பேராவே. 44

பொருள்: பூமிபிராட்டியை மேற்கொள்ள, அழுக்குற்ற உடலில் நீர் ஒழுக மிக எளிய வராகவதாரங்கொண்ட பெருமை வாய்ந்த திருவரங்கர், என்னுடன் சேர்ந்திருந்த போது இயம்பிய யாவும் என் மனத்தை விட்டு நீங்குவனவல்ல.

கண்ணாலங் கோடித்துக் கன்னிதனைக் கைபிடிப்பான்,
திண்ணார்ந் திருந்த சிசுபாலன் தேசழிந்து,
அண்ணாந் திருக்கவே யாங்கவளைக் கைபிடித்த,
பெண்ணாளன் பேணுமூர் பேரும ரங்கமே. 45

பொருள்: திருமணத்திற்குச் செய்ய வேண்டுவன செய்து 'உருக்குமிணியை மணஞ் செய்துகொள்ளப் போகிறோம்,' என உறுதியுடன் இருந்த சிசுபாலன் மனமுடைந்து நிற்க, அவளைக் கைக்கொண்ட கண்ணபிரான் விரும்பும் ஊர் திருவரங்கமாகும்.

செம்மை யுடைய திருவரங்கர் தாம்பணித்த
மெய்ம்மைப் பெருவார்த்தை விட்டுசித்தர் கேட்டிருப்பர்,
தம்மை யுகப்பாரைத் தாமுகப்ப ரென்னுஞ்சொல்,
தம்மிடையே பொய்யானல் சாதிப்பா ராரினியே. 46

பொருள்: சீர்மை வாய்ந்த அழகிய மணவாளர் செப்பிய சரமஸ்லோகத்தின் உண்மைப் பொருளை விஷ்ணுசித்தர் கேட்டு, சிறு முயற்சியையுங் கொள்ளாமல், எல்லாம் அவனே என்றிருப்பர். 'தம்மைக் கொண்டாடுபவரைத் தாம் கொண்டாடுவர்,' என்னும் பழமொழி அவரிடமே பொய்யானல், அவரை, 'இங்ஙனம் செய்,' என நியமிப்பவர் யார்?

ஸ்ரீ ஆண்டாள் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

குலசேகராழ்வார் அருளிச்செய்த

பெருமாள் திருமொழி

முதல் திருமொழி

இருளிரியச் சுடர்மணிக ளிமைக்கும் நெற்றி
இனத்துத்தி யணிபணமா யிரங்க ளார்ந்த
அரவரசப் பெருஞ்சோதி அனந்த னென்னும்
அணிவிளங்கும் உயர்வெள்ளை யணையை மேவித்
திருவரங்கப் பெருநகருள் தெண்ணீர்ப் பொன்னி
திரைக்கையால் அடிவருடப் பள்ளி கொள்ளும்
கருமணியைக் கோமளத்தைக் கண்டு கொண்டென்
கண்ணிணைகள் என்றுகொலோ களிக்கு நாளே. 47

பொருள்: ஒளி வீசும் மணிகள் விளங்குகின்ற மிக்க தேஜஸையுடைய திருவனந்தாழ்வான் படுக்கையில்பொருந்திக் காவிரியின் அலைகள் திருவடிகளை வருடத் திருக்கண் வளரும் நீலமணி போன்ற பெரிய பெருமாளைச் சேவித்து என் கண்கள் ஆனந்தமடைவது எந்நாளோ!

வாயோரீ ரைஞ்ஞூறு துதங்க ளார்ந்த
வளையுடம்பி னழல்நாகம் உமிழ்ந்த செந்தீ
வீயாத மலர்ச்சென்னி விதான மேபோல்
மேன்மேலு மிகவெங்கும் பரந்த தன்கீழ்
காயாம்பூ மலர்ப்பிறத்த லன்ன மாலைக்
கடியரங்கத் தரவணையில் பள்ளி கொள்ளும்
மாயோனை, மணத்தூணே பற்றி நின்றென்
வாயார என்றுகொலோ வாழ்த்து நாளே. 48

பொருள்: எம்பெருமானை ஆயிரம்வாய்களினால் வாழ்த்து பவனாய், அவற்றிலிருந்து வெளிப்படும் ஜுவாலையினால் எம் பெருமானுக்கு மலர் போன்ற விதானத்தை அமைப்பவனான ஆதிசேஷன்மீது கண்வளரும் காயா மலர்போன்ற ஸ்ரீ ரங்க நாதனை வாழ்த்தும் நாள் என்று வாய்க்குமோ!

எம்மாண்பி னயனான்கு நாவினாலும்
எடுத்தேத்தி யீரிரண்டு முகமும் கொண்டு,
எம்மாடும் எழிற்கண்க ளெட்டி னோடும்
தொழுதேத்தி இனிதிறைஞ்ச நின்ற செம்பொன்
அம்மான்தன் மலர்க்கமலக் கொப்பூழ் தோன்ற
அணியரங்கத் தரவணையில் பள்ளி கொள்ளும்
அம்மான்ற னடியிணைக்கீ ழலர்க ளிட்டங்
கடியவரோ டென்றுகொலோ வணுகு நாளே. 49

பொருள்: நான்முகன் வாயார வாழ்த்தி, தன் எட்டுக் கண்களாலும் சேவிக்குமாறு அமைந்த சுவாமியினுடைய தாமரைப் பூவையுடைய திருநாபியானது ஒளிர, அரவணையில் கண் வளரும் பெருமானுடைய திருவடிகளில் மலர்களைத் தூவி அங்குள்ள கைங்கரியபரர்களோடு நெருங்கி வாழ்வது என்றைக்கோ!

மாவினைவாய் பிளந்துகந்த மாலை வேலை
வண்ணனையென் கண்ணனைவன் குன்ற மேந்தி
ஆவினையன் றுயக்கொண்ட ஆய ரேற்றை
அமரர்கள்தந் தலைவனையந் தமிழி னின்பப்
பாவினையவ் வடமொழியைப் பற்றற் றார்கள்
பயிலரங்கத் தரவணையில் பள்ளி கொள்ளும்
கோவினைநா வுறவழுத்தி என்றன் கைகள்
கொய்ம்மலர்தூய் என்றுகொலோ கூப்பு நாளே.

பொருள்: கேசியை அழித்து, குன்றத்தைக் குடையாய் ஏந்திப் பசுக்களைக் காத்தவனும், நித்தியசூரிகளுக்குச் சாமியாய் அழகிய தமிழாகிய இன்ப அருளிச்செயல்களையும், வட-

மொழி இராமாயண முதலியவற்றையும் போன்று போக்கிய மானவனும், பற்றற்றார் வாழும் கோவிலில் துயில்பவனுமான திருவரங்கநாதனை அடியேன் நாவாரத் துதித்து, கைகளால் மலர்களிட்டு அர்ச்சித்து, அஞ்சலி பண்ணும் நாள் எதுவோ!

இணையில்லா வின்னிசையாழ் கெழுமி இன்பத்
தும்புருவும் நாரதனும் இறைஞ்சி யேத்த
துணையில்லாத் தொன்மறைநூல் தோத்தி ரத்தால்
தொன்மலர்க்க ணயன்வணங்கி யோவா தேத்த
மணிமாட மாளிகைகள் மல்கு செல்வ
மதிளரங்கத் தரவணையில் பள்ளி கொள்ளும்
மணிவண்ண னெம்மானைக் கண்டு கொண்டென்
மலர்ச்சென்னி யென்றுகொலோ வணங்கு நாளே.

பொருள்: தம்புருவரும் நாரதரும் இனிய பண்ணைப்பாடி வணங்கித் துதிக்கவும், நான்முகன் வேதங்களைச் சொல்லித் துதிக்கவும் ஏழு மதில்களோடுங்கூடிய கோவிலில் திருக்கண் வளரும் எம்பெருமானைச் சேவித்து, என் தலையானது அவன் திருவடிகளில் படிந்து வணங்குவது என்றைக்கோ!

அளிமலர்மே லயனரனிந் திரனோ டேனை
அமரர்கள்தம் குழுவுமரம் பையரு மற்றும்
தெளிமதிசேர் முனிவர்கள்தம் குழுவு முந்தித்
திசைதிசையில் மலர்தூவிச் சென்று சேரும்
களிமலர்சேர் பொழிலரங்கத் துரக மேறிக்
கண்வளரும் கடல்வண்ணர் கமலக் கண்ணும்
ஒளிமதிசேர் திருமுகமும் கண்டு கொண்டென்
உள்ளமிக வென்றுகொலோ உருகு நாளே. 52

பொருள்: நான்முகன், இந்திரன், முனிவர் முதலியோர், எல்லாத் திக்குகளிலும் மலர்களை இறைத்துக்கொண்டு வந்து சேர்தற்கு இடமான திருவரங்கத்தில், நாக சயனத்தின்மீது கண்வளரும் எம்பெருமானுடைய கடல் நிறத் திருமேனியையும்,

செந்தாமரையன்ன திருக்கண்களையும், சந்திரன் போன்ற திருமுக மண்டலத்தையும் சேவிக்கப் பெற்று என் நெஞ்சம் உருகுங்காலம் என்றோ !

மறம்திகழும் மனமொழித்து வஞ்ச மாற்றி
வன்புலன்க ளடக்கியிடர்ப் பாரத் துன்பம்
துறந்திருமுப் பொழுதேத்தி எல்லை யில்லாத்
தொன்னெறிக்கண் நிலைநின்ற தொண்ட ரான
அறந்திகழும் மனத்தவர்தம் கதியைப் பொன்னி
அணியரங்கத் தரவணையில் பள்ளி கொள்ளும்
நிறந்திகழும் மாயோனைக் கண்டென் கண்கள்
நீர்மல்க வென்றுகொலோ நிற்கு நாளே. 53

பொருள்: கள்ள மனத்திலுள்ள வஞ்சனைகளைப் போக்கி, இந்திரியங்களை அடக்கி, பழவினைகளை வேரறுத்து, எப்போதும் துதிக்கும் தாஸபூதர்களான ஸ்ரீவைஷ்ணவர்களுக்குக் கதியாய், காவிரி சூழ்ந்த அரங்கத்து அரவணையில் பள்ளிகொள்ளும் எம்பெருமானை என் கண்கள் சேவிக்கப்பெற்று ஆனந்தக் கண்ணீர் ததும்ப நிற்பது என்றோ !

கோலார்ந்த நெடுஞ்சார்ங்கம் கூனற் சங்கம்
கொலையாழி கொடுந்தண்டு கொற்ற வொள்வாள்
காலார்ந்த கதிக்கருட னென்னும் வென்றிக்
கடும்பறவை இவையனைத்தும் புறஞ்சூழ் காப்பச்
சேலார்ந்த நெடுங்கழனி சோலை சூழ்ந்த
திருவரங்கத் தரவணையில் பள்ளி கொள்ளும்
மாலோனைக் கண்டின்பக் கலவி யெய்தி
வல்வினையே னென்றுகொலோ வாழு நாளே. 54

பொருள்: வில், சங்கம், ஸுதரிசனம், கதை, வாள் ஆகிய ஐந்தாயுதங்களும், பெரிய திருவடியும் சூழ்ந்து காக்க, அரங்கத்தில் நாகத்தின்மேல் கண் வளரும் எம்பெருமானை, பாவியாகிய அடியேன் சேவித்து, ஆனந்தமான கலவியையும் பெற்று வாழ்வது என்றைக்கோ !

தூராத மனக்காதல் தொண்டர் தங்கள்
குழாம்குழுமித் திருப்புகழ்கள் பலவும் பாடி
ஆராத மனக்களிப்போடு அழுத கண்ணீர்
மழைசோர நினைந்துருகி யேத்தி நாளும்
சீரார்ந்த முழவோசை பரவை காட்டும்
திருவரங்கத் தரவணையில் பள்ளி கொள்ளும்
போராழி யம்மானைக் கண்டு துள்ளிப்
பூதலத்தி லென்றுகொலோ புரளும் நாளே. 55

பொருள்: நீங்காத அன்புடைய ஸ்ரீ வைஷ்ணவர்கள் திரளுடன் கூடி, எம்பெருமான் புகழைப் பாடி, ஆனந்தக் கண்ணீர் பெருக்கி, மனமுருகித் துதித்து, வாத்திய ஒலி நிறைந்த திருவரங்கத்தில் துயிலும் ஆழி தாங்கிய எம்பெருமானைச் சேவித்து, ஆடிப்பாடிப் பூமியில் புரளுவது எந்நாளோ!

வன்பெருவா னகமுய்ய அமர ருய்ய
மண்ணுய்ய மண்ணுலகில் மனிச ருய்ய
துன்பமிகு துயரகல அயர்வொன் றில்லாச்
சுகம்வளர அகமகிழும் தொண்டர் வாழ
அன்பொடுதென் திசைநோக்கிப் பள்ளி கொள்ளும்
அணியரங்கன் திருமுற்றத்து, அடியார் தங்கள்
இன்பமிகு பெருங்குழுவு கண்டு யானும்
இசைந்துடனே என்றுகொலோ இருக்கு நாளே.

பொருள்: மேலுலகங்களும் கீழுலகங்களும் அவற்றி லுள்ளவர்களும் உய்யவும், பாவங்கள் நீங்கிப் புண்ணியங்கள் வளரவும், ஆனந்தம் நிறைந்த ஸ்ரீ வைஷ்ணவர்கள் வாழவும், தெற்கு நோக்கிக் கண் வளரும் அழகிய மணவாளனுடைய சந்நிதி முற்றத்தில் அடியார்களைச் சேவித்துக்கொண்டு அவர்களுடன் வாழ்ந்திருக்கும் காலம் அடியேனுக்கு எப்போது வாய்க்குமோ!

திடர்விளங்கு கரைப்பொன்னி நடுவு பாட்டுத்
திருவரங்கத் தரவணையில் பள்ளிகொள்ளும்,
கடல்விளங்கு கருமேனி யம்மான் தன்னைக்
கண்ணாரக் கண்டுகக்கும் காதல் தன்னால்,
குடல்விளங்கு விறல்தானைக் கொற்ற வொள்வாள்
கூடலர்கோன் கொடைக்குலசே கரன்சொற் செய்த
நடைவிளங்கு தமிழ்மாலை பத்தும் வல்லார்
நலந்திகழ்நா ரணனடிக்கீழ் நண்ணு வாரே. 57

பொருள்: காவிரியின் நடுவே ஆதிசேஷன் மீது துயிலும் கடல் நிறமுடைய திருவரங்கனைச் சேவிக்க வேண்டும் என்னும் ஆர்வத்தினால், வெண்கொற்றக் கொடை, வீரச்சேனை, ஒளியுடைய வாள் இவற்றையுடையவரும், ஈகை வாய்ந்தவரும், மதுரைக்குத் தலைவருமான குலசேகரப் பெருமாள் அருளிச் செய்த தமிழ்ப் பாடல்கள் இப்பத்தையும் ஓத வல்லவர் ஸ்ரீமந் நாராயணனுடைய திருவடிகளில் சேரப் பெறுவர்.

இரண்டாம் திருமொழி

தேட்ட ருந்திறல் தேனி னைத்தென்ன
ரங்கனைத்திரு மாதுவாழ்
வாட்ட மில்வன மாலை மார்வனை
வாழ்த்தி மால்கொள்சிந் தையராய்
ஆட்ட மேவி யலந்த ழைத்தயர்
வெய்தும் மெய்யடி யார்கள்தம்
ஈட்டம் கண்டிடக் கூடுமே லது
காணும் கண்பய னாவதே. 58

பொருள்: பெரிய பிராட்டியார் வாழ்தற்கேற்ற வாடாத வனமாலையை அணிந்த திருமார்பையுடைய ஸ்ரீரங்கநாதனை மங்களாசாசனம் செய்து, அவனிடம் மால் கொண்டு, ஆடியும் வாய்விட்டழைத்தும் சோர்கின்ற பாகவதர் திரளைக் காணப் பெறுவேனாகில், அதுவே என் கண் படைத்ததற்குப் பயனாகும்.

தோடு மாமலர் மங்கை தோளிணை
    தோய்ந்த தும்சுடர் வாளியால்
நீடு மாமரம் செற்ற தும்நிரை
    மேய்த்த துமிவை யேநினைந்து
ஆடிப் பாடி அரங்க வோவென்
    றழைக்கும் தொண்ட ரடிப் பொடி
ஆட நாம்பெறில், கங்கை நீர்குடைந்
    தாடும் வேட்கை என்னுவதே? 59

பொருள்: பெரிய பிராட்டியாரை அணைந்தவனும், ஏழு மரங்களைச் சாய்த்தவனும், பசுக்களை மேய்த்தவனுமான எம் பெருமானை அன்புடன் 'அரங்கா' என்றழைக்கும் பாகவதர் களின் திருவடித்துகளில் ஆடப் பெற்றால், கங்கையில் மூழ்க வேண்டுமென்னும் ஆர்வம் எதற்கு?

ஏற டர்த்தது மேன மாய்நிலங்
    கீண்ட தும்முன் னிராமனாய்,
மாற டர்த்ததும் மண்ண ளந்ததும்
    சொல்லிப் பாடிவண் பொன்னிப்பேர்
ஆறு போல்வரும் கண்ண நீர்கொண்
    டரங்கன் கோவில் திருமுற்றம்,
சேறு செய்தொண்டர் சேவடிச் செழுஞ்
    சேறென்சென்னிக் கணிவனே. 60

பொருள்: நப்பின்னைக்காக ஏழு ரிஷபங்களை அடக்கிய தும், பூமி பிராட்டிக்காகப் பூமியைக் குத்தி எடுத்ததும், சீதைக் காக அரக்கரை அழித்ததுமாகிய திருமாலின் சரிதங்களைப் பாடி, அதனால், பெருகும் ஆனந்தக் கண்ணீரினால் அரங்கன் முற்றத்தைச் சேறாக்குகிற பாகவதர்களின் திருவடிகளால் துகையுண்ட அச்சேற்றை என் நெற்றிக்குத் திலகமாய் அணிவேன்.

தோய்த்த தண்தயிர் வெண்ணெய் பாலுடன்
உண்ட லும்முடன் ருய்ச்சிகண்டு,
ஆர்த்த தோளுடை யெம்பி ரானென்
னரங்க னுக்கடி யார்களாய்,
நாத்த ழும்பெழ நாரணா வென்ற ழைத்து
மெய்தழும் பத்தொழு
தேத்தி இன்புறும் தொண்டர் சேவடி
யேத்தி வாழ்த்து மென்நெஞ்சமே. 61

பொருள்: வெண்ணெய் முதலியவற்றை உண்டதால் சினங்கொண்ட யசோதை கட்டிய தோள்களையுடைய என் அரங்கநாதனுக்கு ஆட்பட்டு, அவனை நாரணாவென்றழைத்துச் சேவித்துத் துதித்துக் களிக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய திருவடிகளை என் மனம் வாழ்த்திப் பல்லாண்டு பாடும்.

பொய்சி லைக்குர லேற்றெ ருத்த
மிறுத்துப் போரர வீர்த்தகோன்
செய்சி லைச்சுடர் சூழொ ளித்திண்ண
மாம திள்தென் னரங்கனாம்
மெய்சிலைக் கரு மேக மொன்றுதம்
நெஞ்சுள் நின்று திகழப்போய்,
மெய்சி லிர்ப்பவர் தம்மை யேநினைந்
தென்மனம் மெய்சி லிர்க்குமே. 62

பொருள்: ஏழு ரிஷபங்களையும் காளியனையும் அழித்து, ஒளி மிக்க அரங்கத்தில் எழுந்தருளியிருக்கும் காளமேக மானது தங்கள் மனத்தில் நிலை பெற, அதனால் மயிர்க் கூச்செறியும் ஸ்ரீ வைஷ்ணவர்களையே என் நெஞ்சம் அநுசந்தித்து மயிர்க் கூச்செறியப் பெற்றது.

ஆதி யந்த மனந்த மற்புத
மான வானவர் தம்பிரான்
பாத மாமலர் சூடும் பத்தியி
லாத பாவிக ளுய்ந்திட,

தீதில் நன்னெறி காட்டி யெங்கும்
திரிந்த ரங்கனெம் மானுக்கே,
காதல் செய்தொண்டர் கெப்பி றப்பிலும்
காதல் செய்யுமென் னெஞ்சமே. 63

பொருள்: உலகிற்குக் காரணனாயும், எங்கும் நிறைந்தவனாயுமுள்ள அரங்கநாதனுடைய திருவடிகளில் அன்பற்றிருக்கும் பாவிகளும் உய்யுமாறு, எங்கும் சென்று நல்வழிகளைக் காட்டி அவ்வரங்கனுக்குப் பத்தி பூண்டொழுகும் பாகவதர்களிடம் என் மனமானது எப்பிறவியிலும் அன்பு கொண்டிருக்கும்.

காரி னம்புரை மேனி நற்கதிர்
முத்த வெண்ணகைச் செய்யவாய்
ஆர மார்வ னரங்க னென்னும்அ
ரும்பெ ருஞ்சுட ரொன்றினை,
சேரும் நெஞ்சின ராகிச் சேர்ந்து
கசிந்தி ழிந்தகண் ணீர்களால்
வார நிற்பவர் தாளி ணைக்கொரு
வார மாகுமென் னெஞ்சமே. 64

பொருள்: மேகமொத்த திருமேனியும், புன்சிரிப்புடைய திருப்பவளமும், முத்தாரமணிந்த திருமார்பும் உடைய அரங்கநாதனுடைய தேஜஸை அனுபவித்து, ஆனந்தக் கண்ணீர் வெள்ளமிடுமாறு நிற்கும் பாகவதர்களின் திருவடிகளில் என் மனமானது ஒப்பற்ற அன்பை உடையதாகும்.

மாலை யுற்ற கடல்கி டந்தவன்
வண்டு கிண்டு நறுந்துழாய்
மாலை யுற்ற வரைப்பெ ருந்திரு
மார்வனை மலர்க் கண்ணனை,

மாலை யுற்றெழுந் தாடிப் பாடித்
திரிந்த ரங்கனெம் மானுக்கே
மாலை யுற்றிடும் தொண்டர் வாழ்வுக்கு
மாலையுற்ற தென்னெஞ்சமே. 65

பொருள்: திருப்பாற்கடலில் பள்ளிகொள்பவனும், திருத்துளபமணிந்த மார்புடையவனும், செந்தாமரையன்ன திருக்கண்களுடையவனுமான திருவரங்கனைப் பாடி யாடி, அதனால் பித்தேறித் திரிகின்ற ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய வாழ்விற்கு என் மனம் மயங்கிக் கிடக்கின்றது.

மொய்த்துச் சண்பனி சோர மெய்கள்
சிலிர்ப்ப ஏங்கி யிளைத்துநின்று,
எய்த்துக் கும்பிடு நட்ட மிட்டெழுந்
தாடிப் பாடி யிறைஞ்சியென்
அத்த னச்ச னரங்க னுக்கடி
யார்க ளாகி யவனுக்கே
பித்த ராமவர் பித்த ரல்லர்கள்
மற்றை யார்முற்றும் பித்தரே. 66

பொருள்: எனக்குத் தந்தையும் ஸ்வாமியுமாயிருக்கும் அரங்கனுக்கு அடியாராய், ஆனந்தக் கண்ணீர் சொரிய, நெஞ்சு தளர்ந்து, ஆடுதல் பாடுதலாகிய பித்தேறித் திரிபவர், பைத்தியக்காரர் அல்லர். அந்நிலையைப் பெறாதவர்தாம் பைத்தியக்காரராவர்.

அல்லி மாமலர் மங்கை நாத
னரங்கன் மெய்யடி யார்கள்தம்
எல்லை யிலடி மைத்தி றத்தினி
லென்று மேவு மனத்தனாம்
கொல்லி காவலன் கூடல் நாயகன்
கோழிக் கோன்குல சேகரன்
சொல்லி னின்தமிழ் மாலை வல்லவர்
தொண்டர் தொண்டர்க ளாவரே. 67

பொருள்: திருவாழி தாங்கிய திருவரங்கனுடைய திருவடிகளில் அன்புடையராய், உலகத்தாரில் சிறந்தவராய், சேர தேசத் தலைவராய் வாழ்ந்த குலசேகராழ்வார் அருளிச்செய்த இப்பாசுரங்களை ஓத வல்லார்க்கு, இவ்வுலகில் பகவதனுபவத்திற்கு யாதோர் இடையூறும் நேராது.

ஸ்ரீ குலசேகராழ்வார் திருவடிகளே சரணம்.

மூன்றும் திருமொழி

மெய்யில் வாழ்க்கையை மெய்யெனக் கொள்ளு மிவ்
வையந் தன்னொடும் கூடுவ தில்லையான்!
ஐய னே! அரங் கா; என் றழைக்கின்றேன்,
மையல் கொண் டொழிந் தேன் என் றன் மாலுக்கே.

பொருள்: இச்சரீர வாழ்க்கையை உண்மையெனக் கருதும் இவ்வுலக மக்களோடு சேருகின்றேனில்லை. அரங்கா என்றழைத்துத் திருமாலுக்கே அன்பு கொண்டேன்.

நூலி னேரிடை யார் திறத் தேமிற்கும்
ஞாலந் தன்னொடும் கூடுவ தில்லையான்;
ஆலியா அழையா அரங் கா என் று
மாலெ ழுந்தொழிந் தேன் என் றன் மாலுக்கே. 69

பொருள்: மங்கையர்பால் மனங்கொண்டிருக்கும் மக்களிடம் யான் கூட்டுறவு கொள்ளேன். என்னிடம் அன்பு கொண்டிருக்கும் எம்பெருமானிடமே யானும் அன்பு பூண்டுள்ளேன்.

மார னார்வரி வெஞ்சிலைக் காட்செய்யும்,
பாரி னாரோடும் கூடுவ தில்லையான்;
ஆர மார்வன் அரங்கன் அனந்தன்நல்
நார ணன்நர காந்தகன் பித்தனே. 70

பொருள்: மன்மதனுக்கு அடிமைப்பட்டுச் சிற்றின்பத்தில் திரிபவரோடு கூடிலேன். எல்லாருக்கும் தலைவனும், அடியவர்கள் நரகத்தில் சேராத்வாறு காப்பவனுமிருக்கும் திருவரங்கனிடம் மிக்க பத்தியுடையவனாயிருக்கிறேன்.

உண்டி யேஉடை யேஉகந் தோடுமிடம்
மண்ட லத்தொடும் கூடுவ தில்லையான்;
அண்ட வாண னரங்கன்,வன் பேய்முலை
உண்ட வாயன்தன் உன்மத்தன் காண்மினே. 71

பொருள்: உண்டி உடைகளையே விரும்பித் திரியும் மனிதரோடு சேர்ந்திலேன். பரமபதத்தில் வாழ்பவனும், பூதகியின் பாலையுண்டவனுமான அரங்கநாதனிடமே பித்துப் பிடித்தவனாய் இருக்கிறேன்.

தீதில் நன்னெறி நிற்கவல் லாதுசெய்
நீதி யாரொடும் கூடுவ தில்லையான்;
ஆதி ஆய னரங்கனந் தாமரைப்
பேதை மாமண வாளன்தன் பித்தனே. 72

பொருள்: நன்மைகளை விட்டுத் தீமைகளைப் புரிவதையே விரதமாய்க் கொண்டவரிடம் அணுகிலேன். உலகங்கட்கு முதல்வனும பெரிய பிராட்டியாரின் நாயகனுமான அரங்கனிடம் காதல் கொண்டுள்ளேன்.

எம்ப ரத்தரல் லாரொடும் கூடலன்;
உம்பர் வாழ்வையொன் றாகக் கருதிலன்;
தம்பி ரானமர ரர்க்கரங் கநகர்
எம்பி ரானுக் கெழுமையும் பித்தனே. 73

பொருள்: என் போன்று அவனையே பயனாய்க் கருதாதவருடன் சேரேன்; சுவர்க்கம் முதலியவற்றை விரும்பேன்; கோவிலில் எழுந்தருளியிருக்கும் பெரிய பெருமாளிடம் பித்தாய் நின்றேன்.

எத்தி றத்திலும் யாரொடும் கூடுமச்
சித்தந் தன்னைத் தவிர்த்தனன் செங்கண்மால் ;
அத்த னே!அரங் கா!என்ற ழைக்கின்றேன்,
பித்த னாயொழிந் தேன்எம்பி ரானுக்கே. 74

பொருள் : புண்டரீகாக்ஷனை எம்பெருமான், என்னை எவ் விஷயத்திலும் யாரிடமும் சேர்ந்து கெடாதவாறு தவிர்த் தான். ஆதலின், ' திருவரங்கநாதனே ' என்றழைத்து, அவ னிடமே அன்பு கொண்டேன்.

பேய ரேஎனக்கு யாவரும் யானுமோர்
பேய னேஎவர்க் குமிது பேசியென் ?
ஆயனே!அரங் கா!என்றழைக்கின்றேன்,
பேய னாயொழிந் தேனெம்பி ரானுக்கே. 75

பொருள் : இவ்வுலகில் யாவரும் எனக்குப் பேயரே. ' கண்ணனே, அரங்கனே ' என்றழைக்கும் யானும் ஒருவிதப் பேயனே. இதைக் குறித்துப் பேசிப்பயன் என்னை ? ஆயினும், எம்பெருமானுக்கே யான் பித்தனாய்த் தீர்ந்தேன்.

அங்கை யாழி அரங்க னடியிணை
தங்கு சிந்தைத் தனிப்பெரும் பித்தனாய்க்
கொங்கர் கோன்குல சேகரன் சொன்னசொல்,
இங்கு வல்லவர்க் கேதமொன் றில்லையே. 76

பொருள் : ஆழி ஏந்திய திருவரங்கன் திருவடிகளில் பொருந்திய நெஞ்சுடையராய், அவனிடம் பித்தராய், சேர தேசத்தலைவராய் இருந்த குலசேகரர் அருளிய இப்பாசுரங்களை ஓதுபவர்க்குப் பகவதனுபவத்திற்கு யாதோர் இடையூறும் உண்டாகாது.

ஸ்ரீ குலசேகராழ்வார் திருவடிகளே சரணம்.

எட்டாம் திருமொழி

தேவரையும் அசுரரையும் திசைகளையும் படைத்தவனே !
யாவரும்வந் தடிவணங்க அரங்கநகர்த் துயின்றவனே !
காவிரிநல் நதிபாயும் கணபுரத்தென் கருமணியே !
ஏவரிவெஞ் சிலைவலவா ! இராகவனே ! தாலேலோ. 77

பொருள்: தேவர், அசுரர், திக்குகள் முதலியவற்றைப் படைத்தவனே, யாவரும் உன்னடி வணங்கத் திருவரங்கத்திலும் திருக்கண்ணபுரத்திலும் முறையே பள்ளி கொண்டும் எழுந்தருளியும் இருப்பவனே, வில்லை ஆள்பவனே, இராகவனே, தாலேலோ.

ஸ்ரீ குலசேகராழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

திருமழிசைப்பிரான் அருளிச் செய்த

திருச்சந்த விருத்தம்

அரங்கனே, தரங்கநீர் கலங்கவன்று குன்றுசூழ்,
மரங்கடேய மாநிலம் குலுங்கமா சுணம்சுலாய்,
நெருங்கநீ கடைந்தபோது நின்றசூர ரென்செய்தார்?
குரங்கையா ளுகந்தவெந்தை கூறுதேற வேறிதே. 78

பொருள்: அலைகள் நிறைந்த கடலை, நிலம் அசைய, மந்திர மலையிலிருந்த மரங்கள் நசுங்க, வாசுகியைச்சுற்றி நீ கடைந்தபோது சூரரென நின்ற தேவர்கள் என் செய்தார்கள்? குரங்குகளை ஆண்ட திருவரங்கனே, இதை எனக்குத் தெரியச் சொல்வாய்.

கொண்டைகொண்ட கோதைமீது தேனுலாவு கூனின்மேல்
உண்டைகொண்ட ரங்கவோட்டி யுள்மகிழ்ந்த நாதனூர்,
நண்டையுண்டு நாரைபேர வாளைபாய நீலமே
அண்டைகொண்டு கெண்டைமேயு மந்தணீர ரங்கமே. 79

பொருள்: மலரணிந்த மந்தரையின் வளைந்த முதுகில் உண்டையைச் செலுத்தி மகிழ்ந்தவன் வாழுமிடம், நாரையைக் கண்டு அஞ்சும் மச்சங்கள், கருநெய்தல்களைத் தங்களுக்கு அரணாய்க்கொண்டு அச்சமின்றி வாழும் அரங்கமாகும்.

வெண்டிரைக் கருங்கடல் சிவந்துவேவ முன்னொர்நாள்
திண்டிறல் சிலக்கைவாளி விட்டவீரர் சேருமூர்,
எண்டிசைக் கணங்களு மிறைஞ்சியாடு தீர்த்தநீர்
வண்டிரைத்த சோலைவேலி மன்னுசீர ரங்கமே. 80

பொருள்: வெண்ணிறக்கடல் செந்நிறமாகுமாறு அம்பெய்த வீரனான சக்கரவர்த்தித் திருமகன் வதியுமிடம், எல்லாத் திக்குகளிலுள்ளவரும் தொழுது தீர்த்தமாடுதற்கேற்ற தூய்மை வாய்ந்த நீர் நிலையும் சோலைகளும் சூழ்ந்த அரங்கமாகும்.

சரங்களைத் துரந்துவில் வளைத்திலங்கை மன்னவன்
சிரங்கள்பத் தறுத்துதிர்த்த செல்வர்மன்னு பொன்னிடம்
பரந்துபொன் நிரந்துநுந்தி வந்தலைக்கும் வார்புனல்
அரங்கமென்பர் நான்முகத் தயன்பணிந்த கோயிலே. 81

பொருள்: அம்புகளை விட்டு இராவணனது பத்துத் தலைகளையும விழப்பண்ணின செல்வன் வாழும் அழகிய இடம், பொன்னைக் கரை சேர்க்கும் மிக்க நீரையுடைய காவிரியையுடையதும், நான்முகன் பணிவதுமான அரங்கம் என்பர்.

பொற்றையுற்ற முற்றல்யானை போரெதிர்ந்து வந்ததைப்
பற்றியுற்று மற்றதன் மருப்பொசித்த பாகனூர்
சிற்றெயிற்று முற்றல்மூங்கில் மூன்று தண்டரொன்றினர்
அற்றபற்றர் சுற்றிவாழும் அந்தணீ ரரங்கமே. 82

பொருள்: குவலயாபீடத்தின் கால்களுடைய இடையில் நுழைந்து, அதன் கொம்பை முறித்த கண்ணன் எழுந்தருளியிருக்கும் இடம், ஸந்நியாசிகள், பத்தர், பிரபந்நர் ஆகியவர்கள் என்றும் வதிகின்ற குளிர்ந்த நீர் சூழ்ந்த திருவரங்கமாகும்.

மோடியோடி லச்சையாய சாபமெய்தி முக்கணான்
கூடுசேனை மக்களோடு கொண்டுமண்டி வெஞ்சமத்
தோட,வாண னாயிரம் கரங்கழித்த வாதிமால்
பீடுகோயில் கூடுநீ ரரங்கமென்ற பேரதே. 83

பொருள்: வாணனுக்குத் துணை புரிய வந்த தேவர்களை முதுகிட்டு ஓடுமாறு செய்து, அவன் தோள்களைத் துணித்த காரணபூதன் வாழுமிடம், மழை நீரும் காவிரியும் சேர்ந்து பாய்கின்ற திருவரங்கமென்னும் பெரிய கோவிலாகும்.

இலைத்தலைச் சரந்துரந் திலங்கைக் கட்டழித்தவன்,
மலைத்தலைப் பிறந்திழிந்து வந்துநுந்து சந்தனம,
குலைத்தலைத் திறுத்தெறிந்த குங்குமக் குழம்பினோடு,
அலைத்தொழுகு காவிரி யரங்கமேய வண்ணலே. 84

பொருள்: அம்புகளினால் இலங்கையின் அரணை அழியச் செய்த சக்கரவர்த்தித் திருமகன், சந்தனம் குங்குமம் முதலிய மரங்களை அடித்துக்கொண்டு வரும் காவிரியையுடைய அரங்கத்தில் என்றும் எழுந்தருளியிருக்கிறான்.

மன்னுமா மலர்க்கிழத்தி வையமங்கை மைந்தனாய்ப்,
பின்னுமாயர் பின்னைதோள் மணம்புணர்ந்த தன்றியும்,
உன்னபாத மென்னசிந்தை மன்னவைத்து நல்கினாய்,
பொன்னிசூ ழரங்கமேய புண்டரீக னல்லையே. 85

பொருள்: காவிரி சூழ்ந்த அரங்கத்தில் வதியும் புண்டரீகனே, பெரிய பிராட்டி, பூமி பிராட்டி, நப்பின்னைப் பிராட்டி ஆகியவர்களுடன் நீ கலந்திருத்தல் மட்டுமேயல்லாமல், உன்னுடைய திருவடிகளை என் இருதயத்திலும் பொருந்துமாறு செய்தனை.

சுரும்பரங்கு தண்டுழாய் துதைந்தலர்ந்த பாதமே,
விரும்பிநின் றிறைஞ்சுவேற்கு இரங்கரங்க வாணனே,
கரும்பிருந்த கட்டியே! கடல்கிடந்த கண்ணனே!
இரும்பரங்க வெஞ்சரம் துரந்தவில்லி ராமனே! 86

பொருள்: கருப்பங்கட்டியைப் போன்றவனே, பாற்கடலில் பள்ளிகொள்பவனே, கோவிலின் தலைவனே, பகைவர்மேல் அம்பு செலுத்துபவனே, திருத்துளபம் மலரும் உன் திருவடிகளையே பற்றி இருக்கும் என்னைக் காக்க வேண்டும்.

பொன்னிசூ ழரங்கமேய பூவைவண்ண மாய!கேள்:
என்னதாவி யென்னும்வல் வினையினுள் கொழுந்தெழுந்து,
உன்னபாத மென்னநின்ற வொண்சுடர்க் கொழுமலர்,
மன்னவந்து பூண்டுவாட்ட மின்றியெங்கும் நின்றதே. 87

பொருள்: பாபம் நிறைந்த எனக்கு உம்மிடம் அன்பு ஏற்படுதற்காகவே நீர் கோவிலில் எழுந்தருளியிருக்கிறீர். உம்முடைய சௌந்தரியமே எனக்கு உம்மிடம் பத்தியை உண்டாக்கிற்று.

திருமழிசையாழ்வார் திருவடிகளே சரணம்.

திருமழிசைப்பிரான் அருளிச் செய்த

நான்முகன் திருவந்தாதி

பாலில் கிடந்ததுவும் பண்டரங்கம் மேயதுவும்,
ஆலில் துயின்றதுவும் ஆரறிவார்?—ஞாலத்
தொருபொருளை வானவர்தம் மெய்ப்பொருளை அப்பில்
அருபொருளை யானறிந்த வாறு. 88

பொருள்: பெருமான் திருப்பாற்கடல், திருவரங்கம், ஆலந்தளிர் இவற்றில் பள்ளி கொண்ட விதத்தை யார் அறிய வல்லவர்? உலகில் தோன்றியவனும், நித்திய சூரிகளின் உண்மைப் பொருளும், நீரில் பள்ளி கொண்டவனுமான அப்பெருமானின் பெருமையை யான் அறிந்தது மிகுந்த வியப்பிற்கிடமாகும்.

அவனென்னை யாளி யரங்கத் தரங்கில்
அவனென்னை யெய்தாமல் காப்பான்—அவனென்ன
துள்ளத்து நின்று னிருந்தான் கிடக்குமே
வெள்ளத் தரவணையின் மேல்? 89

பொருள்: என்னையாண்ட அரங்கநாதன், என்னைச் சமுசாரத்தில் நுழைய விடாமல் காப்பான்; அவன் என் நெஞ்சில் நிற்பதும், இருப்பதும், சயனிப்பதும் செய்கிறன்; அத்தகையவன் இனி சேஷ சயனத்தில் பொருந்துவனோ?

நாகத் தணைக்குடந்தை வெஃகா திருவெவ்வுள்,
நாகத் தணையரங்கம் பேரன்பில்—நாகத்
தணைப்பாற் கடல்கிடக்கு மாதி நெடுமால்
அணைப்பார் கருத்தனவான். 90

பொருள்: அடியார்கள் நெஞ்சில் சயனித்தற்காகவே பெருமாள், திருவனந்தாழ்வான், திருக்குடந்தை, முதல் பாற்கடல் ஈருயுள்ள பல இடங்களிலும் பள்ளிகொண்டு பழகுகிறன்.

ஆட்பார்த் துழிதருவாய் கண்டுகொ ளென்றுநின்
தாட்பார்த் துழிதருவேன் தன்மையைக்—கேட்பார்க்
கரும்பொருளாய் நின்ற அரங்கனே ! உன்னை
விரும்புவதே விள்ளேன் மனம். 91

பொருள்: தாமாக முயல்பவருக்கு அறிய வொண்ணாத வனே, யாரேனும் கிடைப்பரோ எனத் தேடித் திரிபவனே, உன்னைச் சேவிக்க வேண்டுமென ஆசைப்பட்டிருக்கும் என் னுடைய இந்நிலையை, எனக்கு என்றும் நிலைத்திருக்குமாறு செய்தருளல் வேண்டும்.

திருமழிசையாழ்வார் திருவடிகளே சரணம்.

தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச்செய்த

திருமாலை

காவலிற் புலனை வைத்துக்
    கலிதன்னைக் கடக்கப் பாய்ந்து,
நாவலிட் டுழிதர் கின்றோம்
    நமன் தமர் தலைகள் மீதே,
மூவுல குண்டு மிழ்ந்த
    முதல்வநின் நாமம் கற்ற
ஆவலிப் புடைமை கண்டா
    யரங்கமா நகரு ளானே 92

பொருள்: மூவுலகங்களையும் உண்டுமிழ்ந்த முதல்வனே, உன்னுடைய திருநாமத்தைக் கற்ற பெருமிதத்தினால், இந்திரியங்களை அடக்கி, பாவங்களைப் போக்கி, நமனையும் அவன் தூதவரையும் அடக்கி வாழ்கின்றோம்.

பச்சைமா மலைபோல் மேனிப்
    பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா! அமர ரேறே!
    ஆயர் தம் கொழுந்தே! என்னும்
இச்சுவை தவிர யான்போ
    யிந்திர லோக மாளும்,
அச்சுவை பெறினும் வேண்டே
    னரங்கமா நகரு ளானே. 93

பொருள்: திருவரங்கத்தை இருப்பிடமாய்க் கொண்டவனே, அடியேன், உன்னுடைய திருமேனி இலட்சணங்களையும், கலியாண குணங்களையும் பகர்ந்து கொண்டிருக்கும் இந்த இன்பச் சுவையை விட்டுப் பரமபதத்தை ஆளும் பேற்றையும் விரும்பேன்.

வேதநூல் பிராயம் நூறு
    மனிசர்தாம் புகுவ ரேனும்
பாதியு முறங்கிப் போகும்
    நின்றதில் பதினை யாண்டு
பேதைபா லகன தாகும்
    பிணிபசி மூப்புத் துன்பம்
ஆதலால் பிறவி வேண்டேன்
    அரங்கமா நகரு ளானே. 94

பொருள்: மக்கள் நூறு ஆண்டுகள் வாழினும், உறக்கத்தில் ஐம்பதும், இளமை, வாலிபம், பிணி, மூப்பு முதலியவற்றில் ஐம்பதுமாய்க் கழிகின்றமையின், உன்னை நினைத்தற்குக் காலமேது? ஆதலின், இம்மானிடப் பிறவியை விரும்புகின்றேனில்லை.

மொய்த்தவல் வினையுள் நின்று
    மூன்றெழுத் துடைய பேரால்
கத்திர பந்து மன்றே
    பராங்கதி கண்டு கொண்டான்,
இத்தனை யடிய ரானார்க்
    கிரங்குநம் மரங்க னாய
பித்தனைப் பெற்று மந்தோ
    பிறவியுள் பிணங்கு மாறே. 95

பொருள்: அளவற்ற பாவங்களைச் செய்த க்ஷத்திர பந்து என்பவன் கோவிந்தா என்னும் திருநாமத்தை ஒரு முறை கூறியதனால் பரமபதத்தை அடைந்தான். இத்தகையவர்க்கும் பேறளிக்கும் சில குணமுடையவனைப் பெற்றிருந்தும் மக்கள் பிறவியுள் அழுந்துதல் ஏனோ?

பெண்டிரால் சுகங்க ளுய்ப்பான்
    பெரியதோ ரிடும்பை பூண்டு,
உண்டிராக் கிடக்கும் போது
    உடலுக்கே கரைந்து நைந்து,

தண்டுழாய் மாலை மார்பன்
தமர்களாய்ப் பாடி யாடி,
தொண்டுபூண் டமுத முண்ணாத்
தொழும்பர்சோ றுகக்கு மாறே. 96

பொருள்: சிற்றின்பத்தில் ஆழ்ந்து உடலுக்கே கரைபவராய், திருத்துளப மாலையை அணிந்த எம்பெருமானுக்கு அடியராய், ஆடிப் பாடி அவன் குணங்களை அனுபவித்தலாகிய அமுதத்தை உண்ணாத அற்பர், மண்ணிற்கும் சோற்றிற்கும் வேறுபாடு அறிந்து உண்டு வாழ்வது எங்ஙனமோ?

மறம்சுவர் மதிளெ டுத்து
மறுமைக்கே வெறுமை பூண்டு,
புறம்சுவ ரோட்டை மாடம்
புரளும்போ தறிய மாட்டீர்,
அறம்சுவ ராகி நின்ற
அரங்கனார்க் காட்செய் யாதே,
புறம்சுவர் கோலஞ் செய்து
புள்கவ்வக் கிடக்கின் றீரே. 97

பொருள்: இவ்வுடல் விழும் காலம் இஃது என அறியும் வன்மையற்ற நீங்கள், இதை அழகு செய்துகொண்டு, திருவரங்கநாதனுக்கு அடிமை செய்யாமல் இருக்கின்றீரே! ஈதென்ன அறியாமை!

புலையற மாகி நின்ற
புத்தொடு சமண மெல்லாம்
கலையறக் கற்ற மாந்தர்
காண்பரோ கேட்ப ரோதாம்,
தலையறுப் புண்டும் சாவேன்
சத்தியம் காண்மின் ஐயா!
சிலையினா லிலங்கை செற்ற
தேவனே தேவ னாவான். 98

பொருள் : தன் வில் திறத்தினால் இலங்கையை அழித்தவனே உயிர்களை உய்விப்பவனாவான் என்பது சத்தியம். இதை நன்கு கற்றறிந்த மக்கள் வேறு சமயங்களைப் பற்றுவார்களோ? பற்ற மாட்டார்கள்.

வெறுப்பொடு சமணர் முண்டர்
விதியில்சாக் கியர்கள் நின்பால்
பொறுப்பரி யனகள் பேசில்
போவதே நோய தாகி,
குறிப்பெனக் கடையு மாகில்
கூடுமேல் தலையை ஆங்கே,
அறுப்பதே கருமங் கண்டா
யரங்கமா நகருளானே ! 99

பொருள் : அரங்க நகரையுடையவனே, மற்றச் சமயத்தினர் உன்னை நிந்திப்பாராகில், அந்த நோயால் முடிந்து போவேன் ; ஒருகால் எனக்கு வன்மையுண்டாகில் பழிப்புக் கூறிய அவர்கள் தலையை அங்கேயே துண்டித்துவிடுவேன்.

மற்றுமோர் தெய்வ முண்டே
மதியிலா மானி டங்காள் !
உற்றபோ தன்றி நீங்கள்
ஒருவனென் றுணர மாட்டீர் ;
அற்றமே லொன்ற றியீர்
அவனல்லால் தெய்வமில்லை,
கற்றினம் மேய்த்த வெந்தை
கழலிணை பணிமி னீரே. 100

பொருள் : உயர்ந்த ஞானமற்ற மக்களே, அரங்கநாதனைத் தவிர வேறு தெய்வம் ஒன்றுண்டோ? இல்லை. ஆதலின், ஆனிரை மேய்த்த கண்ணன் திருவடிகளையே பற்றுவீர்களாக.

நாட்டினான் தெய்வ மெங்கும்
நல்லதோ ரருள்தன் னாலே,
காட்டினான் திருவ ரங்க
முய்பவர்க் குய்யும் வண்ணம்,
கேட்டிரே நம்பி மீர்காள்
கெருடவா கனனும் நிற்க,
சேட்டைதன் மடிய கத்துச்
செல்வம்பார்த் திருக்கின் றீரே. 101

பொருள்: அரங்கநாதன், பேரருளினால் அவரவர் நிலைக் கேற்பப் பல தெய்வங்களையும் நிறுவி, தன்னையே அடைய விரும்புவோர்க்குத் திருவரங்கத்தைக் காட்டினான். செல்வம் பெற விரும்புவோர் ஸ்ரீ தேவியை விட்டு மூதேவியைப் பற்றுதல் போன்று, அவனை விட்டு மற்றத் தெய்வங்களைப் பற்றுகின்றீரே! இதனால் யாது பயன்?

ஒருவில்லா லோங்கு முந்நீ
ரடைத்துல கங்க ளுய்ய
செருவிலே யரக்கர் கோனைச்
செற்றநம் சேவக னார்,
மருவிய பெரிய கோயில்
மதில்திரு வரங்க மென்னாக்
கருவிலே திருவி லாதீர்
காலத்தைக் கழிக்கின் றீரே. 102

பொருள்: கடலை அடைத்து அரக்கனை அழித்த அழகிய மணவாளன் சயனித்திருக்கும் திருவரங்கம் என வாயினாலும் சொல்லாது, கருவிலும் பகவத் கடாட்சத்தைப் பெறாத நீங்கள் வீணே காலத்தைக் கடத்துகின்றீர்களே!

நமனுமுற் கலனும் பேச
நரகில்நின் றார்கள் கேட்க
நரகமே சுவர்க்க மாகும்
நாமங்க ளுடைய நம்பி.

அவனதூ ரரங்க மென்னு
தயர்த்துவீழ்ந் தழியுமாந்தர்
கவலையுள் படுகின் ருரென்
றதனுக்கே கவல்கின் றேனே. 103

பொருள்: நரகிலிருக்கும் மக்களும் எம்பெருமான் திரு நாமத்தைக் கேட்பாராகில், சுவர்க்க இன்பத்தை அனுபவிப்பார்கள். அங்ஙனமிருக்க, பகுத்தறிவு வாய்ந்த மானிடர் அரங்க மெனப் பத்தியுடன் பகராமல் துன்பமடைகின்றனரே எனக் கவலைப்படுகின்றேன்!

எறியுநீர் வெறிகொள் வேலை
மாநிலத் துயிர்க ளெல்லாம்
வெறிகொள்பூந் துளவ மாலை
விண்ணவர் கோனை யேத்த,
அறிவிலா மனித ரெல்லா
மரங்கமென் றழைப்ப ராகில்,
பொறியில்வாழ் நரக மெல்லாம்
புல்லெழுந் தொழியு மன்றே. 104

பொருள்: மணமுள்ள துளப மாலையை அணிந்த நித்திய சூரிகளின் நாதனைத் துதிக்கும் ஞானமற்றவரும், அரங்கம் என்று செப்புவாராகில், சமுசாரமாகிற நரகம் பயனற்ற கரம்பு நிலம் ஆய்விடும்.

வண்டினம் முரலுஞ் சோலை
மயிலின மாலுஞ் சோலை
கொண்டல்மீ தணவுஞ் சோலை
குயிலினம் கூவுஞ் சோலை
அண்டர்கோ னமருஞ் சோலை
அணி திருவ ரங்க மென்னு
மிண்டர்பாய்ந் துண்ணுஞ் சோற்றை
விலக்கிநாய்க் கிடுமி னீரே. 105

பொருள்: பறவைகளும் மேகமும் சூழ்ந்த சோலையை அணியாக உடையதும், அரங்கநாதன் நித்திய வாசம் பண்ணுவதுமான திருவரங்கத்தை வாயினாலும் சொல்லாத நன்றி கெட்ட மூர்க்கர் உண்ணும் சோற்றை நன்றியறியும் இயல்புடைய நாய்க்கு இடுங்கள்.

மெய்யர்க்கே மெய்ய னாகும்
விதியிலா வென்னைப் போலப்,
பொய்யர்க்கே பொய்ய னாகும்
புட்கொடி யுடைய கோமான் ;
உய்பப்போ முணர்வி னார்கட்
கொருவனென் றுணர்ந்த பின்னை
ஐயப்பா டறுத்துத் தோன்று
மழகனா ரரங்க மன்றே. 106

பொருள்: தன்னை நம்பினவர்க்கு மெய்யனாகவும், நம்பாதவர்க்குப் பொய்யனாகவும், தன் பெருமையை உணர்ந்த ஞானிகட்குப் பயனாகவும் இருக்கும் எம்பெருமான் வாழுமிடம் அழகிய அரங்கமாகும்.

சூதனாய்க் கள்வ னாகித்
தூர்த்தரோ டிசைந்த காலம்,
மாதரார் கயல்க ணென்னும்
வலையுள்பட்டழுந்து வேனைப்
போதரே என்று சொல்லிப்
புந்தியில் புகுந்து தன்பால்
ஆதரம் பெருக வைத்த
வழகனா ரரங்க மன்றே. 107

பொருள்: வஞ்சனை, களவு, சிற்றின்பம் இவற்றுள் உழன்று கொண்டிருந்த என்னை, வாவென்றழைத்து, என் மனத்துள் நுழைந்து, தன்னிடம் எனக்கு அன்பைப் பெருக்குவித்த அழகன் வதியுமூர் திருவரங்கமாகும்.

விரும்பிநின் றேத்த மாட்டேன்
 விதியிலேன் மதியொன் றில்லை
இரும்புபோல் வலிய நெஞ்சம்
 இறைஇறை யுருகும் வண்ணம்
அரும்பமர் சோலை சூழ்ந்த
 அரங்கமா கோயில் கொண்ட
கரும்பினைக் கண்டு கொண்டேன்
 கண்ணிணை களிக்கு மாறே! 108

பொருள்: அன்புடன் துதிக்கவோ, அஞ்சலி பண்ணவோ, ஈச்வரனை உண்டு என எண்ணவோ அறிவற்றதாயுள்ள இரும்பு போன்ற என் நெஞ்சமானது உருகுமாறு, கரும்பு போன்ற அரங்கனைக்கண்டு என் கண்கள் களிக்கின்றன. ஈதென்ன ஆச்சரியம்!

இனிதிரைத் திவலை மோத
 எறியும்தண் பரவை மீதே
தனிகிடந் தரசு செய்யும்
 தாமரைக் கண்ண னெம்மான்,
கனியிருந் தனைய செவ்வாய்க்
 கண்ணனைக் கண்ட கண்கள்
பனியரும் புதிரு மாலோ
 என்செய் கேன் பாவி யேனே! 109

பொருள்: காவிரியின் நடுவில் அரசு வீற்றிருக்கும் என் தலைவனுடைய கனியன்ன திருவதரத்தையும் திருக்கண்களை யும் காணப்பெற்ற என் கண்கள் ஆனந்தக் கண்ணீரைப் பெருக்குகின்றன. இதனால், அவனை நன்றாய்ச் சேவிக்கும் புண்ணியம் பெறாத யான் என் செய்வேன்.

குடதிசை முடியை வைத்துக்
 குணதிசைப் பாதம் நீட்டி,
வடதிசை பின்பு காட்டித்
 தென்திசை யிலங்கை நோக்கி,

கடல்நிறக் கடவு ளெந்தை
யரவணைத் துயிலுமா கண்டு,
உடலெனக் குருகு மாலோ
என்செய்கே னுலகத் தீரே! 110

பொருள்: உலகத்தவரே, கடல் நிறமுடைய என் தந்தை மேற்கில் திருமுடியையும், கிழக்கில் திருவடியையும், வடக்கில் பின்புறத்தையும் அமைத்து, தெற்குள்ள இலங்கையை நோக்கிக்கொண்டு, அரவணையில் கண் வளருகின்றான். இக்காட்சி என் உடலை உருக்குகின்றது. யான் என் செய்ய வல்லேன்!

பாயுநீ ரரங்கந் தன்னுள்
பாம்பணைப் பள்ளி கொண்ட
மாயனார் திருநன் மார்பும்
மரகத வுருவும் தோளும்
தூயதா மரைக்கண் களும்
துவரிதழ்ப் பவள வாயும்,
ஆயசீர் முடியும் தேசு
மடியரோர்க் ககல லாமே. 111

பொருள்: சொரூப ஞானம் பெற்ற அடியவர், காவிரியில் பாம்பணையில் பள்ளி கொண்ட மாயனது அழகிய மார்பு முதலிய அவயவங்களின் சேர்த்தி அழகைக் காணில் அவனை விட்டு அகல்வரோ? அகலமாட்டார்.

பணிவினால் மனமதொன்றிப்
பவளவா யரங்க னார்க்கு,
துணிவினால் வாழ மாட்டாத்
தொல்லைநெஞ் சே!நீ சொல்லாய்,
அணியனார் செம்பொ னாய
அருவரை யனைய கோயில்
மணியனார் கிடந்த வாற்றை
மனத்தினால் நினைக்க லாமே? 112

பொருள்: கோவிலில் எழுந்தருளி இருக்கும் அழகிய மணவாளனிடம் உறுதியுடன் நில்லாத என் நெஞ்சே, அவன் திருவரங்கத்தில் கண் வளர்ந்தருளும் விதத்தை மனத்தினால் அளவிட்டு அறிய முடியுமோ? நீ சொல்லாய்.

பேசிற்றே பேச லல்லால்
பெருமையொன் றுணர லாகாது,
ஆசற்றார் தங்கட் கல்லா
லறியலா வானு மல்லன்,
மாசற்றார் மனத்து ளானை
வணங்கிநா மிருப்ப தல்லால்,
பேசத்தா னாவ துண்டோ
பேதைநெஞ் சே!நீ சொல்லாய். 113

பொருள்: வேதங்களாலும் அறியவொண்ணாதவனும், குற்றமற்றவரால் அறியக்கூடியவனும், அவர்தம் மனத்தில் உறைபவனுமான அரங்கனை நாம் வணங்கி இருப்பதல்லால், அவனைப் பாசுரங்களால் பேசப் போமோ? நெஞ்சே, நீ உரைப்பாயாக.

கங்கையிற் புனித மாய
காவிரி நடுவு பாட்டு,
பொங்குநீர் பரந்து பாயும்
பூம்பொழி லரங்கந் தன்னுள்
எங்கள்மா லிறைவ னீசன்
கிடந்ததோர் கிடக்கை கண்டும்,
எங்ஙனம் மறந்து வாழ்கே
னேழையே னேழை யேனே! 114

பொருள்: கங்கையிலும் தூய்மையான காவிரியின் நீர்ப் பெருக்கால் பூத்த சோலைகளினால் சூழப்பட்ட கோவிலில் எழுந்தருளியிருக்கும் ஈசன் கண் வளரும் அழகினைக் கண்ட பின்பு, அறிவற்ற யான் எவ்விதத்தில் அவனை மறந்து வாழ்வேன்!

வெள்ளநீர் பரந்து பாயும்
விரிபொழி லரங்கந் தன்னுள்,
கள்வனார் கிடந்த வாறும்
கமலநன் முகமும் கண்டே
உள்ளமே! வலியை போலு
மொருவ னென் றுணர மாட்டாய்,
கள்ளமே காதல் செய்துன்
காலத்தைக் கழிக்கின் றாயே! 115

பொருள்: நெஞ்சமே, சோலைகளால் சூழப்பெற்ற கோவிலில் பள்ளி கொண்டிருக்கும் பெருமாளுடைய விதத்தையும், அவனுடைய திருமுக ஒளியையும் கண்டும், 'இவன் ஒப்பற்றவன்' என எண்ணாது, வஞ்சனையாய்ப் பத்தி செய்து காலத்தைக் கழிக்கின்றாயே! இது தகுதியாமோ?

குளித்துமூன் றனலை யோம்பும்
குறிகொளந் தணமை தன்னை,
ஒளித்திட்டே னென்க ணில்லை
நின்கணும் பத்த னல்லேன்,
களிப்பதென் கொண்டு நம்பீ!
கடல்வண்ணா! கதறு கின்றேன்,
அளித்தெனக் கருள்செய் கண்டா
யரங்கமா நகரு ளானே! 116

பொருள்: கடல் போன்ற நிறத்தையுடையவனே, அந்தணர் தருமங்களையும் கைவிட்டேன்; உன்னிடமும் உண்மை பத்தி கொண்டிலேன். இம்முறையில், எதைக்கொண்டு யான் மகிழ்வேன்? ஆனால், உன்னை இனிமை இன்றியேனும் அழைக்கின்றேன். எனக்கு அருள் புரிவாயாக.

போதெல்லாம் போது கொண்டுன்
பொன்னடி புனைய மாட்டேன்,
தீதிலா மொழிகள் கொண்டுன்
திருக்குணம் செப்ப மாட்டேன்,

சாதலால் நெஞ்ச மன்பு
　　கலந்திலே னதுதன். ஞலே,
எதிலே னரங்கர்க் கெல்லே
　　என்செய்வான் தோன்றினேனே. 117

பொருள்: மலர்களால் உன் திருவடியை அலங்கரியேன்; குற்றமற்ற மொழிகளால் உன் கலியாண குணங்களைப் பகர்ந்திலேன்; உன்னிடம் உண்மை அன்பு கொண்டிலேன். இத்தகைய யான் என்ன செய்ய இவ்வுலகில் தோன்றினேன்.

குரங்குகள் மலையை நூக்க
　　குளித்துத்தாம் புரண்டிட் டோடி,
தரங்கநீ ரடைக்க லுற்ற
　　சலமிலா வணிலம் போலேன்,
மரங்கள்போல் வலிய நெஞ்ச
　　வஞ்சனேன் நெஞ்சு தன்னால்.
அரங்கனார்க் காட்செய் யாதே
　　அளியத்தே னயர்க்கின் றேனே. 118

பொருள்: வானரர் மலைகளினால் அூர்க்கும் கடலை, தம் உடலில் ஒட்டிய சிறிது மணலால் அடைக்க ஆர்வங்கொண்ட அணிலத்தைப் போன்றவனும் அல்லேன்; கடிய நெஞ்சத்தையும் வஞ்சத்தையும் பெற்றவனாயுள்ளேன். இத்தகையவன் அரங்கனுக்கு அடிமை செய்யாமல் பயனற்றுப் போகிறேன்.

உம்பரா லறிய லாகா
　　ஒளியுளார் ஆனைக் காகி,
செம்புலா லுண்டு வாழும்
　　முதலைமேல் சீறி வந்தார்.
நம்பர மாய துண்டே
　　நாய்களோம சிறுமை யோரா,
எம்பிராற் காட்செய் யாதே
　　என்செய்வான் தோற்றி னேனே. 119

பொருள்: பகவான் கஜேந்திரனைக் காத்து முதலையை அழிக்க விரைந்து வந்தானென்றால், நம் ரக்ஷணத்தில் நமக்கென்ன உரிமை உளது? இங்ஙனம் நம் குற்றங்களை நோக்காது காக்கும் உபகாரனுக்கு அடிமை புரியாமல் என்ன செய்ய இங்குத் தோன்றினேன்!

ஊரிலேன் காணி யில்லை
உறவுமற் றொருவ ரில்லை,
பாரில்நின் பாத மூலம்
பற்றிலேன் பரம மூர்த்தி,
காரொளி வண்ணனே கண்ணனே
கதறு கின்றேன்,
ஆருளர் களைக ணம்மா!
அரங்கமா நகரு ளானே. 120

பொருள்: பரமனே நீ கோவில் கொண்டிருக்கும் ஊரில் பிறந்திலேன்; உனக்குப் பல்லாண்டு பாடும் இடத்தையும், நற்கூட்டுறவையும் பெற்றிலேன்; ஆனால், 'மேக வண்ணனே!' என உன்னை அழைக்கின்றேன். உன்னைத் தவிர எனக்கு இரக்ஷகர் யாருளர்? ஒருவருமிலர்.'

மனத்திலோர் தூய்மை யில்லை
வாயிலோர் இன்சொ லில்லை.
சினத்தினால் செற்றம் நோக்கித்
தீவிளி விளிவன் வாளா,
புனத்துழாய் மாலை யானே
பொன்னிசூழ் திருவ ரங்கா,
எனக்கினிக் கதியென் சொல்லாய்
என்னையா ளுடைய கோவே. 121

பொருள்: என்னை அடிமையாய்க் கொண்ட தலைவனே, மனத்திலோ தூய்மை இல்லை. வாயிலோர் இனிய சொல்லும் இல்லை. கோபத்தினால் வீணே பல கொடிய வார்த்தைகளைச் சொல்லுகின்றேன். இத்தகைய தீயனான எனக்குக் கதி யார்? சொல்லாய்!

தவத்துளார் தம்மி லல்லேன்
　　தனம்படைத் தாரி லல்லேன்,
உவர்த்தநீர் போல வென்றன்
　　உற்றவர்க் கொன்று மல்லேன்,
துவர்த்தசெவ் வாயி னார்க்கே
　　துவக்கறத் துரிச னானேன்,
அவத்தமே பிறவி தந்தாய்
　　அரங்கமா நகரு ளானே. 122

பொருள்: அரங்கநாதனே, உயர் தவமோ, நற்செல்வமோ வாய்ந்தவர் கூட்டத்தில் சேராதவனாயும், உறவினருக்கு உப்பு நீர் போன்று பயனற்றவனாயுமுள்ளேன்; பெண்களிடத்திலும் வஞ்சனையற்ற அன்பு காட்டுகின்றேனில்லை. இத்தகைய எனக்கு வீணே பிறவி தந்தனையே!

ஆர்த்துவண் டலம்புஞ் சோலை
　　யணிதிருவ ரங்கந் தன்னுள்,
கார்த்திர ளனைய மேனிக்
　　கண்ணனே! உன்னைக் காணும்,
மார்க்கமொன் றறிய மாட்டா
　　மனிசரில் துரிச னாய,
மூர்க்கனேன் வந்து நின்றேன்
　　மூர்க்கனேன் மூர்க்க னேனே. 123

பொருள்: மேகம் திரண்டதெனக் காணும் திருமேனியை உடைய கண்ணனே, உன்னைப் பெறும் உபாயம ஒன்றையும் அறியாத வஞ்சகனும், பிடித்ததை விடா மூர்க்கனுமான அடியேன் உன் முன் வந்து நிற்கின்றேன்.

மெய்யெல்லாம் போக விட்டு
　　விரிகுழ லாரிற் பட்டு,
பொய்யெல்லாம் பொதிந்து கொண்ட
　　போட்கனேன் வந்து நின்றேன்,

ஐயனே! அரங்க னே! உன்
அருளென்னு மாசை தன்னால்,
பொய்யனேன் வந்து நின்றேன்
பொய்யனேன் பொய்ய னேனே. 124

பொருள்: எனக்கு ஸ்வாமியானவனே, நினைவு, சொல், செயல் ஆகிய யாவற்றிலும் பொய்யனும், சிற்றின்பத்தில் ஆழ்ந்துள்ள அறிவு கேடனுமான யான், உன் அருளைப் பெறலாம் என்னும் ஆசையினால், நாணமின்றி உன் முன் வந்து நிற்கின்றேன்.

உள்ளத்தே யுறையும் மாலை
உள்ளுவா னுணர்வொன் றில்லாக்
கள்ளத்தே நானும் தொண்டாய்த்
தொண்டுக்கே கோலம் பூண்டேன்,
உள்ளுவா ருள்ளிற் றெல்லாம
உடனிருந் தறிதி யென்று,
வெள்கிப்போ யென்னுள் ளேநான்
விலவறச் சிரித்திட் டேனே. 125

பொருள்: என் நெஞ்சில் வதியும் இறைவனாகிய உன்னை நினைக்கும் அறிவில்லாதவனாய், வஞ்சனையாய் உன் தொண்டரைப் போன்று நடித்து, அவர்கள் செய்வனவெல்லாம் பொய்யாய்ச் செய்தேன்; ஆயினும், இதன் உண்மையை நீ அறிவாயென்று நாணமுற்று விலா ஒடியுமாறு சிரித்தேன்.

தாவியன் றுலக மெல்லாம்
தலைவிளாக் கொண்ட வெந்தாய்,
சேவியே னுன்னை யல்லால்
சிக்கெனச் செங்கண் மாலே,
ஆவியே! அமுதே! என்ற
னுருயி ரனைய வெந்தாய்,
பாவியே னுன்னை யல்லால்
பாவியேன் பாவி யேனே. 126

பொருள் : உலகங்களை ஈரடியால் அளந்த என் தந்தையே என்னுயிரே, அமுதே, உயிர்க்குயிரே, புண்டரீகாக்ஷனே, பாவியாகிய யான் உண்மையாக உன்னை அல்லாமல் வேறொருவருக்கு ஆட்செய்தலும், அவரை நினைத்தலும் செய்யேன்.

மழைக்கன்று வரைமு னேந்தும்
மைந்தனே ! மதுர வாறே,
உழைக்கன்றே போல நோக்கம்
உடையவர் வலையுள் பட்டு,
உழைக்கின்றேற் கென்னை நோக்கா
தொழிவதே உன்னை யன்றே ?
அழைக்கின்றேன் ஆதி மூர்த்தி !
அரங்கமா நகரு ளானே. 127

பொருள் : பசுக்களும் இடையரும் துன்புறுவண்ணம் மழையைத் தடுக்க மலையை ஏந்திய இனியவனே, சிற்றின்பத்தில் அகப்பட்டுத் துடிக்கும் என்னைக் கடைக்கண்ணால் நோக்குகின்றாயில்லை. ஆயினும், இரட்சகத்தில் ஆசையுடையனாய் உன்னை அழைக்கின்றேன். தாமதிப்பதற்குக் காரணம் யாதோ?

தெளிவிலாக் கலங்கல் நீர்சூழ்
திருவரங் கத்துள் ளோங்கும்
ஒளியுளார் தாமே யன்றே
தந்தையும் தாயு மாவார் ?
எளியதோ ரருளு மன்றே
என்திறத் தெம்பி ரானார்
அளியன்நம் பைய லென்னார்
அம்மவோ கொடிய வாறே ! 128

பொருள் : எனக்குத் தாயும் தந்தையுமாயுள்ள இவர், என்னைக் குளிர நோக்கி, 'இவன் நம் பையல்; நம் கருணைக்குப் பாத்திரபூதன்,' எனச் செப்பினபோதும்; என் இரக்கக் குரலைக் கேட்டும் அங்ஙனம் செப்புகின்றாரில்லை. இவர் இயல்பு மிகக் கொடிதாயுள்ளது !

மேம்பொருள் போக விட்டு
மெய்ம்மையை மிகவு ணர்ந்து,
ஆம்பரி சறிந்து கொண்டு
ஐம்புல னகத்த டக்கி,
காம்பறத் தலைசி ரைத்துன்
கடைத்தலை யிருந்து வாழும்
சோம்பரை உகத்தி போலும்
சூழ்புன லரங்கத் தானே. 129

பொருள்: அரங்கநாதனே, கைங்கரியமே புருஷார்த்தம் என்பதை அறிந்து, இந்திரியங்களை அடக்கி, வேறு பற்றுகளை அறவே நீக்கி, உன் திருவாயிலில் இருந்துகொண்டு, தம் நலத்தைத் தேடுவதில் சோம்பலுற்றிருப்பவரை உவக்கின்றனை போலும்!

அடிமையில் குடிமை யில்லா
அயல்சதுப் பேதிமாரில்
குடிமையில் கடைமைப் பட்ட
குக்கரில் பிறப்ப ரேலும்,
முடியினில் துளபம் வைத்தாய்
மொய்கழற் கன்பு செய்யும்
அடியரை யுகத்தி போலும்
அரங்கமா நகரு ளானே! 130

பொருள்: திருமுடியில் துளபத்தை அணிந்தவனே, நான்கு வேதங்களைக் கற்றும், உனக்கு அடிமை செய்வதே புருஷார்த்தம் என நினையாமலிருக்கும் மேற்குலத்தவரைக் காட்டிலும், உன் திருவடிகளில் அன்புடன் கைங்கரியம் புரியும் கீழ்க்குலத்தவரைக் கண்டு நீ உவப்பவனல்லவா?

திருமறு மார்வ! நின்னைச்
சிந்தையுள் திகழ வைத்து,
மருவிய மனத்த ராகில்
மாநிலத் துயிர்க ளெல்லாம்

வெருவுறக் கொன்று சுட்டிட்
டீட்டிய வினைய ரேனும்,
அருவினைப் பயன துய்யார்
அரங்கமா நகரு ளானே! 131

பொருள்: திருமகளை மார்பிற்கொண்டவனே, உலகத்தவர் நடுங்குமாறு உயிர்களைக் கொல்லுதல், சுடுதல் முதலிய செயல்களினால் மிகுந்த பாவங்களை உடையரேனும், உன்னை மனத்தில் வைத்து உண்மைப் பத்தி செய்வரேல், அவர் அப் பாவங்களின் பயனை அனுபவிக்க மாட்டார்.

'வானுளா ரறிய லாகா
வானவா!' என்ப ராகில்,
'தேனுலாந் துளப மாலைச்
சென்னியாய்!' என்ப ராகில்,
ஊனமா யினகள் செய்யும்
ஊனகா ரகர்க ளேனும்,
போனகம் செய்த சேடம்
தருவரேல் புனித மன்றே? 132

பொருள்: பிறரைச் சித்திரவதை செய்பவராயிருப்பினும், 'தேவர்களாலும் அறிய ஒண்ணாதவனே, திருத்துளபத்தைத் திருமுடியில் அணிந்தவனே,' என்பாராகில், அவர்கள் அமுது செய்து விஞ்சிய பிரசாதம் மற்றவரைப் புனிதராக்கும்.

'பழுதிலா வொழுக லாற்றுப்
பலசதுப் பேதி மார்கள்,
இழிகுலத் தவர்க ளேனும்
எம்மடி யார்க ளாகில்,
தொழுமினீர் கொடுமின் கொள்மின்,'
என்றுநின் னோடு மொக்க
வழிபட வருளி னாய்போன்ம்
மதிள்திருவ ரங்கத் தானே! 133

பொருள்: திருவரங்கனே, 'நான்கு வேதங்களையும் பயின்ற அந்தணர்களே, நம் அடியார் இழிகுலத்தில் பிறந்தவராயிருப்பினும், நீங்கள் அறிந்த அர்த்தங்களை அவர்கட்குச் சொல்லுங்கள்; அவர்கள் அறிந்தவற்றை நீங்கள் கேட்டுக் கொள்ளுங்கள்,' என நீ கட்டளையிட்டருளினாய்.

அமரவோ ரங்க மாறும்
வேதமோர் நான்கு மோதி,
தமர்களில் தலைவ ராய
சாதியந் தணர்க ளேனும்,
நுமர்களைப் பழிப்ப ராகில்
நொடிப்பதோ ரளவில் ஆங்கே
அவர்கள்தாம் புலையர் போலும்
அரங்கமா நகரு ளானே! 134

பொருள்: திருவரங்கனே, நான்கு வேதங்கள், ஆறு வேதாங்கங்கள் ஆகியவற்றை ஓதி, தாஸபூதரில் தலைவரான அந்தணர் குலத்தில் பிறந்தவராயிருப்பினும், உம்முடைய அடியவரை அவர்தம் கீழ்க்குலத்தை நோக்கிப் பழிப்பராகில், அவர்கள் அந்த விநாடியிலேயே சண்டாளராவார்கள்.

பெண்ணுலாம் சடையி னானும்
பிரம னுமுன்னைக் காண்பான்,
எண்ணிலா வூழி யூழி
தவஞ்செய்தார் வெள்கி நிற்ப
விண்ணுளார் வியப்ப வந்து
ஆனைக்கன் றருளை யீந்த
கண்ணறா உன்னை யென்றோ
களைகணாக் கருது மாறே? 135

பொருள்: உன் இயல்பை அறிய அளவற்ற காலம் தவஞ் செய்த சிவபிரானும் நான்முகனும், அது முடியாமையால் நாணி நிற்க, நித்திய சூரிகள் வியக்குமாறு கஜேந்திரனுக்கு அருள் புரிந்த மாயச் செயலையுடையவனே, யாங்கள் உன்னைத் தஞ்சமாய் நினைக்கும் பிரகாரம் யாது?

வளவெழும் தவள மாட
மதுரைமா நகரந் தன்னுள்
கவளமால் யானை வென்ற
கண்ணனை அரங்க மாலை
துளவத்தொண் டாய தொல்சீர்த்
தொண்டர டிப்பொ டிசொல்,
இளையபுன் கவிதை யேலும்
எம்பிராற் கினியவாறே. 136

பொருள்: செழுமை வாய்ந்த மதுரையில் குவலயாபீடத்தை அழித்த கண்ணனை அரங்கனைப்பற்றித் துளவத்தொண்டு புரிந்தவனும், பகவச்சேஷத்துவத்தின் எல்லையில் நின்றவனுமான தொண்டரடிப்பொடி சொல்லிய திருமாலை என்னும் இப்பிரபந்தம் குற்றமுடையதாயிருப்பினும், எனக்கு உபகாரனை பெரிய பெருமாளுக்கு இனிமையுடையதாயிருக்கும்.

தொண்டரடிப்பொடியாழ்வார் திருவடிகளே சரணம்.

தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச்செய்த

திருப்பள்ளியெழுச்சி

கதிரவன் குணதிசைச் சிகரம்வந் தணைந்தான்
கனவிரு ளகன்றது காலையம் பொழுதாய்,
மதுவிரிந் தொழுகின மாமல ரெல்லாம்
வானவ ரரசர்கள் வந்துவந் தீண்டி,
எதிர்திசை நிறைந்தன ரிவரொடும் புகுந்த
இருங்களிற் றீட்டமும் பிடியொடு முரசும்
அதிர்தலி லலைகடல் போன்றுள தெங்கும்
அரங்கத்தம் மா! பள்ளி யெழுந்தரு ளாயே. 137

பொருள்: பொழுது புலர்ந்தது. மலர்கள் மலர்ந்தன. தேவர்களும் அரசர்களும் அன்புடன் வந்து நிற்கின்றார்கள். யானையும் முரசும் கடலொலி போன்று ஒலிக்கின்றன. ஆதலின், அரங்கநாதனே, திருப்பள்ளியுணர்ந்து யாவருக்கும் அருள் புரிதல் வேண்டும்.

கொழுங்கொடி முல்லையின் கொழுமல ரணவிக்
கூர்ந்தது குணதிசை மாருத மிதுவோ,
எழுந்தன மலரணைப் பள்ளிகொள் ளன்னம்
ஈன்பனி நனைந்ததம் இருஞ்சிற குதறி,
விழுங்கிய முதலையின் பிலம்புரை பேழ்வாய்
வெள்ளெயி றுறவதன் விடத்தினுங் கனுங்கி
அழுங்கிய வானையின் அருந்துயர் கெடுத்த
அரங்கத்தம் மா! பள்ளி யெழுந்தரு ளாயே. 138

பொருள்: முல்லை மலரின் மணத்தோடுங் கூடிய கீழ்த் திசைக் காற்றானது வீசுகின்றது. தாமரையில் துயிலும் அன்னங்கள் விடிவு கண்டு தேனினால் நனைந்த தங்கள் சிறகு

களை உதறிக்கொண்டு கிளம்புகின்றன. ஆதலின், யானையின் துயரைத் தீர்த்த அரங்கநாதனே, நீ பள்ளியுணர்ந்தருளு வாயாக.

சுடரொளி பரந்தன சூழ்திசை யெல்லாம்
துன்னிய தாரகை மின்னொளி சுருங்கிப்
படரொளி பசுத்தனன் பனிமதி யிவனோ
பாயிருளகன்றது பைம்பொழில் கமுகின்
மடலிடைக் கீறிவண் பாளைகள் நாற
வைகறை கூர்ந்தது மாருத மிதுவோ,
அடலொளி திகழ்தரு திகிரியந் தடக்கை
அரங்கத்தம் மா!பள்ளி யெழுந்தரு ளாயே. 139

பொருள்: எங்கும் ஒளி வீச ஆதித்தன் உதயமானான். இருள் நீங்கியது. விண்மீன்களின் ஒளி மழுங்கியது. கமுக மரத்தின் பாளைகளினுடைய பரிமளம் வீசும் விடியற்காலக் காற்று மிகுந்தது. ஆகையால், மிக்க ஒளி பொருந்திய ஆழியைத் தாங்கிய திருக்கைகளையுடைய திருவரங்கனே, துயிலெழு வாயாக.

மேட்டிள மேதிகள் தளைவிடு மாயர்
வேய்ங்குழ லோசையும் விடைமணிக் குரலும்,
ஈட்டிய இசைதிசை பரந்தன வயலுள்
இரிந்தன சுரும்பினம் இலங்கையர் குலத்தை,
வாட்டிய வரிசிலை வானவ ரேறே
மாமுனி வேள்வியைக் காத்தவ பிரதம்
ஆட்டிய வடுதிற லயோத்தியெம் மரசே!
அரங்கத்தம் மா!பள்ளி யெழுந்தரு ளாயே. 140

பொருள்: ஆயர்களுடைய குழலோசையும், விருஷபங்களின் கழுத்திலிட்ட மணியினொலியும் எல்லாத்திக்குகளிலும் பரவ, அவ்வோசையினால் வண்டின் கூட்டங்கள் சிதறுண்டன. மித்திரர் வேள்வியைக் காத்து அரக்கரை அழித்த அயோத்தித் தலைவனான அரங்கனே, கண் விழிப்பாயாக.

புலம்பின புட்களும் பூம்பொழில் களின்வாய்
போயிற்றுக் கங்குல் புகுந்தது புலரி
கலந்தது குணதிசைக் கனைகட லரவம்
களிவண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த
அலங்கலந் தொடையல்கொண் டடியிணை பணிவான்
அமரர்கள் புகுந்தன ராதலி லம்மா!
இலங்கையர் கோன்வழி பாடுசெய் கோயில்
எம்பெரு மான்!பள்ளி யெழுந்தரு ளாயே. 141

பொருள்: பொழுது புலர்ந்தது. பறவைகளும், கடலும், வண்டுகளும் ஒலிககின்றன. தேவர்கள் உன்னுடைய திருவடிகளைத் தொழ, கலம்பகமலர் மாலைகளை ஏந்திக்கொண்டு நிற்கின்றார்கள். விபீஷணன் வழிபடும் இலங்கையில் எழுந்தருளியிருப்பவனே, திருப்பள்ளி உணர்ந்தருளல் வேண்டும்.

இரவியர் மணிநெடுந் தேரொடு மிவரோ
இறையவர் பதினொரு விடையரு மிவரோ
மருவிய மயிலின னறுமுக னிவனோ
மருதரும் வசுக்களும் வந்துவந் தீண்டி;
புரவியோ டாடலும் பாடலும் தேரும்
குமரதண் டம்புகுந் தீண்டிய வெள்ளம்,
அருவரை யனையநின் கோயில்முன் னிவரோ
அரங்கத்தம் மா!பள்ளி யெழுந்தரு ளாயே. 142

பொருள்: ஆதித்தர், உருத்திரர், அறுமுகன், மருதர், அஷ்ட வசுக்கள் முதலியவர் தத்தம் சேனைகளுடன் ஆடல் பாடல்களைப் புரிந்துகொண்டு, செம்பொன் மலையை ஒத்த உன் கோவிலின் முன் வந்து நின்றனர். அவர்களுக்கு அருள் செய்தற் பொருட்டுத் திருக்கண் விழித்தருளாய்.

அந்தரத் தமரர்கள் கூட்டங்க ளிவையோ,
அருந்தவ முனிவரும் மருதரு மிவரோ,
இந்திர னானையும் தானும்வந் திவனோ
எம்பெரு மானுன கோயிலின் வாசல்,

சுந்தரர் நெருக்கவிச் சாதரர் நூக்க
இயக்கரும் மயங்கினர் திருவடி தொழுவான்,
அந்தரம் பாரிட மில்லைமற் றிதுவோ
அரங்கத்தம் மா!பள்ளி யெழுந்தரு ளாயே. 143

பொருள்: எம்பெருமானே, நின் திருவடி தொழுதற் பொருட்டு, தேவரும், ஸப்த ரிஷிகளும், இந்திரனும், இனிய பண்பாடும் கந்தருவர் விச்சாதரர் இயக்கரும் எங்கும் இட மில்லையென்னுமாறு நின் கோவிலின் வாயிலில் வந்து நிறைந் தனர். ஆதலின், நீ பள்ளியெழுந்தருளாய்.

வம்பவிழ் வானவர் வாயுறை வழங்க
மாநிதி கபிலையொண் கண்ணாடி முதலா
எம்பெரு மான்படி மக்கலம் காண்டற்கு
ஏற்பன வாயின கொண்டுநன் முனிவர்
தும்புரு நாரதர் புகுந்தன ரிவரோ
தோன்றின னிரவியும் துலங்கொளி பரப்பி,
அம்பர தலத்தில்நின் றகல்கின்ற திருள்போய்
அரங்கத்தம் மா!பள்ளி யெழுந்தரு ளாயே. 144

பொருள்: வானவர், முனிவர், நாரதர் முதலியவர், அறு கம்புல், நிதிகள், பசுக்கள், பூரண கும்பம் முதலியவற்றைத் தாங்கிக்கொண்டு வந்துள்ளனர். ஆதித்தனொளியால் இருள் எங்கும் நில்லாது நசித்தது. கோவிலுக்குத் தலைவனே, கண் விழித்தருளாய்.

ஏதமில் தண்ணுமை யெக்கமத் தளியாழ்
குழல்முழ வமோடி சைதிசை கெழுமி,
கீதங்கள் பாடினர் கின்னரர் கெருடர்
கந்தரு வரவர் கங்குலு ளெல்லாம்.
மாதவர் வானவர் சாரண ரியக்கர்
சித்தரும் மயங்கினர் திருவடி தொழுவான்
ஆதலி லவர்க்குநா ளோலக்க மருள
அரங்கத்தம் மா!பள்ளி யெழுந்தரு ளாயே. 145

பொருள்: சிறுபறை, யாழ், குழல் முதலிய வாத்தியங்கள் இரவெல்லாம் எங்கும் ஒலிக்கின்றன. சாரணர் சித்தர் ஆகிய தேவர்கள் உம்மைச் சேவித்தற்பொருட்டு மயங்கி நிற்கின்றார்கள். அவர்கள் வாழுமாறு திருப்பள்ளி உணர்ந்தருளாய்.

கடிமலர்க் கமலங்கள் மலர்ந்தன விவையோ
கதிரவன் கனைகடல் முளைத்தன னிவனோ
துடியிடை யார்சுரி குழல்பிழிந் துதறித்
துகிலுடுத் தேறினர் சூழ்புன லரங்கா!
தொடையொத்த துளவமும் கூடையும் பொலிந்து
தோன்றிய தோள்தொண்ட ரடிப்பொடி என்னும்,
அடியனை அளியனென் றருளியுன் னடியார்க்
காட்படுத் தாய்பள்ளி யெழுந்தரு ளாயே. 146

பொருள்: காவிரி சூழ்ந்த அரங்கனே, மணம் நிறைந்த மலர்கள் மலர்ந்தன. கதிரவன் கடலில் முளைத்தான். துடி போன்ற இடையையுடைய மங்கையர் குளித்துக் கரையேறினர். உனது திவ்விய மங்கள விக்கிரகத்திற்கேற்ற திருத்துழாய் மாலையும் திருக்குடலையும் விளங்குகின்ற தோள்களை வாய்ந்தவனும், ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய திருவடிகளிலுண்டான ரேணுவென்கிற பெயரையுடையவனும் தாசபூதனுமான அடியேனை உன்னுடைய அடியார்க்கு ஆட்படுத்தியவனே, திருக்கண் விழிப்பாயாக.

தொண்டரடிப்பொடியாழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

திருப்பாணாழ்வார் அருளிச்செய்த

அமலனாதிபிரான்

அமல னாதிபி ரானடி யார்க்கென்னை யாட்படுத்த
விமலன் விண்ணவர் கோன்விரை யார்பொழில்
வேங்கடவன்,
நிமலன் நின்மலன் நீதி வானவன்
நீள்மதிளரங்கத் தம்மான் திருக்
கமல பாதம்வந் தென்கண்ணி னுள்ளன
வொக்கின்றதே. 147

பொருள்: பரிசுத்தனும், அடியார்க்கென்னை ஆட்படுத்தியவனும், திருமலையிலுள்ளவனுமான மதில் சூழ்ந்த அரங்கத் தலைவனுடைய திருவடிகள் என் கண்ணுக்கிலக்காயின.

உவந்த வுள்ளத்தனா யுலகமளந் தண்டமுற
நிவந்த நீண்முடியன் அன்று நேர்ந்த நிசாசரரைக்
கவர்ந்த வெங்கணைக் காகுத்தன் கடியார் பொழி
லரங்கத் தம்மானரைச்
சிவந்த வாடையின் மேல்சென்ற தாமென
சிந்தனையே. 148

பொருள்: பயனற்ற பொருள்களில் சென்ற என் சிந்தனையானது, உலகத்தை அளந்த நீண்ட முடியனும் கரதூஷணாதிகளை முடித்த காகுத்தனுமான அரங்கநாதன் திருவரையில் சாத்திய திருப்பீதாம்பரத்தின்மீது சென்றது. இஃதென்ன ஆச்சரியம்!

மந்தி யாய்வட வேங்கட மாமலை வானவர்கள்
சந்தி செய்யநின் றானரங் கத்தர வினணையான்,

அந்தி போல்நிறத் தாடையு மதன்மே லயனைப்
படைத்தோரெழில்,
உந்திமே லதன் றோவடியே னுள்ளத் தின்னுயிரே.

பொருள்: தமிழிற்கு எல்லை நிலமான திருவேங்கடமலையில் நின்றவனும், அரங்கத்தில் பள்ளி கொண்டவனுமான திருவரங்கனுடைய அயனைப் படைத்த திருநாபிக்கமலத்திலன்றோ, அடியேன் இருதயம் உள்ளது!

சதுர மாமதிள் சூழிலங் கைக்கிறை வன்தலைபத்
துதிர வோட்டியோர் வெங்கணை யுய்த்தவ
னோதவண்ணன்,
மதுர மாவண்டு பாடமாமயி லாடரங்கத் தம்மான்
திருவயிற்
றுதர பந்தன மென்னுள்ளத் துள்நின்று
லாகின்றதே. 150

பொருள்: இராவணன் தலை பத்தும் உதிருமாறு கணையைத் தொடுத்தவனும், குளிர்ந்த நிறமுடையவனுமான அரங்கநாதனது உதரபந்தம் என் நெஞ்சுள் உலாவுகின்றது.

பாரமாய பழவினை பற்றறுத் தென்னைத்தன்
வார மாக்கி வைத்தான் வைத்ததன்றி யென்னுள்
புகுந்தான்,
கோர மாதவம் செய்தனன்கொ லறியே னரங்கத்
தம்மான்திரு
வார மார்ப தன்றோ அடியேனை யாட்கொண்டதே.

பொருள்: அரங்கநாதன், என் பழவினைகளை அறுத்து, அவனுக்கு உரிமையாக்கி, என் இருதயத்திலும் புகுந்தான். இதற்கு யான் என்ன தவஞ்செய்தேனோ, அறியேன்! பெரிய பிராட்டியாரையும் முத்தாரத்தையும் உடைய அவ்வெம்பெருமானுடைய திருமார்பன்றோ என்னை அடிமை கொண்டது!

துண்ட வெண்பிறை யன்துயர் தீர்த்தவன்,
அஞ்சிறைய
வண்டு வாழ்பொழில் சூழரங்க நகர்மேய வப்பன்,
அண்ட ரண்டபகி ரண்டத்தொரு மாநில மெழு
மால்வரை முற்றும்
உண்ட கண்டங்கண் டீரடி யேனை யுய்யக்
கொண்டதே. 152

பொருள்: பிறையைச் சிரசில் அணிந்த சிவபிரானுடைய பாதகத்தைத் தீர்த்தவனும், வண்டுகள் வாழும் சோலை சூழ்ந்த அரங்கத்தில் கண் வளர்ந்தருளுகின்றவனும், எல்லா அண்டங்களையும் உண்டவனுமான என் அப்பன் திருக்கழுத்தன்றோ, என்னைச் சமுசாரத்தினின்றும் உய்யச் செய்தது!

கையினார் சுரிசங் கனலாழியர், நீள்வரைபோல்
மெய்யனார் துளப விரையார் கமழ்நீண் முடியெம்
ஐயனார், அணியரங்கனா ரரவினணை மிசை மேய மாயனார்,
செய்ய வாயையோ! என்னைச் சிந்தை கவர்ந்ததுவே. 153

பொருள்: சங்கு சக்கரங்களையும், அழகிய திருமேனியையும், திருத்துழாயினால் மணமிக்க திருவபிஷேகத்தையும் உடைய என் ஐயனுடைய பவளமன்ன திருவாய், பிற விஷயங்களில் ஈடுபட்டிருந்த என் மனத்தைக் கவர்ந்து, தன் பக்கல் இழுத்துக்கொண்டது.

பரியனாகி வந்த வவுண னுடல்கீண்ட, அமரர்க்
கரிய வாதிப்பிரா னரங்கத் தமலன் முகத்து,
கரிய வாகிப் புடைபரந்து மிளிர்ந்து செவ்வரியோடி,
நீண்டவப்
பெரிய வாய கண்க ளென்னைப் பேதைமை
செய்தனவே! 154

பொருள்: இரணிய கசிபுவின் சரீரத்தைக் கிழித்தவனும், தேவர்கட்கு அரியவனும், காரணபூதனும், தூய்மையுடையவனுமான அழகிய மணவாளனுடைய பரந்து செவ்வரி படர்ந்து காதளவும் நீண்ட கண்கள், கல் நெஞ்சனான என் அறிவை மயக்கித் தன் வசப்படுத்தின.

ஆலமா மரத்தி னிலைமே லொருபா லகனாய்,
ஞால மேழு முண்டா னரங்கத் தரவி னணையான்,
கோல மாமணி யாரமும் முத்துத் தாமமும்
முடிவில்லதோ ரெழில்
நீல மேனி யையோ! நிறைகொண்டதென்
நெஞ்சினையே. 155

பொருள்: உலகேழையும் வயிற்றில் கொண்டு, சிறு குழவியாய் ஆலந்தளிரில் சேர்ந்தவனான அழகிய மணவாளனுடைய முத்து மாலை அணிந்த கருநெய்தல் போன்ற அழகிய திருமேனி, என் நெஞ்சின் உறுதியை அழித்துக் கலங்குமாறு செய்தது.

கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெய்
உண்டவா யன்,என் னுள்ளம் கவர்ந்தானை,
அண்டர் கோனணி யரங்கன் என்னமுதினைக்
கண்ட கண்கள்,மற் றொன்றினைக் காணாவே. 156

பொருள்: மேகம் போன்ற நிறத்தை உடையவனாய், இடைக் குலத்தில் தோன்றி வெண்ணெயுண்ட திருப்பவளத்தை உடையவனாய், என் மனத்தைக் கவர்ந்தவனாய், தேவர்க்குத் தலைவனாய், அரங்கத்தில் அறிதுயில் புரிபவனாய், அமுதம் போன்றவனாய் உள்ள அரங்கனைச் சேவித்த என் கண்கள் வேறு எத்தகைய பொருளையும் காண விரும்பா.

திருப்பாணாழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

பெரிய திருமொழி

பள்ளியாவது....அரங்க மிரங்கவன் பேய்முலை,
பிள்ளையா யுயிருண்ட வெந்தை பிரான்....
. . . .
. . . . 157

பொருள்: கொடிய பூதனை கதறுமாறு, அவளுடைய பாலைச் சிறு குழவியாயிருந்தே உயிருடன் உறிஞ்சி அமுது செய்த கண்ணன் பள்ளிகொள்ளுமிடம் திருவரங்கமாகும்.

என்துணை யென்று எடுத்தேற்
கிறையேனு மிரங்கிற்றிலள்,
தன்துணை யாய வென்றன்
தனிமைக்கு மிரங்கிற் றிலள்,
வன்துணை வானவர்க்காய் வரஞ்செற்
றரங்கத் துறையும்,
இன்துணை வன்னொடும் போய்
எழிலாலி புகுவர் கொலோ. 158

பொருள்: வளர்த்த யான் தனியே இருப்பதற்காகவும் சிறிதும் இரக்கங்கொண்டாளில்லை. இராவணாதிகளை அழித்த இளைப்புத் தீரத் திருவரங்கத்தில் கண்வளரும் நற்றுணைவனான திருமாலோடு சென்று, இருவரும் அழகிய திருவாலி புகுவர் போலும்!

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

ஐந்தாம் பத்து—நான்காம் திருமொழி

உந்தி மேல்நான் முகனைப்படைத் தானுல குண்டவன்
எந்தை பெம்மான், இமையோர்கள் தாதைக்
கிடமென்பரால்,
சந்திரேனாடு மணியும் கொழிக்கும் புனற்காவிரி,
அந்தி போலும் நிறத்தார் வயல்சூழ்
தென்னரங்கமே. 159

பொருள்: சந்தன மரங்களுடன் இரத்தினங்களைக் கொழிக்கும் காவிரியும், கழனிகளும் சூழ்ந்த திருவரங்கம், பிரமனைப் படைத்து உலகை அமுது செய்த நித்திய சூரிகளின் தலைவனான பெருமானுக்கு இருப்பிடம் என்று சொல்லுவர்.

வையமுண் டாலிலை மேவு மாயன் மணிநீண்முடிப்
பைகொள் நாகத் தணையான் பயிலு மிடமென்பரால்,
தையல் நல்லார் குழல்மாலையும் மற்றவர் தடமுலைச்
செய்ய சாந்தும் கலந்திழி புனல்சூழ்
தென்னரங்கமே. 160

பொருள்: கற்புடைய மாதர் கூந்தலிலும் மார்பிலும் அணி மாலையும் சந்தனமும் கலந்து பாயும் காவிரியால் சூழப் பட்ட திருவரங்கம், உலகை உண்டு ஆலந்தளிரிலும், மணிமுடி யணிந்து நாகத்திலும் பள்ளிகொண்ட பெருமான் வதியுமிடம் என்பர்.

பண்டிவ் வைய மளப்பான்சென்று மாவலி கையில்நீர்
கொண்ட ஆழித் தடக்கைக் குறள னிடமென்பரால்,
வண்டு பாடும் மதுவார் புனல்வந் திழிகாவிரி
அண்ட நாறும் பொழில்சூழ்ந் தழகார்
தென்னரங்கமே. 161

பொருள்: தேன் சிந்தும் தீர்த்தம் நிறைந்த காவிரி யாலும் சோலைகளாலும் சூழப்பெற்ற தென்னரங்கம்,

உலகைத் தன் வசப்படுத்த மகாபலியினிடம் தான நீரை ஏற்ற வாமன மூர்த்தியினது இடம் என்பர்.

விளைத்த வெம்போர் விறல்வா ளரக்கன்
நகர்பாழ்பட
வளைத்த வல்வில் தடக்கை யவனுக் கிடமென்பரால்,
துளைக்கை யானை மருப்பு மகிலும்
கொணர்ந்துந்திமுன்
திளைக்கும் செல்வப் புனல்கா விரிசூழ்
தென்னரங்கமே. 162

பொருள்: யானைத் தந்தங்களையும் அகில் மரங்களையும் அடித்துக்கொண்டு வரும் காவிரி சூழ்ந்த அரங்கம், இலங்கை நகர் பாழ்படுமாறு வில்லைத் தன் கையில் தாங்கிய பெருமானுக்கு இடமாகும் என்பர்.

வம்புலாம் கூந்தல் மண்டோதரி காதலன் வான்புக,
அம்பு தன்னால் முனிந்த வழகனிடமென்பரால்,
உம்பர் கோனு முலகேழும் வந்தீண்டி வணங்குநல்
செம்பொ னரும் மதிள்சூழ்ந் தழகார்
தென்னரங்கமே. 163

பொருள்: நான்முகனும் ஏழுலகங்களும் வணங்கும் செம்பொனொத்த மதில்களால் சூழ்ந்த அழகிய தென்னரங்கம், மண்டோதரியின் கணவனான இராவணன் வீரச் சுவர்க்கம் சேருமாறு செய்த வீரனான இராமபிரான் வாழுமிடமாகும்.

கலையு டுத்த வகலல்குல் வன்பேய்மகள் தாயென
முலைகொ டுத்தா ளுயிருண்டவன் வாழு
மிடமென்பரால்,
குலையெடுத்த கதலிப் பொழிலூடும் வந்துந்தி,முன்
அலையெ டுக்கும் புனற்கா விரிசூழ் தென்னரங்கமே.

பொருள்: வாழைத் தோப்புக்குள் புகுந்து அம்மரங்களை வேரோடு பறித்து அலை வீசும் காவிரி பாயும் அரங்க நகர், தாயாகிய யசோதை போன்று வந்து, பாலுண்ணச் செய்த பேய்ச்சியின் உயிருண்ட கண்ணன் எழுந்தருளியிருக்குமிடம் என்பர்.

கஞ்சன் நெஞ்சும் கடுமல்லரும் சகடமும் காலினால்
துஞ்ச வென்ற சுடராழி யான்வாழு மிடமென்பரால்,
மஞ்சுசேர் மாளிகை நீடகில் புகையும்,மாமறையோர்
செஞ்சொல் வேள்விப் புகையும் கமழும்
தென்னரங்கமே. 165

பொருள்: உயர்ந்த மாளிகைகளில் உண்டான புகையும் அந்தணர்களின் யாகங்களிலிருந்துண்டான புகையும் சேர்ந்து மணம் வீசப்பெற்ற திருவரங்கம், கஞ்சனும், சகடாசுரனும் தொலையுமாறு திருவடியால் வென்ற ஒளி பொருந்திய திருவாழியையுடைய பெருமான் வதியுமிடமாகும்.

ஏனமீ னாமையோ டரியும் சிறுகு றளுமாய்,
தானு மாய தரணித் தலைவ னிடமென்பரால்,
வானும் மண்ணும் நிறையப் புகுந்தீண்டி வணங்கு
தேனும் பாலும் கலந்தன்ன வர்சேர் [நல்
தென்னரங்கமே. 166

பொருள்: விண்ணோரும் மண்ணோரும் சேர்ந்து வணங்கப் பெற்றதும், தேனும் பாலும் கலந்தன்ன பத்தர்கள் சேர்ந் திருப்பதுமான அரங்கம், பன்றி, மச்சம், ஆமை, நரசிம்மம், ஸ்ரீராமபிரான் ஆகிய திருவவதாரங்களை எடுத்த எம்பெரு மானுடைய இடம் என்பர்.

சேய னென்றும் மிகப்பெரியன் நுண்ணேர்மையி
னாயவிம்
மாயையை யாரு மறியா வகையா னிடமென்பரால்,

வேயின் முத்தும் மணியுங் கொணர்ந்
தார்புனற் காவிரி
ஆய பொன்மா மதிள்சூழ்ந் தழகார்
தென்னரங்கமே. 167

பொருள்: மூங்கில் முத்துகளையும் இரத்தினங்களையும் கொழிக்கும் காவிரியாலும் மதில்களாலும் சூழப்பட்ட அரங்கமானது, 'எப்போதும் எட்ட முடியாதவன், பெரியவன், நுட்பத் தன்மை வாய்ந்தவன்,' என்று சொல்லக் கூடிய ஆச்சரிய குணங்களை ஒருவராலும் அறிய முடியாதவனுன பகவான் வாழுமிடம் என்பர்.

அல்லி மாத ரமரும் திருமார்வன ரங்கத்தை,
கல்லின் மன்னு மதிள்மங் கையர்கோன்
கலிகன்றிசொல்
நல்லிசை மாலைகள் நாலிரண்டு மிரண்டுமுடன்
வல்லவர் தாமுல காண்டுபின் வானுல காள்வரே. 168

பொருள்: பெரிய பிராட்டியாரை மார்பில் கொண்ட திருவரங்கனைப் பற்றித் திருமங்கை நகருக்குத் தலைவரான ஆழ்வார் அருளிச் செய்த இசையோடுங் கூடிய இப்பத்துப் பாசுரங்களையும் மனத்துடன் ஓதவல்லவர், இவ்வுலக வாழ்வையும் பெற்றுப் பரமபத அனுபவத்தையும் பெறுவர்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

ஐந்தாம் பத்து—ஐந்தாந் திருமொழி

வெருவாதாள் வாய்வெருவி வேங்கடமே
வேங்கடமே யென்கின் றாளால்,
மருவாளா லென்குடங்கால் வாள்நெடுங்கண்
துயில்மறந்தாள், வண்டார் கொண்டல்

உருவாளன் வானவர்தம் உயிராளன்
ஒலிதிரைநீர்ப் பௌவங் கொண்ட
திருவாளன் என்மகளைச் செய்தனகள்
எங்ஙனம்நான் சிந்திக் கேனே! 169

பொருள்: என்மகள் சிறிதும் அஞ்சாதவளாய், 'வேங்கடமே! வேங்கடமே!' என்கின்றாள்: என் மடியிலும் பொருந்திலள்; கண்ணுறக்கமுங்கொண்டிலள்; வண்டையும் மேகத்தையும் போன்ற நிறத்தையுடையவனும், நித்திய சூரிகளையும், பிராட்டியையும் ஆள்பவனுமான எம்பெருமான், என் மகள் விஷயத்தில் செய்தவைகளை யான் நினைக்கத்தான் முடியுமோ!

'கலையாளா வகலல்குல் கனவளையும்
கையாளா வென்செய் கேன்நான்!
வினையாளா வடியேனை வேண்டுதியோ,
வேண்டாயோ?' என்னும்; மெய்ய
மலையாளன் வானவர்தம் தலையாளன்
மராமரமே ழெய்த வென்றிச்
சிலையாளன், என்மகளைச் செய்தனகள்
எங்ஙனம்நான் சிந்திக் கேனே! 170

பொருள்: என் மகள், 'என் அரை ஆடையையும், என் கைகள் வளைகளையும் தரிக்கின்றனவில்லை. எம்பெருமான் என்னைத் தனக்குரிய பணியாளாய் கொள்ள உளம் பற்றுவனோ பற்றானோ! என் செய்கேன்!'' என்கின்றாள். மராமரமெய்தவன் என் மகளைச் செய்தனவற்றை யான் எங்ஙனம் சிந்திப்பேன்!

மானாய மென்னோக்கி வாணெடுங்கண்
நீர்மல்கும்; வளையும் சோரும்;
தேனாய நறுந்துழாய் அலங்கலின்
திறம்பேசி யுறங்காள் காண்மின்;

காணுயன் கடிமனையில் தயிருண்டு
நெய்பருக நந்தன் பெற்ற
ஆனுயன், என்மகளைச் செய்தனகள்
அம்மனைமீர்! அறிகிலேனே! 171

பொருள்: என் மகளின் மானையொத்த கண்களில் நீர் நிரம்பியுள்ளது; வளைகளோ, கையினின்றும் நழுவுகின்றன; அவள் திருத்துழாய் மாலைகளின் பெருமைகளையே பிதற்றிக் கொண்டு துயிலற்றிருக்கின்ருள். அன்னைமீர்காள், காவலுள்ள வீடுகளிலும் தயிரையும் நெய்யையும் உண்டு திரியும் கோபாலன், என் மகளைச் செய்தபடிகளை யான் அறிகிலேன்!

தாய்வாயிற் சொற்கேளாள்; தன்னுயத்
தோடணையாள்; தடமென் கொங்கை
யேஆரச் சாந்தணியாள்; 'எம்பெருமான்
திருவரங்க மெங்கே?' என்னும்;
பேய்மாய முலையுண்டிவ் வுலகுண்ட
பெருவயிற்றன் பேசில் நங்காய்!
மாமாய னென்மகளைச் செய்தனகள்
மங்கைமீர்! மதிக்கிலேனே! 172

பொருள்: என் வார்த்தைகளையும் கேட்கின்ருளில்லை; தோழியருடன் கூடுவதில்லை; சாந்தணிவதில்லை; "என் ஸ்வாமி எழுந்தருளியிருக்கும் திருவரங்கம் எங்கே?" என்கிருள்; பூதனையின் பாலையும் இவ்வுலகையும் உண்ட பெரிய திருவயிற்றையுடைய மாயன், என் மகளுக்குச் செய்தனவற்றை அளவிட்டுச் சொல்ல வன்மை அற்றுள்ளேன்!

பூண்முலைமேல் சாந்தணியாள்; பொருகயல்கண்
மையெழுதாள் பூவை பேணுள்;
ஏணறியாள்; எத்தனையும் 'எம்பெருமான்
திருவரங்க மெங்கே?' என்னும்;

நாண்மலராள் நாயகனாய் நாமறிய
ஆய்ப்பாடி வளர்ந்த நம்பி,
ஆண்மகனா யென்மகளைச் செய்தனகள்
அம்மனைமீர்! அறிகி லேனே! 173

பொருள்: என் மகள் மார்பில் சந்தனமும், கண்களில் மையும் அணிகின்றாளில்லை; தான் வளர்த்த பூவையையும் ஆதரிக்கின்றாளில்லை; "என்னுதன் திருவரங்கம் எங்கே?" என்பது தவிர, வேறொன்றையும் நினைத்தல் இல்லை. பெரிய பிராட்டியின் தலைவனும் திருவாய்ப்பாடியில் வளர்ந்தவனு மான பெருமான், பெரிய ஆண் மகனாய் இவளைச் செய்தவை எனக்குத் தோன்றில!

'தாதாடு வனமாலை தாரானோ?'
என்றென்றே தளர்ந்தாள் காண்மின்;
யாதானு மொன்றுரைக்கில், 'எம்பெருமான்
திருவரங்கம் என்னும்; பூமேல்
மாதாளன் குடமாடி மதுசூதன்
மன்னர்க்காய் முன்னம் சென்ற
தூதாளன், என்மகளைச் செய்தனகள்
எங்ஙனம்நான் சொல்லு கேனே! 174

பொருள்: 'வனமாலையை எனக்குத் தாரானோ?' என்று சொல்லித் தளர்கின்றாள்; "எம்பெருமான் திருவரங்கம்" என்பது தவிர, வேறொன்றும் சொல்லிலள். பெரிய பிராட்டிக்கு நாதனும், மதுவைக் கொன்றவனும், குடக்கூத்தாடினவ னும், பாண்டவர்க்குத் தூது சென்றவனுமான பெருமான் என் மகளைச் செய்தனவற்றை யான் எவ்வாறு சொல்வேன்!

வாராரு மிளங்கொங்கை வண்ணம்வே
றாயினவா றெண்ணாள்; எண்ணில்
பேராளன் பேரல்லால் பேசாள்;இப்
பெண்பெற்றே னென்செய் கேன்நான்?

தாராளன் தண்குடந்தை நகராளன்
ஐவர்க்கா யமரி லுய்த்த
தேராளன், என்மகளைச் செய்தனகள்
எங்ஙனம்நான் செப்பு கேனே! 175

பொருள்: தன் கொங்கைகள் நிறம் வேறுபட்டதையும் நினைத்திலள்; அவன் திருநாமங்கள் தவிர வேறொன்றையும் பேசுகின்றாளில்லை. இப்படிப்பட்ட பெண்ணைப் பெற்ற யான் என் செய்கேன்! திருமாலை சார்த்திக் குடந்தை நகரை ஆள்பவனும் பாரதப் போரில் தேரை நடத்தியவனுமான பெருமான், என் மகளைச் செய்தவற்றை எங்ஙனம் சொல்லுகேன்!

'உறவாது மிலள்,' என்றென் றொழியாது
பலரேசு மலரா யிற்றால்,
மறவாதே எப்பொழுதும் 'மாயவனே!
மாதவனே!' என்கின் றாளால்;
பிறவாத பேராளன் பெண்ணாளன்
மண்ணாளன் விண்ணோர் தங்கள்
அறவாளன், என்மகளைச் செய்தனகள்
அம்மனைமீர்! அறிகி லேனே! 176

பொருள்: 'இப்பெண் உறவினரைக் கருதிலள்,' என்னும் பழி விளைந்தது. இவளோ, எப்போதும் மறவாமல், 'மாயவனே, மாதவனே,' என்கின்றாள். பிறவாதவனும், பெண் பிறவிகளைத் தனக்கென உடையவனும், மண்ணுலகத்தவரையும் விண்ணுலகத்தவரையும் ஆள்பவனுமான பெருமான் என் மகளைச் செய்தவை அம்மனைமீர், யான் அறிகிலேன்!

பந்தோடு கழல்மருவாள்; பைங்கிளியும்
பாலூட்டாள்; பாவை பேணாள்;
வந்தானோ 'திருவரங்கன் வாரானோ!'
என்றென்றே வளையும் சோரும்;

சந்தோகன் பௌழியனைந் தழலோம்பு
தைத்திரியன் சாம வேதி
அந்தோ! வந் தென்மகளைச் செய்தனகள்
அம்மனைநீர் அறிகிலேனே! 177

பொருள்: பந்தையும் கழற்காய்களையும் தொடுதல் இல்லை; கிளிக்குப் பாலூட்டுதலும், மரப்பாச்சியை நோக்குதலும் இல்லை; 'திருவரங்கன் வந்தானோ, வாரானோ!' என்று சொல்லிக்கொண்டே கைவளைகள் கழன்று வீழ நிற்கின்றாள். உபநிஷதத்தினாலும் வேதங்களினாலும் சொல்லப்படுபவனான எம்பெருமான் என் மகளைச் செய்தன அந்தோ! யானறியேன்!

சேலுகளும் வயல்புடைசூழ் திருவரங்கத்
தம்மானைச் சிந்தை செய்த
நீலமலர்க் கண்மடவாள் நிறையழிவைத்
தாய்மொழிந்த வதனை நேரார்
காலவேல் பரகாலன் கலிகன்றி
ஒலிமாலை கற்று வல்லார்,
மாலைசேர் வெண்குடைக்கீழ் மன்னவராய்ப்
பொன்னுலகில் வாழ்வர் தாமே. 178

பொருள்: கழனிகள் சூழ்ந்த திருவரங்கப் பெருமானைத் தியானித்து, கருநெய்தலன்ன கண்களையுடைய பரகால நாயகி அகமகிழ்ந்தமையைக் குறித்துத் தாய்ப் பாசுரமாய் வேலைத் தாங்கிய திருமங்கையாழ்வார் அருளிச்செய்த இம்மாலையை ஓதி உணர்ந்தவர், அரசராய் இம்மண்ணுலகை ஆண்டு, பரமபதத்தில் இன்புடன் வாழப் பெறுவர்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

ஐந்தாம் பத்து—ஆறாந் திருமொழி

கைம்மான மழகளிற்றைக்
கடற்கிடந்த கருமணியை
மைம்மான மரகதத்தை
மறையுரைத்த திருமாலை

எம்மானை எனக்கென்றும்
இனியானைப் பனிகாத்த
அம்மானை யான்கண்ட
தணிநீர்த்தென் னரங்கத்தே. 179

பொருள்: யானையையும் நீல மணியையும் மரகதத்தை யும் ஒத்தவனும், ஆநிரையைக் காத்தவனும் எனக்கு ஸ்வாமி யும், போக்கியனுமான திருமாலை அடியேன் சேவிக்கப் பெற் றது காவிரி பொருந்திய திருவரங்கத்திலாகும்.

பேரானைக் குறுங்குடியெம்
பெருமானைத் திருத்தண்கால்
ஊரானைக் கரம்பனூர்
உத்தமனை முத்திலங்கு
காரார்திண் கடலேழும்
மலையேழிவ் வுலகேழுண்டும்,
ஆராதென் றிருந்தானைக்
கண்டதுதென் னரங்கத்தே! 180

பொருள்: திருப்பேரை, திருக்குறுங்குடி, திருத்தண்கால், திருக்கரம்பனூர் முதலிய இடங்களில் வாழ்பவனும், ஏழு கடலை யும் ஏழுலகங்களையும் அமுது செய்தும் திருத்தியடையாதவனு மான பெருமானை, அடியேன் தரிசித்தது திருவரங்கமாகும்.

ஏனாகி யுலகிடந்தன்
றிருநிலனும் பெருவிசும்பும்
தானாய பெருமானைத்
தன்னடியார் மனத்தென்றும்
தேனாகி யமுதாகித்
திகழ்ந்தானை மகிழ்ந்தொருகால்
ஆனாய னானானைக்
கண்டதுதென் னரங்கத்தே. 181

பொருள்: வராகமாய்ப் பூமியைக் குத்தியெடுத்தவனும், விண்ணுலகத்தையும் மண்ணுலகத்தையும் தனக்கு உடலாய்க் கொண்டவனும், அடியார்கள் நெஞ்சுள் தேன் போன்றும் அமுதம் போன்றும் ஒளிருபவனும், பசு மேய்க்கும் இடைய னாய்ப் பிறந்தவனுமான கண்ணனை அடியேன் கண்டது திரு வரங்கத்திலாகும்.

வளர்ந்தவனைத் தடங்கடலுள்
        வலியுருவில் திரிசகடம்
தளர்ந்துதிர வுதைத்தவனைத்
        தரியாதன் றிரணியனைப்
பிளந்தவனைப் பெருநிலமீ
        ரடிநீட்டிப் பண்டொருநாள்
அளந்தவனை யான்கண்ட
        தணிநீர்த்தென் னரங்கத்தே. 182

பொருள்: திருப்பாற்கடலில் கண்வளர்ந்தவனும், வலிய சகடாசுரன் நிலை குலையுமாறு உதைத்தவனும், இரணியனைக் கிழித்தவனும், உலகையெல்லாம் அளந்துகொண்டவனுமான பெருமானை யான் சேவித்தது நீர் வளப்பம் பொருந்திய அழகிய அரங்கத்திலாகும்.

நீரழலாய் நெடுநிலனாய்
        நின்றானை யன்றரக்கன்
ஊரழலா லுண்டானைக்
        கண்டார்பின் காணாமே
பேரழலாய்ப் பெருவிசும்பாய்ப்
        பின்மறையோர் மந்திரத்தின்
ஆரழலா லுண்டானைக்
        கண்டதுதென் னரங்கத்தே. 183

பொருள்: நீர் நிலம் நெருப்பாய் நின்றவனும், இலங் கையை நெருப்பிற்கு இரையாக்கியவனும், பரமபதத்தை நடத்துபவனும், மறையோர் தரும் அவிஸ்ஸை அக்கினியின்

வாயிலாய் அமுது செய்பவனுமான பெருமானை, யான் தென்னரங்கத்தில் கண்டு சேவித்தேன்.

தஞ்சினத்தைத் தவிர்த்தடைந்தார்
தவநெறியைத் தரியாது,
கஞ்சனைக்கொன் றன்றுலகம்
உண்டுமிழ்ந்த கற்பகத்தை
வெஞ்சினத்த கொடுந்தொழிலோன்
விசையுருவை யசைவித்த
அஞ்சிறைப்புட் பாகனையான்
கண்டதுதென் னரங்கத்தே. 184

பொருள்: தன்னைப்பற்றினவருக்கு உபாயமாயிருப்பவனும், கஞ்சனைக்கொன்றவனும், உலகை உண்டு உமிழ்ந்த உபகாரனும், சிவபிரானைப் பாணாசுரன் போரில் சலிக்கச் செய்தவனும், பெரிய திருவடியை நடத்துபவனுமான பெருமானை யான் கண்டு சேவித்தது திருவரங்கத்திலாகும்.

சிந்தனையைத் தவநெறியைத்
திருமாலைப் பிரியாது
வந்தெனது மனத்திருந்த
வடமலையை வரிவண்டார்
கொந்தணைந்த பொழில்கோவல்
உலகளப்பா னடிநிமிர்த்த
அந்தணனை யான்கண்ட
தணிநீர்த்தென் னரங்கத்தே. 185

பொருள்: சிந்திக்கத் தக்கவனும், உபாயனும், திருமகள் கொழுநனும், திருவேங்கட மலையை விட்டு என் மனத்தை இமையும் விட்டகலாதவனும், பொழில் சூழ் திருக்கோவலூரில் உலகையளக்கத் திருவடிகளை நீட்டியவண்ணம் சேவையளிப்பவனுமான பெருமானை யான் கண்டது அழகிய திருவரங்கத்தேயாகும்.

துவரித்த வுடையவர்க்கும்
தூய்மையிலாச் சமணர்க்கும்
அவர்கட்கங் கருளில்லா
அருளானைத் தன்னடைந்த
எமர்கட்கு மடியேற்கும்
எம்மாற்கு மெம்மனைக்கும்
அமரர்க்கும் பிரானரைக்
கண்டதுதென் னரங்கத்தே. 186

பொருள்: பௌத்தர் சமணர்களாகிய அவைதிகர்க்கு அருள் புரியாதவனும், வைதிகரிடம் அருள் கொண்டவனும், அவனையே பற்றியுள்ள என்னைச் சார்ந்தவர்க்கும், என் பெற்றோருக்கும், அடியேனுக்கும், நித்திய சூரிகளுக்கும் தலைவனுயுள்ளவனுமான பெருமானை யான் திருவரங்கத்தே கண்டேன்.

பொய்வண்ணம் மனத்தகற்றிப்
புலனைந்தும் செலவைத்து
மெய்வண்ணம் நினைந்தவர்க்கு
மெய்ந்நின்ற வித்தகனை
மைவண்ணம் கருமுகில்போல்
திகழ்வண்ண மரகதத்தின்
அவ்வண்ண வண்ணனையான்:
கண்டதுதென் னரங்கத்தே. 187

பொருள்: பொய்யகற்றி, ஐம்புலன்களையும் அப்பாற்படுத்தித் தன்னை நினைத்தவர்க்குத் தன் சொரூபத்தை உள்ளபடி காட்டும் வித்தகனும், அஞ்சனம் காளமேகம் மரகதம் இவற்றின் நிறத்தைத் தனக்கு நிறமாய்க் கொண்டவனுமான பெருமானை யான் கண்டது தென்னரங்கத்தேயாகும்.

ஆமருவி நிரைமேய்த்த அணியரங்கத் தம்மானை
காமருசீர்க் கலிகன்றி யொலிசெய்த மலிபுகழ்சேர்
நாமருவு தமிழ்மாலை நாலிரண்டோ டிரண்டினையும்
தாமருவி வல்லார்மேல் சாராதீ வினைதானே. 188

பொருள்: பசுக்கூட்டங்களை மேய்த்தவனும், திருவரங்கத்தில் எழுந்தருளியிருப்பவனுமான பெருமானைக் குறித்துச் சீர்மை வாய்ந்த திருமங்கையாழ்வார் அருளிச் செய்த நாவிற்கினிய இப்பாசுரங்கள் பத்தையும் விரும்பிக் கற்பவரிடம் பாவங்கள் அணுகா.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

ஐந்தாம்பத்து—ஏழாந் திருமொழி

பண்டைநான் மறையும் வேள்வியும் கேள்விப்
பதங்களும் பதங்களின் பொருளும்
பிண்டமாய் விரிந்த பிறங்கொளி யனலும்
பெருகிய புனலொடு நிலனும்
கொண்டல்மா ருதமும் குரைகட லேழும்
ஏழுமா மலைகளும் விசும்பும்
அண்டமும் தானாய் நின்றவெம் பெருமான்
அரங்கமா நகரமர்ந் தானே. 189

பொருள்: வேதங்கள், யாகங்கள், பதம், பதப்பொருள், ஐம்பூதங்கள், ஏழுகடல், ஏழுமலை, ஆகாயம் இவற்றோடுங்கூடிய பிரமாண்டமும் தன்னுள் அடங்குமாறு நிலைபெற்ற எம்பெருமான், திருவரங்க நகரத்தில் எழுந்தருளியுள்ளான்.

இந்திரன் பிரம னீசனென் றிவர்கள்
எண்ணில்பல் குணங்களே யியற்றத்
தந்தையும் தாயும் மக்களும் மிக்க
சுற்றமும் சுற்றிநின் றகலாப்
பந்தமும் பந்த மறுப்பதோர் மருந்தும்
பான்மையும் பல்லுயிர்க் கெல்லாம்
அந்தமும் வாழ்வு மாயவெம் பெருமான்
அரங்கமா நகரமர்ந் தானே. 190

பொருள்: இந்திரன் பிரமன் உருத்திரன் முதலியவரால் துதிக்கப்பெற்றவனும், உயிர்களுக்கு எல்லா விதச் சுற்றமுமாய் இருப்பவனும், பற்றறுக்கும் மருந்தும், தூய தன்மையும் அழிவு வாழ்வுகளும் தானேயாயிருப்பவனுமான ஸ்வாமி, திருவரங்கத்தில் அமர்ந்துள்ளான்.

மன்னுமா நிலனும் மலைகளும் கடலும்
வானமும் தானவ ருலகும்,
துன்னுமா யிருளாய்த் துலங்கொளி சுருங்கித்
தொல்லைநான் மறைகளும் மறையப்
பின்னும்வா னவர்க்கும் முனிவர்க்கும் நல்கிப்
பிறங்கிருள் நிறங்கெட ஒருநாள்
அன்னமா யன்றங் கருமறை பயந்தான்
அரங்கமா நகரமர்ந் தானே. 191

பொருள்: நிலம், மலை, கடல், வானம், அசுரர் இருப்பிடம் ஆகிய யாவும் இருளால் மறையப்பெற்றனவாய், ஒளி மழுங்கி வேதங்களும் மறைய, தேவர்க்கும் ரிஷிகளுக்கும் அருள்கூர்ந்து இருள் நீங்குமாறு செய்து வேதங்களை உபகரித்தவன் அரங்கமாநகரில் கண் வளர்ந்தருளுகிறான்.

மாயிருங் குன்ற மொன்றுமத் தாக
மாசுண மதனொடு மளவிப்
பாயிரும் பௌவம் பகடுவிண் டலறப்
படுதிரை விசும்பிடைப் படரச்
சேயிரு விசும்பும் திங்களும் சுடரும்
தேவரும் தாமுடன் திசைப்ப
ஆயிரந் தோளா லலைகடல் கடைந்தான்
அரங்கமா நகரமர்ந் தானே. 192

பொருள்: மந்தரமலையில் வாசுகியைச் சுற்றி, பெரிய கடல் ஒலிக்கவும், அதன் அலைகள் வானத்துறவும், தேவதை

கள் சந்திரன் முதலியவர் வியக்கவும் அதனை ஆயிரந்தோள்களால் கடைந்தவன், அரங்கமா நகரில் எழுந்தருளியிருக்கிறான்.

எங்ஙனே யுய்வர் தானவர் நினைந்தால்
இரணிய னிலங்குபூ ணகலம்
பொங்குவெங் குருதி பொன்மலை பிளந்து
பொழிதரு மருவியொத் திழிய
வெங்கண்வா ளெயிற்றோர் வெள்ளிமா விலங்கல்
விண்ணுறக் கனல்விழித் தெழுந்த
தங்ஙனே யொக்க வரியுரு வானான்
அரங்கமா நகரமர்ந் தானே. 193

பொருள்: இரணியன் மார்பிலிருந்து பெருகும் உதிரம் மேருமலை அருவிபோன்று பெருக, அஞ்சத்தக்க கண்களையும் வாளன்ன பற்களையும் உடைய ஒரு வெள்ளிமலை ஆகாயத்தைக் கிட்டித் தீ விழித்தது போன்ற நரசிம்ம அவதாரங்கொண்டவன் அரங்க நகர் அமர்ந்தான்.

ஆயிரம் குன்றம் சென்றுதொக் கனைய
அடல்புரை எழில்திகழ் திரள்தோள்
ஆயிரந் துணிய அடல்மழுப் பற்றி
மற்றவ னகல்விசும் பணைய
ஆயிரம் பெயரா லமரர்சென் றிறைஞ்ச
அறிதுயி லலைகடல் நடுவே
ஆயிரம் சுடர்வா யரவணைத் துயின்றான்
அரங்கமா நகரமர்ந் தானே. 194

பொருள்: ஆயிரம் மலைகள் சேர்ந்தனபோன்று, திரட்சியும் அழகும் வாய்ந்த கார்த்தவீரியார்ச்சுனனுடைய ஆயிரந் தோள்களையும் துணித்து, அவனை வீரசுவர்க்கம் அடையுமாறு செய்து, தேவர்கள் துதிக்க ஆயிர முகங்களையுடைய திருவனந்தாழ்வான் திருப்பள்ளியில் யோக நித்திரை பண்ணும் பெருமான், அரங்கத்தில் எழுந்தருளியுள்ளான்.

சுரிகுழல் கனிவாய்த் திருவினைப் பிரித்த
கொடுமையில் கடுவிசை யரக்கன்
எரிவிழித் திலங்கு மணிமுடி பொடிசெய்
திலங்கைபாழ் படுப்பதற் கெண்ணி,
வரிசிலை வளைய அடுசரம் துரந்து
மறிகடல் நெறிபட மலையால்
அரிகுலம் பணிகொண் டலைகட்டல் அடைந்தான்
அரங்கமா நகரமர்ந் தானே. 195

பொருள்: வனப்பு வாய்ந்த பிராட்டியை வேறுபடுத்திய கொடிய இராவணனுடைய மணி முடியைப் பொடிபடுத்தி இலங்கையை அழிக்க எண்ணி, வில் வளைத்து, அம்புகள் தொடுத்து, வானரர்களால் அலைகடலை அணை கட்டிய பெருமான், திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ளான்.

ஊழியா யோமத் துச்சியா யொருகால்
உடையதே ரொருவனாய் உலகில்
சூழிமால் யானைத் துயர்கெடுத் திலங்கை
மலங்கவன் றடுசரந் துரந்து,
பாழியால் மிக்க பார்த்தனுக் கருளிப்
பகலவ னொளிகெடப் பகலே
ஆழியா லன்றங் காழியை மறைத்தான்
அரங்கமா நகரமர்ந் தானே. 196

பொருள்: காலம் யாகம் முதலியவற்றிற்குத் தலைவனாய், சூரியனிடமுள்ளவனாய், கஜேந்திரன் துன்பந்துடைத்தவனாய், இலங்கை அழிய அம்பெய்தவனாய், அருச்சுனனிடம் அருள் கூர்ந்து சக்கராயுதத்தால் சூரியனை மறைத்தவனாய் உள்ள பெருமான், அரங்கமா நகரில் பள்ளி கொண்டுள்ளான்.

பேயினார் முலையூண் பிள்ளையா யொருகால்
பெருநிலம் விழுங்கிய துமிழ்ந்த
வாயனாய் மாலா யாலிலை வளர்ந்து
மணிமுடி வானவர் தமக்குச்

சேயனாய் அடியேற் கணியனாய் வந்தென்
　　சிந்தையுள் வெந்துய ரறுக்கும்
ஆயனா யன்று குன்றமொன் றெடுத்தான்
　　அரங்கமா நகரமர்ந் தானே. 197

பொருள்: பூதனையின் பாலையுண்டவனாய், உலகை உண்டு உமிழ்ந்த திருப்பவளத்தையுடையவனாய், ஆலந்தளிரில் கண் வளரும் ஈச்வரனாய், தேவர்கட்கும் எட்டாதவனாய், அடியேனுக்கு அணியனாய், என் நெஞ்சின் துக்கங்களைப் போக்குபவனாய், கோவர்த்தனத்தைக் குடையாயெடுத்தவனாய் உள்ள பெருமான், அரங்கமா நகரத்தில் எழுந்தருளியுள்ளான்.

பொன்னுமா மணியும் முத்தமும் சுமந்து
　　பொருதிரை மாநதி புடைசூழ்ந்து
அன்னமா டுலவும் அலைபுனல் சூழ்ந்த
　　அரங்கமா நகரமர்ந் தானை
மன்னுமா மாட மங்கையர் தலைவன்
　　மானவேல் கலியன்வா யொலிகள்
பன்னிய பனுவல் பாடுவார் நாளும்
　　பழவினை பற்றறுப் பாரே. 198

பொருள்: பொன்னும் மணியும் முதலியவைகளை வீசும் காவிரியும், அன்னங்கள் உலாவும் தடாகங்களும் சூழ்ந்த திருவரங்கம் பெரிய கோவிலில் திருக்கண் வளரும் பெருமானைப் பற்றித் திருமங்கைக்குத் தலைவரும், வேலாயுதத்தையுடையவருமான் திருமங்கையாழ்வார் அருளிய இப்பாசுரங்களைப் பாடுபவர்கள், பழவினை நீங்கி வாழ்வார்கள்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

ஐந்தாம் பத்து—எட்டாந் திருமொழி

ஏழை யேதலன் கீழ்மக னென்னு
திரங்கி மற்றவற் கின்னருள் சுரந்து,
'மாழை மான்மட நோக்கியுன் தோழி;
உம்பி யெம்பி' என் றொழிந்திலை உகந்து,
'தோழ னீயெனக் கிங்கொழி' என்ற
சொற்கள் வந்தடி யேன்மனத் திருந்திட,
ஆழி வண்ணநின் னடியிணை யடைந்தேன்
அணிபொ ழில்திரு வரங்கத்தம் மானே! 199

பொருள்: திருவரங்கத்தில் எழுந்தருளியிருக்கும் கடல் வண்ணனே, குகனை, "இவன் அறிவற்றவன்; கீழ்க் குலத்தவன்," எனக் கருதாமல், அருள் புரிந்து, "சீதா பிராட்டி உனக்குத் தோழி; இலக்குமணன் உனக்குத் தம்பி; எனக்கோ நீ நண்பன்," என அருளுடன் இயம்பியவை அடியேன் மனத்திருத்தலால் உன் திருவடிகளைச் சரணமாய்ப் பற்றினேன்.

வாத மாமகன் மர்க்கடம் விலங்கு
மற்றோர் சாதியென் றொழிந்திலை உகந்து
காத லாதரம் கடலினும் பெருகச்
செய்த கவினுக் கில்லைகைம் மாறென்று,
கோதில் வாய்மையி னுயொடு முடனே
உண்ப னென்ற ஒண்பொருள் எனக்கும்
ஆதல் வேண்டுமென் றடியிணை யடைந்தேன்
அணிபொ ழில்திரு வரங்கத்தம் மானே! 200

பொருள்:- திருவரங்கத்தில் கண் வளரும் இறையே, காற்றின் மைந்தனை அனுமானை மிருகமென்றும் குரங்கென்றும் கருதாது, அவனிடம் அன்பு கடலினும் வளர அவன் செய்த உதவிகளுக்கு எதிர் உதவி இல்லை யென்று, "யான் உன்னோடு இருந்து ஒக்க உண்பேன்!" எனக் கூறிய ஒப்பற்ற தன்மை என் மாட்டும் உண்டாக வேண்டுமென உன் திருவடிகளை வந்தடைந்தேன்.

கடிகொள் பூம்பொழில் காமரு பொய்கை
வைகு தாமரை வாங்கிய வேழம்
முடியும் வண்ணமோர் முழுவலி முதலை
பற்ற மற்றது நின்சரண் நினைப்ப,
கொடிய வாய்விலங் கின்னுயிர் மலங்கக்
கொண்ட சீற்றமொன் றுண்டுள தறிந்துன்
அடிய னேனும்வந் தடியிணை அடைந்தேன்
அணிபொ ழில்திரு வரங்கத்தம் மானே! 201

பொருள்: மணம் பொருந்திய தாமரையைப் பறித்த வேழம் முடியுமாறு முதலை பற்ற, அதனால் வருந்திய அவ்வேழம் உன் திருவடிகளைத் தியானிக்க, முதலையின் உயிர் சிதையுமாறு கோபத்தை வருவித்துக்கொண்டதைத் தெரிந்து உன் திருவடிகளை வந்தடைந்தேன்.

நஞ்சு சோர்வதோர் வெஞ்சின வரவம்
வெருவி வந்துநின் சரணெனச் சரணாய்,
நெஞ்சிற் கொண்டுநின் னஞ்சிறைப் பறவைக்
கடைக்க லம்கொடுத் தருள்செய்த தறிந்து,
வெஞ்சொ லாளர்கள் நமன்தமர் கடியர்
கொடிய செய்வன வுளவதற் கடியேன்
அஞ்சி வந்துநின் னடியிணை யடைந்தேன்
அணிபொ ழில்திரு வரங்கத்தம் மானே! 202

பொருள்: நஞ்சுள்ள கொடிய சுமுகன் என்னும் அரவம் கருடனுக்கு அஞ்சி உன்னைச் சரணடைய, அப்பாம்பைக் கருடனிடம் அடைக்கலப் பொருளாய் ஒப்புவித்துப் பாதுகாத்த உன் திறத்தைத் தெரிந்து, அடியேன் நமனுடைய தூதுவர் மரண காலத்தில் செய்யும் கொடுந்தொழிலிற்கு அஞ்சி, திருவரங்கனே, உன் திருவடித் தாமரைகளைப் பற்றினேன்.

மாக மாநிலம் முழுதும்வந் திறைஞ்சும்
மலர டிகண்ட மாமறை யாளன்,
தோகை மாமயி லன்னவ ரின்பம்
துற்றி லாமையில், 'அத்த! இங் கொழிந்து
போகம் நீயெய்திப் பின்னுநம் மிடைக்கே
போது வாய்,' என்ற பொன்னரு ளெனக்கும்
ஆக வேண்டுமென் றடியிணை யடைந்தேன்
அணிபொ ழில்திரு வரங்கத்தம் மானே! 203

பொருள்: திருவரங்கத்துத் தலைவனே, பரமபதத்திலும், இவ்வுலகிலும் மற்ற இடங்களிலும் உள்ள யாவரும் வணங்கும் உன் திருவடிகளைச் சேவித்த பிராமணன் ஒருவனுடைய கருத்தை அறிந்து, "அப்பா, நீ இவ்வுலக போகங்களையனுபவித்துவிட்டு நம்மிடம் வா," என்றருளிச் செய்த உன் சிறந்த அருள் எனக்கும் ஆகவேண்டுமென உன் அடியிணை அடைந்தேன்.

மன்னு நான்மறை மாமுனி பெற்ற
மைந்த னைமதி யாதவெங் கூற்றந்
தன்னை யஞ்சி,நின் சரணெனச் சரணாய்த்
தகவில் காலனை யுகமுனிந் தொழியா,
பின்னை யென்றும்நின் திருவடி பிரியா
வண்ண மெண்ணிய பேரரு ளெனக்கும்
அன்ன தாகுமென் றடியிணை யடைந்தேன்
அணிபொ ழில்திரு வரங்கத்தம் மானே! 204

பொருள்: திருவரங்க நாதனே, மிருகண்டு முனிவரின் மகன் மார்க்கண்டேயன், கொடிய நமனுக்கு அஞ்சி, உன்னைச் சரணம் பற்ற, யமனைக் கோபித்து, அவன் உன் திருவடிகளை விட்டுப் பிரியாதவாறு செய்த உனது சிறந்த திருவருள் எனக்கும் கிடைக்கவேண்டுமென உன் திருவடிகளைப் பற்றினேன்.

ஓது வாய்மையும் உவனியப் பிறப்பும்
உனக்கு முன்தந்த அந்தண னொருவன்,
'காத லென்மகன் புகலிடங் காணேன்!
கண்டு நீதரு வாயெனக் கென்று
கோதில் வாய்மையி னானுனை வேண்டிய
குறைமு டித்தவன் சிறுவனைக் கொடுத்தாய்;
ஆத லால்வந்துன் னடியிணை யடைந்தேன்
அணிபொ ழில்திரு வரங்கத்தம் மானே! 205

பொருள்: அரங்கத்தில் பள்ளிகொள்பவனே, வேதத்தை ஓதுவித்த பொய்யில்லாத சாந்தீபினி என்னும் அந்தணன், "என் புத்திரன் சென்ற இடம் அறியேன்! அவனைத் தேடி எனக்குத் தரவேண்டும்," என்றிறைஞ்ச, அவன் மகனைக் கொணர்ந்து கொடுத்து அவன் குறையைத் தீர்த்தருளினாய்; ஆதலால், உன் பாதங்களை வந்து பற்றினேன்.

வேத வாய்மொழி யந்தண னொருவன்,
'எந்தை! நின்சர ணென்னுடை மனைவி
காதல் மக்களைப் பயத்தலும் காணாள்
கடிய தெய்வங்கொண் டொளிக்குமென் [றழைப்ப,
ஏதலார் முன்னே யின்னருளவர்க்குச்
செய்துன் மக்கள்மற் றிவரென்று கொடுத்தாய்;
ஆத லால்வந்துன் னடியிணை யடைந்தேன்
அணிபொ ழில்திரு வரங்கத்தம் மானே! 206

பொருள்: திருவரங்கனே, வேதமுணர்ந்த அந்தணன் ஒருவன், உன்னையணுகி, "எந்தையே, என் மனைவி ஆவளுடன் பெறும் மக்களை ஒரு கொடிய தெய்வம் எங்கோ மறைத்துவிடுகிறது," எனத் தன் குறையைத் தெரிவிக்க, அவனுக்கு அருள் புரிந்து அம்மக்களைக் கொணர்ந்து கொடுத்தருளின செயற்கரிய இச்செயலைச் செய்தாயாகையால், உன் திருவடிகளை வந்தடைந்தேன்.

துளங்கு நீள்முடி அரசர்தம் குரிசில்
தொண்டை மன்னவன் திண்டிற லொருவற்கு
உளங்கொ ளன்பினோ டின்னருள் சுரந்தங்
கோடு நாழிகை யேழுட னிருப்ப,
வளங்கொள் மந்திரம் மற்றவற் கருளிச்
செய்த வாறடி யேனறிந் துலகம்
அளந்த பொன்னடி யேயடைந் துய்ந்தேன்
அணிபொ ழில்திரு வரங்கத்தம் மானே! 207

பொருள்: அரங்கனே, விளங்கும் திருமுடியையுடைய தொண்டைமான் சக்கரவர்த்தியினிடம் அன்பும் அருளும் சுரந்து, அவன் வாழ்நாள் பயன்படுமாறு நீ திருமந்திரத்தையும் அதன் பொருளையும் அவனுக்கு உபதேசித்த முறையை அறிந்து, உலகளந்த உன் பொன்னடியடைந்து உய்வடைந்தேன்.

மாட மாளிகை சூழ்திரு மங்கை
மன்ன னொன்னலர் தங்களை வெல்லும்
ஆடல் மாவல வன்கலி கன்றி
அணிபொ ழில்திரு வரங்கத்தம் மானை
நீடு தொல்புக ழாழிவல் லானை
எந்தை யைநெடு மாலை நினைந்த
பாடல் பத்திவை பாடுமின் தொண்டீர்!
பாட நும்மிடைப் பாவம்நில் லாவே. 208

பொருள்: திருமங்கை நாட்டிற்குத் தலைவரும், பகைவரை வெல்லும் ஆட்டக் குதிரையைச் செலுத்தும் வன்மையுடைய வருமான திருமங்கையாழ்வார், அரங்கத்தில் பள்ளி கொள்பவனும், சீரிய ஆழியை விடுதலில் வல்லவனும், எம் தலைவனுமான ஸ்ரீமந்நாராயணனை நினைந்து அருளிச்செய்த பாசுரங்கள் இப்பத்தையும் ஓதுவீரேல், தொண்டர்களே, உங்களிடம் பாவங்கள் நிற்கமாட்டா.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

ஆறும் பத்து—ஆறுந் திருமொழி

தாராளன் தண்ணரங்க வாளன் பூமேல்
தனியாளன் முனியாள ரேத்த நின்ற
பேராளன் ஆயிரம்பே ருடைய வாளன்
பின்னைக்கு மணவாளன் . . . . . .
. . . . 209

பொருள்: மாலைகளை அணிந்து திருவரங்க நகரை ஆள்பவன், பெரிய பிராட்டிக்கும் நப்பின்னைக்கும் மணவாளனும், ரிஷிகள் துதிக்கும் பெருமையையும் ஆயிரந் திருநாமங்களையும் உடையவனுமாவான்.

ஏழாம் பத்து—மூன்றுந் திருமொழி

உரங்களா லியன்ற மன்னர் மாளப்
பாரதத் தொருதே ரைவர்க்காய்ச் சென்று
இரங்கி யூர்ந்தவர்க் கின்னருள் செய்யும்
எம்பி ரானைவம் பார்புனல் காவிரி
அரங்க மாளியென் னாளி 210

பொருள்: வன்மை வாய்ந்த துரியோதனாதிகள் மாளப் பாண்டவர்க்கு மனமிரங்கித் தேர் நடத்தி அருள் புரிந்தவனும், காவிரியால் சூழப்பட்ட திருவரங்கத்தை ஆள்பவனுமான ஸ்வாமி என்னை ஆள்பவனாவான்.

எட்டாம் பத்து—இரண்டாந் திருமொழி

தரங்கநீர் பேசினும் தண்மதி காயினும்,
இரங்குமோ? எத்தனை நாளிருந் தெள்கினாள்?
துரங்கம்வாய் கீண்டுகந் தானது தொன்மையூர்,
அரங்கமே என்பது இவள்தனக் காசையே. 211

பொருள் : பன்னாட்களாய் அரங்கனிடம் ஈடுபட்டிருக்கும் இவள், கடல் அலை ஒலித்தற்கும், சந்திரன் காய்தற்கும் இரங்க மாட்டாள். குதிரை வடிவாய் ஊறு செய்ய வந்த கேசியின் வாய் பிளந்த பெருமானுடைய பழைய திவ்யதேச மாகிய அரங்கத்தைச் சொல்லிக்கொண்டிருப்பதே இவள் ஆசையாயிருக்கிறது.

ஒன்பதாம் பத்து—ஒன்பதாந் திருமொழி

புனைவளர் பூம்பொழிலார் பொன்னிசூழ்
அரங்க நகருள்
முனைவனை மூவுல கும்படைத் தமுதல்
மூர்த்தி தன்னைக்
கனைகழல் காணுங்கொ லோகயல்
கண்ணியெம் காரிகையே! 212

பொருள் : புன்னை மரச்சோலையுடையதும், திருக்காவிரி யால் சூழப்பட்டதுமான பெரிய கோவிலில் திருக்கண் வளரும் மூன்று லோகங்களையும் படைத்த மூர்த்தியை, கயல் போன்ற கண்களையுடைய என் மகள் சேவிக்கப் பெறுவளோ!

பதினோராம் பத்து—மூன்றாந் திருமொழி

கண்ணன் மனத்துள்ளே நிற்கவும், கைவளைகள்
என்னோ கழன்ற! இவையென்ன மாயங்கள்!
பெண்ணானோம் பெண்மையோம் நிற்க, அவன்மேய
அண்ணல்..........அரங்கமும் பாடோமே! 213

பொருள் : கண்ணன் நெஞ்சிலுள்ளே நிலைத்திருக்கவும், கைவளைகள் கழன்றனவே! இவை என்ன மாயச் செயல்கள்! பெண் குலத்தில் பிறந்த நாம் எவ்வளவு அழகாய்ப் பெண் மையை உடையவராயிருக்கின்றோம்! இது நிற்க. அவன் வதியும் திருவரங்கத்தையும பாடுகின்றோமில்லையே!

பதினோராம் பத்து—எட்டாந் திருமொழி

அணியார் பொழில்சூ ழரங்க நகரப்பா!
துணியே னினிநின் னருளல் லதெனக்கு,
மணியே! மணிமா ணிக்கமே! மதுசூதா!
பணியாய் எனக்குய் யும்வகை பரஞ்சோதி! 214

பொருள்: திருவரங்கத்தில் எழுந்தருளியிருக்கும் என் தந்தையே, இனி உன்னருளன்றி வேறொன்றையும் எனக்குத் தஞ்சமாக நினைத்திலேன். நீலரத்தினம் போன்றவனே, மதுவை அழித்த பரஞ்சோதியே நீ யான் பிறவி நீங்கி உய்யுமாறு ஒரு நல்வார்த்தை அருள்வாய்.

ஸ்ரீ:

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

திருக்குறுந்தாண்டகம்

இம்மையை மறுமை தன்னை
எமக்குவீ டாகி நின்ற
மெய்ம்மையை விரிந்த சோலை
வியன் திரு வரங்கம் மேய
செம்மையைக் கருமை தன்னை
தன்மையை நினைவா ரென்றன்

. . . .

தலைமிசை மன்னு வாரே. 215

பொருள்: நமக்கு இம்மை மறுமை இன்பங்களையும், வீட்டையும் தருபவனும், திருவரங்கத்தில் வாசஞ்செய்பவனும், செம்மை கருமை நிறங்களையுடையவனுமான எம்பெருமானுடைய சீலத்தை நினைப்பவர்கள் என் தலையில் பொருந்தத் தக்கவர்கள்.

ஆவியை யரங்க மாலை
அழுக்குடம் பெச்சில் வாயால்
தூய்மையில் தொண்ட னேன்நான்
சொல்லினேன் தொல்லை நாமம்;
பாவியேன் பிழைத்த வாறென்
றஞ்சினேற் கஞ்ச லென்று
காவிபோல் வண்ணர் வந்தென்
கண்ணுள்ளே தோன்றி னாரே. 216

பொருள்: உலகங்கட்கெல்லாம் உயிராய் திருவரங்கத்திலிருக்கும் எம்பெருமானைத் தூய்மையற்ற யான் என் அழுக்

குடம்போடுங்கூடிய எச்சில் வாயால் துதிக்க அவன் திருநாமங்களைச் சொன்னேன். அத்தகைய எனக்குக் கருங்குவளை நிறத்தையுடைய அப்பெருமான், சேவையளித்தான்.

இரும்பனன் றுண்ட நீரும்
போதரும் கொள்க, என்றன்
அரும்பிணி பாவ மெல்லாம்
அகன்றன வென்னை விட்டு,
சுரும்பமர் சோலை சூழ்ந்த
அரங்கமா கோயில் கொண்ட
கரும்பினைக் கண்டு கொண்டென்
கண்ணிணை களிக்கு மாறே. 217

பொருள்: போக்க முடியாத பாவங்கள் யாவும் என்னை விட்டு நீங்கின. மாண்பமைந்த திருவரங்கத்தை வாழிடமாகக் கொண்ட இனிய எம்பெருமானை என் கண்கள் பார்த்த வண்ணமாய் மகிழ்கின்றன. இஃதென்ன ஆச்சரியம்! இதனால், காய்ச்சிய இரும்புண்ட நீரும் வெளிப்படும் எனக் கொள்ள வேண்டியிருக்கிறது.

பிண்டியார் மண்டை யேந்திப்
பிறர்மனை திரிதந் துண்ணும்
உண்டியான் சாபம் தீர்த்த
ஒருவனூர், உலக மேத்தும்
. . . . அரங்கம் . . . . . .
மண்டினார் உய்ய லல்லால்
மற்றையார்க் குய்ய லாமே? 218

பொருள்: சிவபிரானுடைய சாபந்தீர்த்த ஒப்பற்ற எம்பெருமானுடைய திருப்பதியாயும், உலகத்தவரால் ஏத்தப்பட்ட தாயுமுள்ள அரங்கத்தை அடைந்தவர் உய்வதல்லாமல், மற்றையோர் உய்ய வழியுண்டோ? இல்லை.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ :

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

திருநெடுந்தாண்டகம்

பட்டுடுக்கும் அயர்ந்திரங்கும் பாவை பேணாள்
பனிநெடுங்கண் ணீர்ததும்பப் பள்ளி
கொள்ளாள்;
எட்டனைப்போ தென்குடங்கா லிருக்க கில்லாள்;
'எம்பெருமான் திருவரங்க மெங்கே?'
என்னும்;
மட்டுவிக்கி மணிவண்டு முரலுங் கூந்தல்
மடமானை யிதுசெய்தார் தம்மை மெய்யே
கட்டுவிச்சி சொல்லென்னச் சொன்னாள்: 'நங்காய்!
கடல்வண்ண ரிதுசெய்தார்; காப்பா ராரே?' 219

பொருள்: இளமான் போன்ற பரகாலநாயகி, பட்டுடுத்தல், பாவை பேணல், உறங்குதல், என் மடியிலிருத்தல் ஆகியவற்றை அறவே விட்டாள். "இவளுக்கு இந்நிலையைப் பிறப்பித்தவர் கடலன்ன நிறம் வாய்ந்த பெருமான்," எனக் கட்டுவிச்சி கூறுகின்றாள். நங்கைமீர்காள், இரட்சிக்கும் எம்பெருமானே இவளை இங்ஙனம் செய்வானாயின், இவ்வாபத்தைப் போக்குபவர் யார்?

நெஞ்சுருகிக் கண்பனிப்ப நிற்கும் சோரும்
நெடிதுயிர்க்கு முண்டறியா ளுறக்கம் பேணாள்;
'நஞ்சரவில் துயிலமர்ந்த நம்பீ!' என்னும்;
'வம்பார்பூம் வயலாலி மைந்தா!' வென்னும்;
அஞ்சிறைய புட்கொடியே யாடும் பாடும்;
'அணியரங்க மாடுதுமோ தோழீ!' என்னும்;
என்சிறகின் கீழடங்காப் பெண்ணைப் பெற்றேன்
இருநிலத் தோர்பழி படைத்தேன் ஏபாவமே!

பொருள்: "இம்மகள் மனமுருகிக் கண்ணீர் சிந்திப் பெருமூச்சு விடுகின்ருள்; உணவும் உறக்கமும் கொண்டிலள்; 'அரங்கத்தில் துயிலும் நம்பியே, காளையே,' என்கின்ருள். பெரிய திருவடியைப் போன்றே நடிக்கின்ருள்; 'திருவரங்கத் துறையில் நீராடப் பெறுவோமோ?' என்கின்ருள். "அந்தோ! எனக்கு அடங்காத பெண்ணைப் பெற்று உலகில் பெரும்பழியைத் தேடிக்கொண்டேனே!" என்கிருள் நற்ருய்.

'முளைக்கதிரைக் குறுங்குடியுள் முகிலை மூவா
மூவுலகும் கடந்தப்பால் முதலாய் நின்ற
அளப்பரிய ஆரமுதை யரங்கம் மேய
அந்தணனை அந்தணர்தம் சிந்தை யானை
. . . .
. . . . திருமாலைப் பாடக் கேட்டு,
வளர்த்ததனுல் பயன்பெற்றேன் வருக,' என்று
மடக்கிளியைக் கைகூப்பி வணங்கி ஞளே. 221

பொருள்: என் மகள் தான் வளர்த்த கிளி, இளஞ்சந்திரனைப் போன்றவனும், மூவுலகங்களும் கடந்த பரமபதத்தில் வீற்றிருப்பவனும், அமுதம் போன்று திருவரங்கத்தில் பொருந்தியவனுமான திருமாலைப் பாடக்கேட்டு, 'உன்னை வளர்த்ததனுல் பயன் பெற்றேன்!' என்று அக்கிளியை அஞ்சலி செய்தனள்.

கார்வண்ணம் திருமேனி; கண்ணும் வாயும்
கைத்தலமும் அடியிணையும் கமல வண்ணம்;
பார்வண்ண மடமங்கை பத்தர் பித்தர்
பனிமலர்மேல் பாவைக்குப் பாவம் செய்தேன்!
ஏர்வண்ண வென்பேதை யென்சொல் கேளாள்;
'எம்பெருமான் திருவரங்க மெங்கே?' என்னும்;
. . . .
இதுவன்ருே நிறையழிந்தார் நிற்கு மாறே? 222

பொருள்: பாவியேன் பெற்ற மகளானவள், என் சொல்லைக் கேட்கின்றாளில்லை; 'திருமாலின் திருமேனி காளமேகம் போன்றும், திருக்கண்கள், அதரம், கரம், திருவடிகள் தாமரை போன்றும் உள்ளன!' என்கின்றாள்; 'பூமி பிராட்டிக்கு வசப்பட்டவனும், பெரிய பிராட்டியிடம் காதல் கொண்டவனுமான எம்பெருமானுடைய திருவரங்கம் எங்கே?' என்கின்றாள். பெண்மையை இழந்தவர் நிலை இங்ஙனமே இருக்கும் போலும்!

முற்றாரா வனமுலையாள் பாவை மாயன்
    மொய்யகலத் துள்ளிருப்பா ளஃதும் கண்டும்
அற்றாள்தன் நிறையழிந்தா ளாவிக் கின்றாள்;
    'அணியரங்க மாடுதுமோ தோழீ! என்னும்;
பெற்றேன்வாய்ச் சொல்லிறையும் பேசக் கேளாள்;
. . . .
. . . .
    பொருவற்றா ளென்மகள்உம் பொன்
                    னுமஃதே. 223

பொருள்: ஒப்பற்ற என் மகள், சித்திரமன்ன திருமகள் எம்பெருமான் திருமார்பில் வாழ்வதைப் பார்த்தும், அவனிடமே அன்புடையளாய் நிறை அழிந்தாள்; "தோழீ, திருவரங்க நாதனுகிய பொய்கையில் ஆடுவோமா?" என்கின்றாள். பெற்ற தாயாகிய என் சொற்களுக்குச் சிறிதும் செவி சாற்றிலள். மங்கையர்களே, உங்கள் பெண்ணின் தன்மையும் இங்ஙனமே உள்ளதோ?

'உள்ளூரும் சிந்தைநோய் எனக்கே தந்தென்
    ஒளிவளையும் மாநிறமும் கொண்டா ரிங்கே;
'தெள்ளூரும் இளந்தெங்கின் தேறல் மாந்திச்
    சேலுகளும் திருவரங்கம் நம்மூர்,' என்னக்
கள்ளூரும் பைந்துழாய் மாலை யானைக்
    கனவிடத்தில் யான்காண்பன்; கண்ட போது,
'புள்ளூரும் கள்வா! நீ போகேல்!' என்பன்;
    என்றாலு மிதுநமக்கோர் புலவி தானே. 224

பொருள்: 'தோழீ, சிந்தை நோயை என் ஒருத்திக்கே தந்து, என் அழகிய வளைகளையும், என் நிறத்தையும் கொள்ளை கொண்டு, திருவரங்கம் நம் இருப்பிடம்' எனச் செப்பிப் போந்தார். அப்பெருமானைக் கனவில் காணுங்கால், "என்னை விட்டுப் பிரியலாகாது!" என்கின்றேன்; ஆனாலும், அவருடன் கலந்த கலவியானது வருத்தத்துடனேயே முடிவடைகிறது!

இருகையில்சங் கிவைநில்லா எல்லே பாவம்!
இலங்கொலிநீர்ப் பெரும்பௌவம்
மண்டி யுண்ட
பெருவயிற்ற கருமுகிலே யொப்பர் வண்ணம்;
பெருந்தவத்த ரருந்தவத்து முனிவர் சூழ,
ஒருகையில்சங் கொருகைமற் றாழி யேந்தி
உலகுண்ட பெருவாய ரிங்கே வந்தென்
பொருகயல்கண் ணீரரும்பப் புலவி தந்து,
புனலரங்க மூரென்று போயி னாரே. 225

பொருள்: உலகமுண்டவரும், கருத்த மேகமொத்தவருமான எம்பெருமான், இங்கு வந்து, என் கண்களில் நீர் ததும்ப, காதல் துன்பத்தை விளைவித்து, கைகளில் சங்கு சக்கரங்களைத் தாங்கியவராய், தம்மூர் திருவரங்கம் என்று சொல்லிப் போயினார். அப்போதே என் சங்க வளைகள் கழன்றொழிந்தன. இஃதென்ன பாவமோ!

மின்னிலங்கு திருவுருவும் பெரிய தோளும்
கரிமுனிந்த கைத்தலமும் கண்ணும் வாயும்
தன்னலர்ந்த நறுந்துழாய் மலரின் கீழே
தாழ்ந்திலங்கு மகரம்சேர் குழையும் காட்டி,
என்னலனு மென்னிறைவு மென்சிந் தையும்
என்வளையும் கொண்டென்னை யாளும் கொண்டு,
பொன்னலர்ந்த நறுஞ்செருந்திப் பொழிலி னூடே
புனலரங்க மூரென்று போயி னாரே. 226

பொருள்: எம்பெருமான் மின்னல் போன்ற திருமேனி, திருத்தோள், குவலயாபீடத்தைப் புடைத்த திருக்கைகள், திருக்கண்கள், திரு அதரம், திருத்துழாய் மாலையின் கீழ் விளங்குகின்ற மகர குண்டலங்கள் முதலியவற்றைக் காட்டி, என்னுடைய அழகு அடக்கம், நெஞ்சம், கைவளை ஆகியவற்றைக் கவர்ந்துகொண்டதுமல்லாமல், என்னை அடிமையுமாக்கி, 'சோலை சூழ்ந்த நீர்வளம் மிக்க அரங்கநகர் எம்மூர்,' என்று சொல்லிப் போய்விட்டார்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

சிறிய திருமடல்

ஆராமம் சூழ்ந்த அரங்கம். அடி, 71 227

பொருள்: அழகிய தோட்டங்கள் சூழ்ந்த திருவரங்கம்.

பெரிய திருமடல்

மன்னு மரங்கத்தெம் மாமணியை. அடி, 118. 228

பொருள்: திருவரங்கத்தில் நித்திய வாசம் செய்யும் நம் கையாளாக அமையக் கூடிய நீலமணி போன்றவனை

ஸ்ரீ:

பொய்கையாழ்வார் அருளிச்செய்த

முதல் திருவந்தாதி

ஒன்றும் மறந்தறியே னோதநீர் வண்ணனையான்
இன்று மறப்பனோ? ஏழைகாள்!—அன்று
கருவரங்கத் துட்கிடந்து கைதொழுதேன் கண்டேன்
திருவரங்கம் மேயான் திசை. 229

பொருள்: அறிவு கேடர்களே, மறக்கக்கூடிய கர்ப்பத்தி லிருந்தபோதே, திருவரங்கனை மறவாது அஞ்சலி செய்த யான், ஞானம் பெற்ற இன்று அந்நீலவண்ணனை எங்ஙனம் மறப்பேன்!

பொய்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பூதத்தாழ்வார் அருளிச்செய்த

இரண்டாம் திருவந்தாதி

மனத்துள்ளான்; . . . . மற்றும்
நினைப்பரிய நீளரங்கத் துள்ளான்;—எனைப்பலரும்
தேவாதி தேவ னெனப்படுவான், முன்னொருநாள்
மாவாய் பிளந்த மகன். 230

பொருள்: 'தேவாதி தேவன், கேசியின் வாய் கீண்டவன், கடலில் பள்ளி கொண்டவன்' எனப் பலராலும் சொல்லப்படு பவனும், இன்பம் நிறைந்த அரங்கத்தில் பள்ளி கொள்பவனு மான அரங்கன் என் மனத்துள் நித்திய வாசஞ்செய்கிறான்.

பயின்றது அரங்கம் . . . .
. . . .
. . . .
மணிதிகழும் வண்தடக்கை மால். 231

பொருள்: நீலமணி போன்றவனும், நீண்ட திருக்கைகளை உடையவனுமான எம்பெருமான், நித்திய வாசம் செய்தருளு மிடம் திருவரங்கமாகும்.

தமருள்ளம் . . தலையரங்கம் . . .
. . . .
. . . .
ஏவல்ல எந்தைக் கிடம். 232

பொருள்: எதிரிகளைத் தொலைக்கும் அம்பெய்வதில் வல்ல எம்பெருமானுக்குத் தொண்டருடைய உள்ளமும் சிறந்த அரங்கமும் இருப்பிடமென்பர்.

திறம்பிற் றினியறிந்தேன் தென்னரங்கத் தெந்தை
திறம்பா வழிசென்றார்க் கல்லால்—திறம்பாச்
செடிநரகை நீக்கித்தாம் செல்வதன்முன் வானோர்
கடிநகர வாசற் கதவு. 233

பொருள்: தென்னரங்கத்தின் எம்பெருமானே உபாய உபேயம் என நினைத்து ஒழுகுபவரே, ஸம்சாரப்பற்றுகளை அறுத்துக்கொண்டு வைகுந்தம் புகுவர். மற்றையார்க்கு அக் கதவு மூடிக்கொள்ளும்.

பூதத்தாழ்வார் திருவடிகளே சரணம்.

பேயாழ்வார் அருளிச்செய்த

மூன்றாம் திருவந்தாதி

விண்ணகரம் . . . .
. . . .
. . . . தேனார் திருவரங்கம் . . .
தன்குடங்கை நீரேற்றான் தாழ்வு. 234

பொருள்: தேன் வெள்ளமிடும் சோலைகள் நிறைந்த திருவரங்கம், மாவலிபால் நீரேற்று உலகளந்த பெருமான் தங்குமிடம்.

பேயாழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

நம்மாழ்வார் அருளிச்செய்த

திருவிருத்தம்

தண்ணந் துழாய்வளை கொள்வது
யாமிழப் போம்;நடுவே
வண்ணந் துழாவியோர் வாடை
உலாவும்;வள் வாயலகால்
புண்ணந் துழாமே பொருநீர்த்
திருவரங் கா!அருளாய்
எண்ணம் துழாவு மிடத்துள
வோபண்டும் இன்னன்னவே? 235

பொருள்: காவிரி சூழ்ந்த திருவரங்கத்தையுடையவனே, உன்னிடம் ஈடுபட்ட நாங்கள் வளையை இழக்கின்றோம். காற்றோ, எங்கள் மாமை நிறத்தைக் கவர வந்துலாவுகின்றது. இவ்வமயம் நீ வந்து அருள் புரிதல் வேண்டும். முன்பும் இந்நிலைகள் உண்டோ?

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

நம்மாழ்வார் அருளிச்செய்த

திருவாய்மொழி

கங்குலும் பகலும் கண் துயி லறியாள்;
கண்ணநீர் கைகளா லிறைக்கும்;
'சங்குசக் கரங்கள்!' என்றுகை கூப்பும்;
'தாமரைக் கண்' என்றே தளரும்;

'எங்ஙனே தரிக்கே னுன்னைவிட்டு?' என்னும்;
இருநிலம் கைதுழா விருக்கும்;
செங்கயல் பாய்நீர்த் திருவரங் கத்தாய்!
இவள்திறத் தென்செய்கின் றாயே! 236

பொருள்: இரவும் பகலும் துயில் கொள்ளாள்; கண்ணீரைக் கைகளால் இறைப்பாள்; 'சங்கு சக்கரங்கள் இதோ!' என்று கை கூப்புவாள்; 'தாமரைக் கண்ணனே, எங்ஙனம் தரித்திருப்பேன்!' என மண்ணைத் துழாவிக்கொண்டிருப்பாள். திருவரங்கனே, இத்தகையவள்மாட்டு என்ன செய்ய நினைத்திருக்கின்றனையோ!

'என்செய்கின் றாயென் தாமரைக் கண்ணா!'
என்னுங்கண் ணீர்மல்க விருக்கும்;
'என்செய்கே னெறிநீர்த் திருவரங் கத்தாய்!'
என்னும்; வெவ் வுயிர்த்துயிர்த் துருகும்;
'முன்செய்த வினையே! முகப்படாய்,' என்னும்;
'முகில்வண்ணா! தகுவதோ?' என்னும்;
முன்செய்திவ் வுலகமுண் டுமிழ்ந் தளந்தாய்!
என்கொலோ முடிகின்ற திவட்கே? 237

பொருள்: "உலகைப் படைத்து உண்டு உமிழ்ந்து அளந்த வள்ளலான திருவரங்கனே, நீ எனக்கு எது செய்ய நினைத்திருக்கின்றாய்! யான் என் செய்வேன்! நீ என் முன் வாராதது யான் முன் செய்த பாவமோ!" எனப் பலவாறு இவள் சொல்லுகின்றாள். இவள் முடிவு என்னாகப் போகின்றதோ!

வட்கிலள் இறையும் 'மணிவண்ணா!' என்னும்
வானமே நோக்கும்; மையாக்கும்;
'உட்குடை யசுர ருயிரெல்லா முண்ட
ஒருவனே!' என்னும்; உள் ளுருகும்;

'கட்கிலீ! உன்னைக் காணுமா றருளாய்
காகுத்தா! கண்ணனே!' என்னும்;
திட்கொடி மதிள்சூழ் திருவரங் கத்தாய்!
இவள்திறத் தென்செய்திட் டாயே! 238

பொருள்: அடையவளைஞ்சான் மதிலாலே சூழப்பட்ட திருவரங்க நாதனே, என் மகளாகிய இவள் நாணத்தை முற்றும் விட்டனள்; 'மணி வண்ணனே!' என்று ஆகாசத்தை நோக்குகின்றாள்; ஆங்குக் காணுமையின், மோகிக்கின்றாள்; 'அசுரர் உயிரைக் கவர்ந்தவனே' என்கின்றாள். இவள் உன்னிடம் இத்தகைய பைத்தியங்கொள்ளுமாறு நீர் என்ன மருந்திட்டாயோ!

இட்டகா லிட்ட கையளா யிருக்கும்;
எழுந்துலாய் மயங்கும்;கை கூப்பும்;
'கட்டமே காதல்,' என்றுமூர்ச் சிக்கும்;
'கடல்வண்ணா! கடியைகாண்!' என்னும்;
'வட்டவாய் நேமி வலங்கையா!' என்னும்;
'வந்திடாய்,' என்றென்றே மயங்கும்;
சிட்டனே செழுநீர்த் திருவரங் கத்தாய்!
இவள்திறத் தென்சிந்தித் தாயே? 239

பொருள்: இம்மங்கையின் கால் கைகள் இட்ட இடத்திலேயே இருக்கும்; பின்னும் எழுந்து அஞ்சலி பண்ணுவள்; 'காதல் கஷ்டமன்றோ?' என மூர்ச்சிப்பள்; 'கடல் நிறத்தவனே, நீ கொடியன்!' என்பள்; 'ஆழியானே, வந்திடுவாய்' என்று சொல்லி மயங்குவள். வளம்பொருந்திய திருவரங்கனே! இவள் விஷயமாய் நீ என்ன சிந்தித்துக்கொண்டிருக்கிறாய்?

சிந்திக்கும்; திசைக்கும்; தேறும்;கை கூப்பும்;
'திருவரங் கத்துள்ளாய்!' என்னும்;
வந்திக்கும்; ஆங்கே மழைக்கண்ணீர் மல்க
'வந்திடாய்!' என்றென்றே மயங்கும்;

அந்திப்போ தவுண னுடலிடந் தானே,
அலைகடல் கடைந்தவா ரமுதே!
சந்தித்துன் சரணம் சார்வதே வலித்த
தையலை மையல்செய் தானே! 240

பொருள்: உன் திருவடிகளை ஆசிரயித்தலையே உறுதியாய்க் கொண்ட பெண்ணை மோகிக்கச் செய்பவனே, முன் உன்னோடு தான் கலந்திருந்ததையும், உன் அழகையும், குணங்களையும் எண்ணும்; மயங்கும்; தெளியும்; சேவிக்கும்; கண்ணீர் பெருக, "திருவரங்கனே, வாராய், வாராய்," என்று சொல்லிச் சோரும்.

'மையல்செய் தென்னை மனங்கவர்ந் தானே!'
என்னும்; 'மா மாயனே!' என்னும்;
'செய்யவாய் மணியே!' என்னும்; 'தண் புனல்சூழ்
திருவரங் கத்துள்ளாய்!' என்னும்;
'வெய்யவாள் தண்டு சங்குசக் கரம்வில்
ஏந்தும்விண் ணோர்முதல்!' என்னும்;
பைகொள்பாம் பணையாய்! இவள்திறத் தருளாய்
பாவியேன் செயற்பா லதுவே! 241

பொருள்: இம்மங்கை, "மிக்க கம்பீரமான என்னை மயக்கி என் மனத்தைக் கவர்ந்தவனே," எனபள்; "ஆச்சரியச் செயல்களையும், சிவந்த திருவதரத்தையும், பஞ்சாயுதங்களையும் உடைய திருவரங்கனே," என்பள்; நாகசயனனே, இவள் மாட்டு இன்னும் அருள் புரியாமலிருக்கின்றாய்! இதற்குப் பாவியாகிய யான் செய்ய வேண்டுவனவற்றைக் கிருபை பண்ணவேண்டும்.

'பாலதுன் பங்க ளின்பங்கள் படைத்தாய்!
பற்றிலார் பற்றநின் றானே!
காலசக் கரத்தாய்! கடலிடங் கொண்ட
கடல்வண்ணா! கண்ணனே!' என்னும்,

'சேல்கொள் தண் புனல்சூழ் திருவரங் கத்தாய்!'
என்னும்;'என் தீர்த்தனே!' என்னும்,
கோலமா மழைக்கண் பனிமல்க விருக்கும்
என்னுடைக் கோமளக் கொழுந்தே. 242

பொருள்: இளந்தளிர் போன்ற என் மகள், மழை போன்று கண்ணீர் பெருக, "இன்ப துன்பங்களை உண்டாக்கி, பற்றற்றவர் பற்ற நின்றவனே, கடல் வண்ணனே, கண்ணனே, திருவரங்கனே, என் மனத்தைத் தூய்மைப்படுத்தியவனே,' என்று அழைக்கின்றனள்.

'கொழுந்துவா னவர்கட்' கென்னும்; 'குன் றேந்தி
கோநிறை காத்தவன்!' என்னும்;
அழுந்தொழும் ஆவி யனலவெவ் வுயிர்க்கும்;
'அஞ்சன வண்ணனே!' என்னும்;
எழுந்துமேல் நோக்கி யிமைப்பில ளிருக்கும்;
'எங்ஙனே நோக்குகேன்?' னென்னும்;
செழுங்கடம் புனல்சூழ் திருவரங் கத்தாய்!
என்செய்கே னென்திரு மகட்கே! 243

பொருள்: 'நித்தியசூரிகளுக்குத் தளிர்போன்றவனே, மலையேந்திப் பசுநிரையைக் காத்தவனே' எனத் தொழுவாள்; ஆவி வேவப் பெருமூச்சு விடுவாள்; இமை கொட்டாமல் வானத்தை நோக்கி, 'எவ்வுபாயத்தால் அவனைக் காண்பேன்?' என்பாள். திருவரங்கனே, திருமகட்கு ஒப்பான இத்தகைய என் புதல்விக்கு யான் செய்வது யாதோ, அறியேன்!

'என்திரு மகள்சேர் மார்வனே!' என்னும்;
'என்னுடை யாவியே!' என்னும்;
'நின்திரு வெயிற்று ளிடந்துநீ கொண்ட
நிலமகள் கேள்வனே!' என்னும்;

'அன்றுரு வேழும் தழுவிநீ கொண்ட
ஆய்மக ளன்பனே!' என்னும்;
தென்திரு வரங்கம் கோவில்கொண் டானே!
தெளிகிலேன் முடிவிவள் தனக்கே! 244

பொருள்: 'புருஷகார பூதையான பெரிய பிராட்டி வாழும் திருமார்பையுடையவனே,' என்பள்; 'என் ஆவியே' என்பள்; 'பூமகளுக்கும் நப்பின்னைக்கும் நாயகனே' என்பள். திருவரங்க நாதனே, இவள் ஆற்றாமைக்கு முடிவு காண மாட்டாமலிருக்கிறேன்!

'முடிவிவள் தனக்கொன் றறிகிலேன்,' என்னும்;
'மூவுல காளியே!' என்னும்;
'கடிகமழ் கொன்றைச் சடையனே!' என்னும்;
'நான்முகக் கடவுளே!' என்னும்;
'வடிவுடை வானோர் தலைவனே!' என்னும்;
'வண்திருவ ரங்கனே!' என்னும்;
அடியடை யாதாள் போலிவ ளணுகி
அடைந்தனள் முகில்வண்ண னடியே. 245

பொருள்: 'இந்திரனே, உருத்திரனே, நான்முகனே, வானோர் தலைவனே' என்பாள்; 'இவர்கட்கெல்லாம் அந்தரியாமியாயிருப்பவனே' என்பாள்; 'திருவரங்கனே' என்பாள். இங்ஙனம் சொல்லி, இந்தப் பெண் தேவரீர் திருவடியை அடையாதவள்போன்று, மேக நிறமுடைய உம்முடைய தாள்களைக் கிரமத்திலே அடைகின்றாள்.

முகில்வண்ண னடியை யடைந்தருள் சூடி
உய்ந்தவன் மொய்புனல் பொருநல்
துகில்வண்ணத் தூநீர்ச் சேர்ப்பன்வண் பொழில்சூழ்
வண்குரு கூர்ச்சட கோபன்,

முகில்வண்ண னடிமேல் சொன்னசொல் மாலை
ஆயிரத் திப்பத்தும் வல்லார்,
முகில்வண்ண வானத் திமையவர் சூழ
இருப்பர்பே ரின்பவெள் ளத்தே. 246

பொருள்: தாமிர வருணியையும் திருச்சங்கத் துறையையும் சோலைகளையும் உடைய திருக்குருகூருக்குத் தலைவரான ஆழ்வார், பெரிய பெருமாள் விஷயமாய் அருளிச் செய்த ஆயிரத்துள் இப்பத்தைக் கற்றவர்கள், காளமேகம் போன்ற எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் பரமபதத்தில் நித்திய சூரிகள் சூழ ஆனந்தவாரியில் ஆழ்ந்திருப்பார்கள்.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.